Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 16+8
விலை ரூ. 60

சுடர் : 38
கதிர் : 246

ஞாயிற்றுக்கிழமை 30 ஜூலை 2023

ஆடி 14 ஆம் நாள் – வள்



# ௨௦௨௪ மார்ச் - ஏப்ரலில் ஜனாதிபதித் தேர்தல்

## 10 பில்லியன் ரூபா செலவு மதிப்பீடு

**கொழும்பு, ஜூலை 30**

**ஜனாதிபதித் தேர்தல் அடுத்த ஆண்டு மார்ச் அல்லது ஏப்ரல் மாதம் நடத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளதாகவும் இந்தத் தேர்தலுக்காக 10 பில்லியன் ரூபா செலவாகும் என்று தேர்தல்கள் திணைக்களம் மதிப்பிட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.** »15

# புதிய அரசமைப்பு சாத்தியமில்லை

## '13' இறுதித் தீர்வுமில்லை என்கிறார் ரணில்

கொழும்பு, ஜூலை 30
தற்போதைய நிலைமையில் இந்த அரசாங்கத்தால் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான வாய்ப்புகள் இல்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். »14

### தமிழ் அரசு, தமிழ்த் தேசியக் கூட்டணி

## எம்.பி.க்களுடன் இந்தியத் தூதுவர் கொழும்பில் செவ்வாயன்று சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பயணத்தை முடித்து நாடு திரும்பியுள்ள நிலையில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகிய »15

## கடலுக்குச் சென்றவரை காணோம்

முல்லை., ஜூலை 30
கடற்றொழிலுக்குச் சென்ற குடும்பத்தலைவரை கடந்த இரண்டு நாள்களாகக் காணாத நிலையில் அவரைத் தேடும் பணியில் மீனவர்கள் ஈடுபட்டுள்ளதுடன் இது தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு »15

## தாயகத்தில் தமிழினத்தின் இருப்பை 13ஆவது திருத்தமே தக்கவைக்கும்

### யாழில் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30
13ஆவது திருத்தத்தை வேண்டாம் என்று எதிர்ப்பவர்கள், எமது நிலமும் பறிபோய் இனப்பரம்பலும் மாற்றப்பட்டதன் பின் சமஷ்டியைப் பெற்று என்ன பயன்? என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் »15



## இடியன் துப்பாக்கியால் மீண்டும் பறிபோன உயிர்

வவுனியா, ஜூலை 30
ஓமந்தை, குஞ்சுக்குளத்தில் இடியன் துப்பாக்கிச்சூட்டுக்காயங்களுடன் இளைஞரின் சடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர். »15

## ஊடகவியலாளர் தரிந்து பிணையில் விடுவிப்பு

### கைதுக்கு ஊடக அமைப்புகள் கண்டனம்

கொழும்பு, ஜூலை 30
பொலிஸாரால் தாக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர பிணையில் நேற்று மாலை விடுதலை செய்யப்பட்டுள்ளார்.
கைது செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளரை பல மணித்தியாலங்களின் பின்னரே சட்ட மருத்துவ அதிகாரியிடம் பொலிஸார் நேற்று முன்னிலைப்படுத்தியிருந்தனர். »15

## டக்ளஸை ஏமாற்றிய குமுதினி!

யாழ்ப்பாணம், ஜூலை 30
குமுதினிப்படகை மக்களிடம் ஒப்படைப்பதை பெரும் நிகழ்வாக நடத்துவதற்குச் சென்ற »15

## சட்டவிரோத தையிட்டி விகாரை பிக்குவுடன் டக்ளஸ் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30
தையிட்டியில் தமிழ் மக்களின் காணிகளை ஆக்கிரமித்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளதுடன், விகாராதிபதியுடனும் சந்திப்பில் ஈடுபட்டுள்ளார். »15

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
முற்பணம்
ரூ.120,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
• அதிகபட்ச இரகசியத்தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் வங்கி

## வடக்கு - கிழக்கை இந்தியாவுடன் இணைக்குமாறு கோருவோம்

### செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு


மன்னார், ஜூலை 30
தமிழர்களுக்கான தீர்வு கிடைக்கவில்லை என்றால் வடக்கு - கிழக்கை இந்தியாவின் ஒருபகுதியாக இணைக்க வேண்டும் எனக்கோர நேரிடும் என செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது: »15

சஞ்சீவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாரின் துணையுடன் தொடர் மணல் அகழ்வுகள்

## கிளி. ஒருங்கிணைப்புக் குழுவில் பொதுஅமைப்புக்கள் சுட்டிக்காட்டு




**கிளிநொச்சி, ஜூலை 30**

**கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் சட்டவிரோத மணல் அகழ்வுகள் பொலிஸாரின் துணையுடனேயே நடக்கின்றன என்று பொது அமைப்புக்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.**

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதன்போதே இந்த விடயம் பொது அமைப்புக்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

இது தொடர்பில் பொது அமைப்புக்கள் மேலும் தெரிவித்ததாவது: மணல் அகழ்வென்பது கிளிநொச்சியில் தீர்க்கப்பட முடியாத தலைவலியாக உள்ளது. பலநூறு தடவைகள் இது தொடர்பில் மீண்டும் நாங்கள் வலியுறுத்தியுள்ள போதிலும் எந்த அதிகாரியும் காத்திரமான நடவடிக்கை எதையும் எடுத்ததாக இல்லை.

சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் பொலிஸாருக்கு அல்லது விசேட அதிரடிப்படையினருக்கு தகவல்களை வழங்கினாலும் அவர்கள் அதனைக் கண்டுகொள்வதில்லை. குறிப்பாக ஊரியான், முரசுமோட்டை, குஞ்சுப்பரந்தன், குடமுருட்டி, செருகன் ஆகிய பகுதிகளிலேயே சட்டவிரோத மணல் அகழ்வு அதிகளவில் இடம்பெறுகின்றது. எனவே கடமையிலிருந்து தவறும் பொலிஸாருக்கு அறிவுறுத்தி மணல் அகழ்வைக் கட்டுப்படுத்தவேண்டும் - என்றனர். (ம-ச,113)



## ஜப்பானிய அமைச்சர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

கொழும்பு, ஜூலை 30

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் ஹயாஷி யோஷிமாசா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுச் சனிக்கிழமை கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

ஜப்பான் வெளியுறவு அமைச்சர் ஹயாஷி யோஷிமாசாவுடன் 20 பேர் கொண்ட தூதுக்குழுவினரும் இலங்கைக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## இலங்கைக்கு வருகிறது 'கஞ்சர்' போர்க்கப்பல்!

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட குக்ரி வகை ஏவுகணை தாங்கிய போர்க்கப்பலான 'கஞ்சர்' நேற்று சனிக்கிழமை திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்தது.

'கஞ்சர்' கடற்படைக் கப்பலை இலங்கையில் வரவேற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திருகோணமலையில் கப்பல் தரித்து நிற்கும் போது இலங்கைக் கடற்படை கப்பலுடன் கடல்சார் கூட்டுப் பயிற்சியை எதிர்வரும் 31 ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், இந்தக் கப்பலை 30 ஆம் திகதியன்று பாடசாலை மாணவர்கள் மற்றும் இலங்கை மக்கள் பார்வையிடமுடியுமென இலங்கைக்கான இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது. (ம)



## நவீன கட்டடத்தைக் கொடுத்தும் மீன் வியாபாரிகளால் சீர்கேடுகள்

### காரைநகர் மக்கள் குற்றச்சாட்டு

காரைநகர் பிரதேசசபையின் நிதியுதவியில் அமைக்கப்பட்ட நவீன மீன்சந்தைக் கட்டடத்தில் வியாபாரிகள் ஒரு நாள் மாத்திரமே வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர். ஏனைய நாள்களில் ஆலடிச் சந்தியிலுள்ள தனியார் காணியிலேயே சுகாதாரச் சீர்கேட்டுடன் மீன் வியாபாரம் இடம்பெறுகிறது என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

காரைநகர் பிரதேசசபையால் காரைநகர் சக்கலாவோடையில் இந்த வருடம் ஜனவரியில் 52 இலட்சம் ரூபா பெறுமதியில் சந்தைக் கட்டடம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. ஆயினும் காரைநகர் ஆலடிச் சந்திப் பகுதியில்தனியார் காணியொன்றிலேயே சீர்கேட்டுடன் மீன்சந்தை இயங்கிவருகின்றது. காரைநகர் பிரதேச சபையோ சுகாதாரப் பிரிவினவோ இதுதொடர்பில் காத்திரமான நடவடிக்கையை முன்னெடுக்கவில்லை. ஆலடி மீன்சந்தைக்கு முன்னால் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடும் தனியார் ஒருவர், மீன்சந்தை இடமாற்றப்பட்டால் தனது வியாபாரம் பாதிக்கப்படும் என்பதாலேயே புதிய இடத்துக்கு வியாபாரத்தை மாற்றவிடாமல் செல்வாக்குச் செலுத்துகிறார் என்று மக்கள் மேலும் தெரிவித்தனர்.

இதுகுறித்து காரைநகர் பிரதேசசபை செயலாளரை தொடர்புகொண்டு கேட்டபோது, சபையின் நிதியில் சக்கலாவோடையில் நவீனமுறையில் மீன்சந்தை கட்டிக் கொடுக்கப்பட்டது. புதிய கட்டடத்தின் குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டதால் மீளவும் சபை நிதியில் குறைபாடுகள் நிவர்த்திசெய்யப்பட்டன. குறித்த சந்தைக் கட்டத் தொகுதியில் கழிவகற்றல் முகாமைத்துவம், வாகனத் தரிப்பிட வசதி என்பனவும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. புதிய சந்தைக் கட்டடத்துக்கு இடமாற்றம் செய்யுமாறுகடிதமூலம் வியாபாரிகளுக்குத் தெரிவித்துள்ளோம். ஆகவே பழைய இடத்தில் முறையற்ற விதத்தில் விற்பனைசெய்வோருக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

காரைநகர் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி கூறுகையில், பிரதேசசபைக்கும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும் இது குறித்துக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது - என்றார்.

யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரனை தொடர்பு கொண்டு கேட்டபோது, "சுகாதாரமற்ற சந்தையிலிருந்து புதிய கட்டத் தொகுதிக்கு குறித்த சந்தையை இடமாற்ற நடவடிக்கை எடுக்குமாறு பிரதேசசபைக்கு பரிந்துரைத்துள்ளோம். செயற்படுத்த வேண்டியது காரைநகர் பிரதேசசபையின் பொறுப்பாகும் - என்றார். (ச-125)

## மலையக மக்களுக்காக மன்னாரில் நினைவுத்தூபி

### மாத்தளைக்கு நடைபயணம்!

மன்னார், ஜூலை 30

மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு தலைமன்னாரில் நேற்று தூபி திறந்து வைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து மலையகத்தை நோக்கிய நடைபவனியும் ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்ப நடைபவனியில் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி பி.கிறிஸ்துநாயகம் அடிகளார், மெதடிஸ்த பேராயர் ஜெபநேசன் அடிகளார், மதத்தலைவர்கள், மலையக மக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-60)



## தரிந்து உடுவரகெதரவின் கண்களிலிருந்து இரத்தம்

### ஹிருணிகா சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூலை 30

பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ள பத்திரிகையாளர் தரிந்து உடுவரகெதரவின் கண்களில் இரத்தம் காணப்படுகின்றது என்று ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

தரிந்து உடுவரகெதர பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது, அங்கு சென்று அவரைச் சந்தித்த பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே ஹிருணிகா இவ்வாறு தெரிவித்தார்.

'ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர பொலிஸாரால் தாக்கப்பட்டுள்ளார்' என்றும் ஹிருணிகா மேலும் தெரிவித்தார். (ம)

## தரிந்தின் கைதுக்கு எதிராக பொரளையில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூலை 30

ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதரவின் கைதுக்கு எதிராகப் பொரளை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்றுச் சனிக்கிழமை காலை ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றின் திருட்டுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் கடந்த வெள்ளிக்கிழமை பொரளை பகுதியில் இடம்பெற்றபோதே ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட ஊடகவியலாளர் பொரளை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு, 17 மணித்தியாலங்களின் பின்னர் மருத்துவ



அதிகாரியிடம் அழைத்துச்செல்லப்பட்டார். இந்த நிலையில் நேற்றுக்காலை பொலிஸ் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ம.உ. ஆணைக்குழுவில் பணியாளர் பற்றாக்குறை

## ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜுலை 30**

**மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு சுமார் 11 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ள போதிலும், அவற்றுக்கு நடவடிக்கை எடுப்பதற்கு பணியாளர்கள் பற்றாக்குறையை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சந்தித்தனர். இதன்போதே அவர்கள் இந்த விடயத்தை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர். இதற்கு விரைவில்தீர்வு வழங்கப்படும் என்று ஜனாதிபதி அவர்களிடம் உறுதியளித்தார்.

இதன்போது, அரச அதிகாரிகள் மற்றும் பொலிஸாருக்கு அவசியமான வழிகாட்டல் கோவை ஒன்றை விரைவில் வழங்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கேட்டுக்கொண்ட ஜனாதிபதி, அதனூடாக ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பிலும் எடுத்துரைத்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் எல்.டீ.பி. தெஹிதெனிய மற்றும் ஏனைய உறுப்பினர்களான பேராசிரியர் தையமுத்து தனராஜ், பேராசிரியர் பாத்திமா பர்ஸானா ஹனீபா மற்றும் நிமலசேன கார்திய புஞ்சிஹேவா உள்ளிட்டவர்களும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (ம-26)



### குடத்தனைப் பாடசாலையில் நூற்றாண்டுக் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஜுலை 30

குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம் கடந்த வியாழக்கிழமை பாடசாலை அதிபர் எஸ்.ஜெயச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், முல்லைத்தீவு மாவட்டத்தின் மேலதிக மாவட்டச் செயலாளர் கே.கனகேஸ்வரன், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜோன்.குயின்ரஸ், வடமராட்சிக் கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலன், மருதங்கேணி பிரதேசசெயலர் கே.பிரபாகரமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-ரி2-27)

### மருத்துவரின் வீட்டில் நேற்றுத் தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஜுலை 30

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியில் ஓய்வுபெற்ற மருத்துவர் ஒருவரின் வீட்டில் நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார்சைக்கிளில் வந்த ஐவர் அடங்கிய குழுவே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது. வீட்டில் இருந்த உடைமைகளும் சேதமாக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் மருத்துவரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். கடந்த சில வாரங்களுக்கு முன்னரும் இந்த வீட்டின் மீது இவ்வாறானதொரு தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-26)



### மடுத் திருத்தலத்தில் இம்முறை
### வத்திக்கான் பேராயரின் பங்கேற்பில்போடு பெருவிழா!

மன்னார், ஜுலை 30

மன்னார் மடுத் திருப்பதியில் வருடாந்தத் திருவிழா இந்த முறை வத்திக்கானின் நேரடிப் பிரதிநிதியான பேராயர் உடக்வேயின் பங்கேற்பில் இடம்பெறவுள்ளது.

மடுத் திருவிழாவை முன்னிட்டு முன்னாயத்தக் கலந்துரையாடல் மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன்போதே மன்னார் ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையால் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

மடுத்திருவிழா எதிர்வரும் 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, எதிர்வரும் 15 ஆம் திகதி திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. (ச-60)

### சென்னை விமான நிலையத்தில் மயங்கி வீழ்ந்து பெண் இறப்பு!

கொழும்பு, ஜுலை 30



தமிழ்நாட்டுக்குச் சுற்றுலா சென்று யாழ்ப்பாணம் திரும்பிய பெண்ணொருவர் சென்னை விமான நிலையத்தில் மயங்கி வீழ்ந்து நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

சிவசுகந்தி (வயது-43) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. உயிரிழப்புத் தொடர்பில் சென்னை விமான நிலைய ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-100)

### சொரூபங்கள் உடைப்பு சந்தேகநபர் கைதானார்

யாழ்ப்பாணம், ஜுலை 30


யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டைப் பகுதியில் கத்தோலிக்க சொரூபங்கள் உடைக்கப்பட்ட விவகாரத்தில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஆனைக்கோட்டை உயரப்புலம் பகுதியைச் சுற்றியுள்ள சொரூபங்கள் மீது நேற்றுமுன்தினம் இரவு தாக்குதல் நடத்தப்பட்டதில் பல சொரூபங்கள் தலையிழந்து போயின. பல சொரூபங்களின் கண்ணாடிக் கூடுகள் நொருக்கப்பட்டன. இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்திய நிலையில், சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் சுதுமலையைச் சேர்ந்த 32 வயதுடைய நபர் என்று பொலிஸார் முதற்கட்ட விசாரணையின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர். திரும்ணமாகி நீண்டகாலம் ஆகின்ற நிலையில், இதுவரை குழந்தைகள் இல்லாமையால் ஏற்பட்ட விரக்தியில் இருந்ததாகவும் இதனால்தான் சொரூபங்களை உடைத்தேன் என்றும் சந்தேகநபர் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளார். சந்தேகநபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ம-26,27,125)

### அவசர பெறுகையின்கீழ் பற்சிகிச்சை மருந்துகள்!

#### சுகாதார அமைச்சு தகவல்

கொழும்பு, ஜுலை 30



பல் மருத்துவ சேவையில் தட்டுப்பாடாகவுள்ள அத்தியாவசிய மருந்துப்பொருள்களை அவசர பெறுகை முறையின் கீழ் கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பற்சிகிச்சைக்குத் தேவையான மருந்துகள் மற்றும் உபகரணங்கள் இன்மையால் மருத்துவமனைகளின் பற்சிகிச்சை மையங்கள் செயலிழந்து வருகின்றன என்று அரச பல் சத்திரசிகிச்சை மருத்துவர்களின் சங்கம் சுகாதார அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

பல் மருத்துவ சேவையை முன்னெடுக்கத் தேவையான சுமார் 270 வகை மருந்துப் பட்டியல் ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த மருந்துப் பொருள்களை விரைவாக கொள்வனவுசெய்யத் திட்டமிட்டுள்ளோம். அத்தியாவசிய மருந்துப்பொருள்கள் அவசர பெறுகை முறையின்கீழ் கொள்வனவு செய்யப்படும் - என்றார். (ச-இ)



### கசிப்புக் காய்ச்சுதலை முறியடித்த பெண் கிராம அலுவலர்!

யாழ்ப்பாணம், ஜுலை 30

யாழ்ப்பாணம் மருதங்கேணி வத்திராயன் பகுதியில் கசிப்புச் காய்ச்சும் இடத்தை அந்தப் பகுதி பெண் கிராம அலுவலர் பொலிஸாருடன் நேரடியாகச் சென்று முறியடித்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. பற்றைக்காடொன்றுக்குள் மறைத்து வைத்து கசிப்பு காய்ச்சப்படுகின்றது என்று கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பெண் கிராம அலுவலரின் செயற்பாடு அந்தப் பகுதி மக்களிடையே பாராட்டுப் பெற்றுள்ளது. (ச-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியத் தலையீட்டை விரும்பாது இலங்கை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியாவுக்கான பயணம் தொடர்பில், இந்தியாவின் முக்கியமான தேசியப் பத்திரிகைகளில் ஒன்றான 'தி ஹிந்து' பல்வேறு விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ளது. இரு நாட்டுத் தமிழர்களின் பேசப்பட வேண்டிய பிரச்சினைகள் பேசப்படாமைக்கு 'தமிழர்களின் பிரச்சினையில் இந்திய - இலங்கை உறவு பிணைக்கப்பட்டிருப்பதும் ஒரு காரணம்' என்பதாக அந்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

THE HINDU

## ரணிலின் பயணம் உணர்த்தும் செய்தி அதுதான் என்கிறது 'தி ஹிந்து'

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்புத் தொடர்பில் கூட்டாக வெளியிடப்பட்ட 'தொலைநோக்கு' அறிக்கையில் எதிர்காலத்துக்கான விரிவான திட்டங்கள் குறித்து விளக்கம் தரப்பட்டிருக்கின்றது.

ஆனாலும், விக்கிரமசிங்கவின் பயணத்தின் போது வெளியிடப்பட்ட எந்தவோர் எழுத்து மூல ஆவணத்திலும் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரங்களை பரவலாக்குவதற்கு அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக இலங்கையால் முன்னர் வழங்கப்பட்ட உறுதிமொழிகள் பற்றியோ அல்லது இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவது தொடர்பிலான பிரச்சினை குறித்தோ எதுவும் கூறப்படவில்லை என்று 'தி ஹிந்து' சுட்டிக்காட்டியுள்ளது.

பிரதமர் மோடி மாத்திரமே தனது உரையில் அதிகாரப்பரவலாக்கம் மற்றும் மாகாணசபைத் தேர்தல்களின் அவசியம் குறித்தும் இலங்கையின் தமிழ்ச் சமூகத்தின் கௌரவமும் கண்ணியமும் கொண்ட வாழ்வை உறுதிப்படுத்த வேண்டிய தேவை குறித்தும் அழுத்தமான வேண்டுகோளை விடுக்கவேண்டி ஏற்பட்டது. விக்கிரமசிங்க டில்லியில் வெளியிட்ட கருத்துகளிலோ அல்லது கூட்டு அறிக்கையிலோ இந்த முக்கியமான விடயங்கள் தொடர்பாக எதுவும் குறிப்பிடப்படாதமையே இரு தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பின் மிகப் பெரிய செய்தியாக இருக்கக்கூடும்.

புதுடில்லி மீது வேறு விவகாரங்களுக்காக இலங்கை தங்கியிருந்தாலும் கூட, இரு தரப்பு உறவுகளுக்குள் தமிழர் பிரச்சினை தொடர்பான அதன் வரலாற்று ரீதியான அக்கறைகளைக் கொண்டு வருவதை இனிமேலும் இலங்கை விரும்பப் போவதில்லை என்பது உணர்த்தப்பட்டிருக்கிறது என்றும் 'தி ஹிந்து' கூறியுள்ளது. (ம)



## சாவு ஊர்வலத்தில் பட்டாசு பற்றியெரிந்தது மயானம்!

அச்சுவேலி, ஜூலை 30

மரணச்சடங்கில் கொளுத்தப்பட்ட பட்டாசுகளால் தீப்பற்றி மயானம் எரிந்துள்ளது.

அச்சுவேலி வல்லை இந்து மயானப் பகுதியிலேயே இந்த விபரீதம் கடந்த வியாழக்கிழமை நடந்துள்ளது.

மரணச் சடங்கு இறுதி ஊர்வலமொன்று குறித்த மயானத்தை நெருங்கும்போது பட்டாசுகள் கொளுத்தப்பட்டன.

இதன்போது தீப்பொறியொன்று புற்தரையில் விழுந்தமையால் அதனைச் சுற்றியிருந்த பற்றைகள் தீ பிடித்து மயானத்தின் பெரும் பகுதிகள் சுவாலையாக எரிந்தன.

அதனையடுத்து பிரதேசசபை பணியாளர்கள் பொதுமக்கள் எனப் பலரும் இணைந்து பெரும் முயற்சியின் பின் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். (ச-ரி3-20)

## முழங்காவில் மதுசாலை மக்கள் எதிர்த்துப் போர்!

### பொலிஸார் சமரசம்

மன்னார், ஜூலை 30

முழங்காவில் பிள்ளையார் ஆலய மருகே அமைக்கப்படும் மதுபானசாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தப் பிரதேச மக்கள் ஏ-32 மன்னார் - சங்குப்பிட்டி வீதியை முடக்கி கடந்த புதன்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குடிமனைகள் அருகே மதுபானசாலை அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதேச மக்கள் பொலிஸாரூடாக கிளிநொச்சி நீதிமன்றில் வழக்குத் தொடுத்தனர். மதுபானசாலை அமைக்க முடியாது என கிளிநொச்சி நீதிமன்று உத்தரவிட்டது. தீர்ப்பை இரத்துச் செய்யக் கோரி மதுபானசாலை உரிமையாளர் நீதிமன்றில் ஆட்சேபனை செய்தார்.

அதனை ஆமோதித்த நீதிமன்று, கிளிநொச்சி நீதிமன்றத்தின் உத்தரவை இரத்துச் செய்து மதுபானசாலையை திறப்பதற்கு அனுமதி வழங்கியது.

இந்த நிலையிலேயே அந்தப் பகுதி மக்கள் வீதியை முடக்கி எதிர்ப்புத் தெரிவித்துப் போராடினர்.

போராட்ட இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் போராட்டத்தை கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

பூநகரி பிரதேச செயலாளர், பூநகரி பிரதேசசபைச் செயலாளர் மற்றும் மதுபானசாலை உரிமையாளர் ஆகியோருடன் பொலிஸார் கலந்துரையாடினர்.

அதனையடுத்து, மதுபான நிலையத்தை வேறோர் இடத்தில் அமைப்பதற்கு உரிமையாளர் உடன்பட்டுள்ளார் எனவும் மக்கள் அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ச-113)

## காரைநகர் - ஊர்காவற்றுறை படகுப்பாதை தள்ளாட்டம்!

### மூவருக்கு நீதிமன்று தண்டனை

யாழ்ப்பாணம், ஜூலை 30

காரைநகர் - ஊர்காவற்றுறை பாதையில் மது போதையில் இடம்பெற்ற மோதல்களில் கைது செய்யப்பட்ட மூவருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றால் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் - ஊர்காவற்றுறை பாதைச்சேவையை இயக்கிய வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை மதுபோதையில் இருந்ததுடன் அதில் பயணித்த அரச அலுவலர் ஒருவர் மீதும் தாக்குதல் நடத்தினார். அதனையடுத்து குறித்த நபர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

அதேவேளை கடந்த புதன்கிழமை காரைநகர் - ஊர்காவற்றுறை பாதை சேவையை மதுபோதையில் இயக்கிய பிறிதொருவரும் அவரைத் தாக்கினாரென தனியார் படகு ஓட்டுநர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டனர். மூவரையும் கடந்த வியாழக்கிழமை ஊர்காவற்றுறை நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தினர்.

இதன்போது பயணிகளைத் தாக்கிய அரச அலுவலரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறும், மதுபோதையில் சேவையில் ஈடுபட்டவரை பிணையில் விடுவித்தும், அவரைத் தாக்கியவரை 100 மணித்தியாலங்கள் சமூகசேவையில் ஈடுபடுத்துமாறும் நீதிமன்று உத்தரவிட்டது. (ச-125)



பிரான்ஸில்

## ருசியான பாண் தயாரித்த யாழ். இளைஞன் வருகை

கொழும்பு, ஜூலை 30

பிரெஞ்சுப் பாரம்பரிய சுவையான பாண் தயாரிப்புப் போட்டியில் இந்த ஆண்டுக்கான வெற்றியாளராகத் தெரிவு செய்யப்பட்ட இலங்கைத் தமிழர் கடந்த வியாழக்கிழமை இலங்கைக்கு வந்துள்ளார்.

யாழ்ப்பாணம் தெல்லிப்பழையைச் சேர்ந்த பரிஸில் வசிக்கும் தர்ஷன் செல்வராஜா என்பவரே இந்தப் போட்டியில் பங்கேற்று வெற்றிபெற்றிருந்தார்.

பிரான்சின் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனின் எலிசபெத் மாளிகையில் ஓர் ஆண்டுக்கு பாண் தயாரிக்கும் வாய்ப்பும் அவருக்கு கிட்டியது. இந்தநிலையில் இலங்கைக்கு வந்துள்ள அவர் தனது தாய் நாட்டில் பாணின் உற்பத்தி மற்றும் அதன் தனித்துவம் தொடர்பில் இளையோருக்குத் தெளிவுபடுத்துவதற்கு உரிய அதிகாரிகள் மற்றும் பொது அமைப்புகளுடன் சந்திப்புகளை மேற்கொள்வார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## வழக்கு ஆவணங்களை விழுங்கிய சட்டத்தரணி

கொழும்பு, ஜூலை 30

கெக்கிராவ மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நிலுவையில் உள்ள காணி வழக்குத் தொடர்பில் ஆவணக் காப்பகத்தில் இருந்த ஆவணங்களின் இரண்டு பிரதிகளைக் கிழித்து அழித்ததாகக் கூறப்படும் பெண் சட்டத்தரணி ஒருவரை கெக்கிராவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கெக்கிராவ மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றப் பதிவேட்டில் காணி வழக்குத் தொடர்பான கோப்பிலிருந்து இரண்டு ஆவணங்களைக் கிழித்து நீதிமன்றத்துக்குள் வாயில் மென்று அழித்துவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காப்பகத்தில் கடமையாற்றிய நீதிமன்ற அதிகாரிகள் நீதிமன்றப் பதிவாளருக்கு அறிவித்ததையடுத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# சாரணர்கள் குழுவொன்று ஜனாதிபதியுடன் சந்திப்பு!

கொழும்பு, ஜூலை 30

தென்கொரியாவில் நடைபெறவிருக்கும் 25ஆவது உலக சாரணர் ஜம்போரியில் பங்கேற்கும் சாரணர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்ததுடன், தேசியக் கொடி மற்றும் சின்னம் ஆகியவற்றையும் வழங்கி வைத்தார்.

நிகழ்வில் இலங்கை சாரணர் சங்கத்தின் தலைவர் ஸ்ரீநாத் குணரத்ன, நிறை வேற்றுக் குழு தலைவர் ரத்னசிறி பெரேரா, உட்பட சங்கத்தின் ஆணையாளர்கள் மற்றும் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். 25 ஆவது உலக சாரணர் ஜம்போரி நாளைமறுதினம் முதலாம் திகதி தென்கொரியாவில் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-26)




ONLY LAND AVAILABLE
FOR SALE
FACING BASELINE ROAD COLOMBO 5
16 PERCHES
Call: 0703 444 222
mevanseresinhe@icloud.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மக்கள் எதிர்ப்பு; பணிகள் நிறுத்தம்

# வெற்றிலைக்கேணியிலும் அளவீடு முயற்சி பிசுபிசுப்பு




யாழ்ப்பாணம், ஜூலை 30

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள தனியாருக்குச் சொந்தமான காணிகளை இலங்கை கடற்படையினருக்கென சுவீகரிப்பதற்கான நிலஅளவீட்டு நடவடிக்கை நேற்றுமுன்தினம் ஐந்தாவது நாளாகவும் மக்கள் எதிர்ப்பால் இடைநிறுத்தப்பட்டது. வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கட்டைக்காடு, உடுத்துறை, செம்பியன்பற்று ஆகிய இடங்களில் கடந்த சில தினங்களாக காணி சுவீகரிப்பு முயற்சிகள் மக்கள் எதிர்ப்பால் இடைநிறுத்தப்பட்டன.

இந்தநிலையில் வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணியில் தனியார் ஒருவருக்குச் சொந்தமான ஒன்றரைப் பரப்பு காணியை சுவீகரிப்பதற்கான நிலஅளவீட்டுப் பணிகள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டன. அரச நில அளவையாளர் ம. மகாபிர தீபன் தலைமையிலான உத்தியோகத்தர்கள் இந்த அளவீட்டுப் பணியை முன்னெடுத்தனர். காணி உரிமையாளர், கிராம மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் அளவீட்டுப் பணிக் குக் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

அதனையடுத்து காணி அளவீட்டுப் பணியை நிலஅளவைத் திணைக்களத்தினர் தற்காலிகமாக இடைநிறுத்தி திரும்பிச் சென்றனர். (ச-100)





யாழ்ப்பாணம் பொலிஸ் தலைமையகத்தின் வருடாந்த பொலிஸ் பரிசோதனை நிகழ்வு நேற்றுச் சனிக்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய மைதானத்தில் இடம்பெற்றது. யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் நிஷாந்த அதிதியாகப் பங்கேற்றார். யாழ்ப்பாணம் தலைமையகப் பொறுப்பதிகாரி தலைமையில் அணிவகுப்பு மரியாதையும் இடம்பெற்றது. (ச-26)


## தொல்லியலைப் பாதுகாத்தல் யாழ். பல்கலையில் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்.பல்கலைக்கழகத்தின் தொல்லியல்மற்றும்கலாசார சுற்றுலாத்துறை மாணவர்களுக்காக யாழ். பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வுகூடத்தில் இடம்பெற்று வந்த பயிற்சிப் பட்டறை நிறைவுற்றுள்ளது.

தொல்லியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சிவரூபி சஜிதரனின் ஒழுங்கமைப்பில் 5 நாள்களைக் கொண்டதாக இந்தப் பயிற்சிப்பட்டறை இடம்பெற்றது.

இதன்போது கலாசார சின்ன பாதுகாப்புக்கான அமெரிக்கத் தூதரக நிதியத்தின் இரசாயன பாதுகாப்பு அதிகாரி அனுசா கஸ்தூரி ஆராசிலகே தொல்லியல் சின்னங்க ளுக்கான இரசாயன பாதுகாப்புத் தொடர்பான விரிவுரைகள் மற்றும் பயிற்சிகளை வழங்கினார். பயிற்சிப்பட்டறையில் கலந்துகொண்ட மாணவர்கள் செயன்முறைரீதியாக இரசாயன பாதுகாப்பு முறைமைகளை முழுமைப்படுத்தி சான்றிதழ்களைப் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-ரி3-125)





## யாழ். ராணிக்கு வயது 1

கிளிநொச்சி, ஜூலை 30

யாழ். ராணி ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடத்தை நிறைவு செய்துள்ளது. அதனைக் கொண்டாடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை புகையிரத நிலையத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன், மேலதிக மாவட்டச் செயலர் மற்றும் புகையிரத ஊழியர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-113)

## பிரதோஷ பூசை வழிபாடு

யாழ்ப்பாணம், ஜூலை 30

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய கண்ணகியம்மன் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு மூலநட்சத்திர திருவாசக முற்றோதலும் மாலை 4.30 மணிக்கு பிரதோஷ விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெறவுள்ளன.

மாலை 5 மணிக்கு கண்ணகியம்மனுக்கு லலிதா சகஸ்கரநாம அர்ச்சனையும் இடம்பெறும் என ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ச)

## இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். பணவரவு மகிழ்ச்சி தரும்.

**இடபம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மிதுனம்:** ஆதரவு உற்சாகம் தரும். திடீர்ச் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். செலவுகள் ஏற்படக்கூடும். விநாயகரை வழிபடுவது நலம் சேர்க்கும்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் இழுபறியாக முடியும். அதிகாரிகளின் சந்திப்பும் அதனால் காரியங்களில் வெற்றியும் உண்டாகும். கவனமாகச் செல்லவும். உடல் அசதி உண்டாகும்.

**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் உண்டாகும். செலவு செய்யவேண்டி வரும். சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். கூடியவரை புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களை அனுசரித்துச் செல்லவும். பிணக்குகள் நீங்கும்.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். செலவுகளால் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். ஆனாலும், புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்து விடுவீர்கள். மகிழ்ச்சி ஏற்படும்.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். வீட்டில் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவேண்டி வரும்.

# கட்டடத் திறப்புவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 30

நாயன்மார்கட்டு பாரதி மன்றம் சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத் திறப்புவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சனசமூக நிலையத் தலைவர் த.றூபன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் பங்கேற்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன், யாழ். மாநகரசபை முன்னாள் முதல்வர் இ.ஆனோல்ட், நல்லூர்ப் பிரதேச செயலாளர் எழிலரசி அன்ரன் யோகநாயகம், யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## இருதலைக்கொள்ளி எறும்பாக...

இலங்கையின் அம்பாந்தோட்டையை தனது கேந்திர முக்கியத்துவம்மிக்க கடற்படைத்தளமாக மாற்றுவதற்கான, அத்தனை முன்னெடுப்புக்களையும் சீனா போர்க்கால அடிப்படையில் ஆரம்பித்திருக்கின்றது என்று அபாயச் சங்கை ஊதுகின்றது அமெரிக்காவின் வெர்ஜினியப் பல்கலைக்கழகம். உலகப் பொருளாதாரத்தின் மறைமுகத் தாக்கங்களை அந்தப் பல்கலைக்கழகத்தின் கடந்தகால அறிக்கைகள் காலக்கண்ணாடியாகக் கட்டியம் செய்திருக்கின்றன. எனவே, இலங்கை தொடர்பில் வெர்ஜினியப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள இந்த அறிக்கை உண்மையில் ஓர் ஆபத்தம்சமே. ஏனெனில் இந்தக் கடற்படைத்தளம் சீனாவின் கடற்படையைப் பலம்மிக்கதாக மாற்றுகின்றதோ இல்லையோ இலங்கையின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் புள்ளியாக மாறிவிடும். ஆலைவாய் கரும்பாக பிராந்தியப் பதற்றத்துக்குள் இலங்கை நெருக்கப்பட அத்தனை ஏது நிலைகளையும் இந்தக் கடற்படைத்தளம் ஏற்படுத்தும்.


வரலாறு காணாத பொருளாதார நெருக்கடிக்குள்ளும் மீண்டெழ முடியாத பொருண்மிய நலிவுநிலைக்குள்ளும் தள்ளப்பட்ட பின்னரும்கூட இலங்கை இன்று இறவாதிருக்கின்றது என்றால் அதற்குப் பிராந்திய வல்லரசான இந்தியாவின் கடனுதவிகள்தான் முதன்மைக் காரணம். அத்துடன், இலங்கைக்கு வழங்கிய கடன்களை மறுசீரமைப்புச் செய்வதற்கு பெரிதான சஞ்சலமின்றி பச்சைக்கொடி காட்டியதும் இந்தியாதான். அத்தகைய ஆபத்பாந்தவனான இந்தியாவுக்கு சீனத்தின் இந்தக் கடற்படைத்தளம் கண்களைத் துருத்தவே செய்யும். இது பிராந்தியப் பதற்றமொன்று இலங்கையை மையப்படுத்தித் தோற்றம்பெறவும் அல்லது இப்போது தணல் நிலையிலுள்ள முரண் நிலைகள் பற்றியெரியவும் காரணமாக அமையும்.

அதற்காக சீனத்தை திட்டவட்டமாகப் புறக்கணித்துவிடவும் முடியாது. ஏனெனில், இலங்கைக்கு மிதமிஞ்சிய கடன்களை வாரியிறைத்து கொழும்பை, செங்கொடியின் கீழான கடன்பிடிக்குள் சீனா கன்கச்சிதமாக வைத்திருக்கின்றது. இலங்கையில் மட்டுமல்ல உலகில் பல வறுமைநிலை நாடுகளில் சீனா இந்தத் திட்டத்தையே நடைமுறைப்படுத்துகின்றது. அதாவது, ஒரு நாடு தன் கடனைத் திரும்பச் செலுத்துவதற்குரிய இயலுமையில் உள்ளதா இல்லையா என்ற பரிசீலனைக்கு அப்பால், அந்தந்த நாடுகளுக்கு கடன்களை 'இறுக்கமான' ஒப்பந்தங்களின் வாயிலாக வாரிக் கொடுத்து கேந்திர முக்கியத்துவம் மிக்க பகுதிகளையும் பிற நாடுகளின் தேசியச் சொத்துகளையும் 'குத்தகை' என்ற பெயரில் கபளீகரம் செய்வது சீனத்துக்குக் கைவந்த கலை. இன்னும் சொல்லப்போனால், சீனாவின் 'அறிவிக்கப்படாத' வெளிவிவகாரக் கொள்கை அது. 2010ஆம் ஆண்டில் சீனா உலக நாடுகளுக்கு வழங்கிய கடன்தொகை 40 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. 2020ஆம் ஆண்டில் இந்தத் தொகை 170 பில்லியன் டொலராக உயர்ந்துள்ளது. ஒரு தசாப்தத்துக்குள் நான்கு மடங்குக்கும் அதீதமான வளர்ச்சி இது. ஏன் இவ்வாறு தாராளப் பிரபுவாக சீனா இருக்கின்றது ? என்ன அடிப்படையில் இந்தக் கடன்களை வழங்குகின்றது ? என்று புள்ளிவிவரங்களைப் பரிசீலித்தால் இந்தக் கடனுக்குப் பின்னரான ஆபத்து அம்பலமாகும். அந்தப் பரிசீலனைகளுக்குப் பின்னர்தான் வெர்ஜினியப் பல்கலைக்கழகம் இலங்கையின் பரிதாபத்துக்குரிய நிலையைப் பட்டவர்த்தனமாக்கியிருக்கின்றது.

எல்லாவற்றையும் விட, இறுதிப்போரின் போதும் அதற்கு முன்னரும்கூட இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் விடயத்தில் கொழும்புக்கு இப்போதிருக்கும் ஒரேயொரு 'வல்லாதிக்க ஆறுதல்' சீனாவின் வசமுள்ள 'வீட்டோ' அதிகாரம்தான். இலங்கை தொடர்பான வாக்கெடுப்புக்களின்போது ஐ.நா.வில் இந்தியா மதில்மேல் பூனையாக நிற்பதனாலும், வீட்டோ போன்ற உச்ச அதிகாரங்கள் இந்தியாவிடம் இல்லாதிருப்பதனாலும் சீனா இழுத்த இழுப்புக்கெல்லாம் ஆடவேண்டிய தவிர்க்க முடியாத்தனமும் இலங்கைக்கு இருக்கவே செய்கின்றது. மீனுக்குத் தலையையும், பாம்புக்கு வாலையும் காட்டும் விலாங்கு மீன் போன்று இந்தியாவிடமும் சீனாவிடமும் மாறிமாறி வேடிக்கை காட்டும் இலங்கையின் கபடத்தனம் என்றோ ஒருநாள் முற்றுப்பெற்றே தீரும். அந்த நாள்களில் இலங்கை சர்வதேசத்திடம் பகடையாக்கப்படும். அது சீனத்தாலா அல்லது இந்தியாவாலா என்பதுதான் இன்னும் தெரியாத விடயம்.

### நாளொரு நல்வார்த்தை

"புரிந்துகொள்ளாத போதும் பொறாமைப்படும்போதும் மனிதன் மற்றவனை முட்டாளாகக் கருதிவிடுகிறான்" -சோக்ரடீஸ்




# இலங்கையின் கடன்களை பிரான்ஸ் மறுசீரமைக்கும்!

## ஜனாதிபதி ரணிலிடம் மக்ரோன் உறுதி

**கொழும்பு, ஜூலை 30**

**இலங்கையின் கடன்களை பிரான்ஸ் மறுசீரமைப்பதுடன், இலங்கையின் பொருளாதார மீளெழுச்சிக்கும் உதவும் என்று பிரான்ஸின் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உறுதியளித்தார்.**



பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இலங்கைக்கு வருகை தந்தார். அவர் ஜனாதிபதி ரணிலைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன்போதே இலங்கையின் பொருளாதார மீளெழுச்சிக்கு பிரான்ஸின் ஆதரவை இம்மானுவேல் மக்ரோன் தெரியப்படுத்தியுள்ளார். சர்வதேச தொடர்புகளில் பிரான்ஸின் ஈடுபாட்டிற்கு பாராட்டுத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, காலநிலை இடர்களை மட்டுப்படுத்தல், வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு மற்றும் இந்து பசுபிக் வலயப் பிரச்சினைகள் தொடர்பில் வழங்கப்படும் ஒத்துழைப்புக்களுக்கும் மக்ரோனுக்கு நன்றி தெரிவித்தார். 'இலங்கை மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் இந்து சமுத்திரத்தின் திறந்த, விரிவான மற்றும் சுபீட்சமான பொதுவான இலக்குகளை பகிர்ந்து கொள்ளும் இரண்டு நாடுகளாகும். நாம் அதனை கொழும்பில் மீண்டும் உறுதிப்படுத்தினோம். எங்கள் 75 வருடகால இராஜதந்திர உறவுகள் எங்களின் ஒருமைப்பாட்டுக்கான வலுவான இணக்கப்பாட்டை உறுதிப்படுத்தியுள்ளது' என்று சந்திப்புத் தொடர்பில் மக்ரோன் தெரிவித்துள்ளார். (ம-26)

## மருத்துவமனைகளின் மின்நிலுவை: இரு மாதங்களில் செலுத்துவோம்!

### சுகாதார அமைச்சு உறுதியளிப்பு

கொழும்பு, ஜூலை 30

சுகாதார அமைச்சின் கட்டுப்பாட்டிலுள்ள மருத்துவமனைகளின் மின்கட்டண நிலுவைத் தொகை அடுத்த இரண்டு மாதங்களுக்குள் வழங்கப்படும் என்று சுகாதார அமைச்சு உறுதியளித்துள்ளது. சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் ரத்நாயக்க ஊடகங்களுக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு தேசிய மருத்துவமனையின் மின்சார நிலுவையைச் செலுத்துவதற்காக திறைசேரி 120 மில்லியன் ரூபாவை விடுவிக்கவுள்ளது. இந்தத் தொகை அடுத்த இரண்டு மாதங்களுக்குள் வழங்கப்படும். அதன் அடிப்படையில் மருத்துவமனைகளில் மின்சாரம் துண்டிக்கப்படமாட்டாது- என்றார். (ச-இ)

### யானைகள் தாக்கி

## ஒரே நாளில் 3 பேர் சாவு!

இலங்கையின் வெவ்வேறு இடங்களில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யானைத் தாக்குதலுக்கு இலக்காகி மூவர் உயிரிழந்துள்ளனர். மொனராகலை, பொலநறுவை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலேயே இந்தச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-22)

**நாளை**

**31.07.2023**
**திங்கட்கிழமை**
**ஆடி 15**


சுபநேரம் : 12.03 - 01.33
ராகுகாலம் : 07.33 - 09.03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் சர்வகட்சி மாநாடு

# வெறும் புஸ்வாணமே!

## ஜே.வி.பி. தெரிவிப்பு



**கொழும்பு, ஜூலை 30**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடத்திய சர்வகட்சி மாநாடு தெளிவான ஒரு புஸ்வாணம். மீண்டும், மீண்டும் நாட்டு மக்களை ஏமாற்றும் நடவடிக்கை - இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் செயலர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் மற்றும் இந்தியாவின் உதவியை இலக்கு வைத்தே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வகட்சி மாநாட்டை நடத்தியுள்ளார். இந்த மாநாடு என்பது இதற்கு முன்னர் நடத்தப்பட்ட மாநாடுகளை போன்று எந்தப் பிரயோசனமும் இல்லாத மாநாடு. இதனை அறிந்த மக்கள் விடுதலை முன்னணி அதில் பங்கேற்கவில்லை.

தமிழ் மக்கள் மற்றும் இந்தியாவின் உதவியைப் பெற்றுக்கொள்வதைத் தவிர உண்மையில் நாட்டில் அதிகாரத்தைப் பரவலாக்குவதோ, 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதே என்ற தெளிவான ஜனநாயக நோக்கம் ஜனாதிபதிக்கு இல்லை.

தனி மனிதனுக்கு சட்டங்களை உருவாக்கும் அதிகாரம் இல்லை என்று ஜனாதிபதி கூறிய போதிலும் தனி மனிதனுக்கு நாட்டின் வளங்களை விற்பனை செய்வதற்குத் தேவையான சட்டங்களைக் கொண்டு வரும் அதிகாரம் இருக்கின்றது.

நாட்டின் பிரதான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண எந்தவித அதிகாரங்களும் இல்லை எனக் கூறுவது நகைப்புக்குரிய விடயம்.

இதன் பின்னர் சர்வகட்சி மாநாடு கூட்டப்படுமாயின் முதலில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்பதை எதிர்க்கட்சிகளுக்கு தெளிவுபடுத்த வேண்டும். இதன் பின்னர் எதிர்க்கட்சிகள் தமது நிலைப்பாடுகளை முன்வைக்க முடியும் - என்றார். (ஒ-இ)

# சிறுவனை பலியெடுத்த பாதுகாப்பற்ற கிணறு

கொழும்பு, ஜூலை 30

மிடியால பண்டாரகொஸ்வத்தையில் பாதுகாப்பற்ற கிணற்றில் வீழ்ந்து 4 வயதுச் சிறுவன் ஒருவன் கடந்த புதன்கிழமை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டின் பின்புறம் வெட்டப்பட்டிருந்த பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்தே குறித்த சிறுவன் உயிரிழந்துள்ளான்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாரியபொல பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-22)

# எதிரணியைப் பிளவுபடுத்தும் ரணிலின் திட்டம் தோல்வி

## நாலக கொடஹேவா எம்.பி. தெரிவிப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடத்திய சர்வகட்சி மாநாடு முற்றிலும் தோல்வியடைந்த ஒன்று. இதன் ஊடாக எதிர்க்கட்சிகளைப் பிளவுபடுத்த அவர் எடுத்த முயற்சி தோற்றுவிட்டது என நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி நாலக கொடஹேவா தெரிவித்துள்ளார்.

சுதந்திர மக்கள் காங்கிரஸின் செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு சுதந்திர மக்கள் காங்கிரஸுக்கு விடுக்கப்பட்ட அழைப்பு சந்தேகத்துக்குரியது என்ற போதிலும் பொறுப்புக்கூறும் எதிர்க்கட்சி என்ற வகையில் மாநாட்டில் கலந்து கொண்டோம்.


எனினும் ஜனாதிபதி செய்வது பொய் என்பது சர்வகட்சி மாநாட்டின் மூலம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது.

சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொண்ட அனைத்து எதிர்க்கட்சிகளும், அதிகாரத்தை பரவலாக்குவதற்கு முன்னர் மாகாணசபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தன.

இதனால், மாநாட்டை நிறைவு செய்துவிட்டு ஜனாதிபதி எழுந்து செல்ல நேரிட்டுள்ளது - என்றார். (ஒ-இ)

# களனி பல்கலைக்கழகத்துக்கு துணைவேந்தர் நியமிப்பு

## தெரிவில் முதலாமிடம் பெற்றவரையே ஜனாதிபதி நியமித்துள்ளார்





கொழும்பு, ஜூலை 30

களனி பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகத் தற்போதைய துணைவேந்தர் மூத்த பேராசிரியர் நிலாந்தி ரேணுகா டீ சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட் 24ஆம் திகதி முதல் அடுத்துவரும் மூன்று ஆண்டுகளுக்குச் செயற்படும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நேற்றுமுன்தினம் மாலை இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர் நியமனத்துக்கென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் இந்த வருட ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய சுற்றறிக்கைக்கு அமைய நடத்தப்பட்ட தெரிவில் மூத்த பேராசிரியர் நிலாந்தி ரேணுகா டீ சில்வா முதனிலை பெற்ற அடிப்படையில், களனி பல்கலைக்கழகப் பேரவையால் அவரது பெயர் ஜனாதிபதியின் தெரிவுக்காக முன்மொழியப்பட்டிருந்தது.

அதேபோல, சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் வெற்றிடமாகவிருந்த துணைவேந்தர் பதவிக்காக நடத்தப்பட்ட தெரிவிலும் முதனிலை பெற்றிருந்த உயர் பட்டக் கற்கைகள் பீடாதிபதி மூத்த பேராசிரியர் பத்மலால் எம்.மானகே கடந்த 26ஆம் திகதி முதல் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் மூன்று வருட காலத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்பட்டிருந்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவின் பதவிக் காலம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், கடந்த 12ஆம் திகதி துணைவேந்தர் தெரிவுக்கான விசேட பேரவைக் கூட்டம் நடத்தப்பட்டு பேரவையால் மூவரது பெயர்கள் ஜனாதிபதிக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

அதில் சிறிசற்குணராஜாவே முதனிலையில் பரிந்துரைக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

## 'லைசென்ஸ்' அச்சிடல்

# பணியைப் பொறுப்பேற்கும் மோ.போ.திணைக்களம்!

கொழும்பு, ஜூலை 30

சாரதி அனுமதிப்பத்திரம் அச்சிடும் பணியை தற்போதுவரை இராணுவமே செய்துவரும் நிலையில் எதிர்வரும் செப்ரெம்பர் முதல் அந்தப் பணியை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் பொறுப்பேற்கவுள்ளது.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களப் பணிப்பாளர் நிஷாந்த அநுருத்த வீரதுங்க இதுதொடர்பில் கூறுகையில்,

ஜனாதிபதி கோத்தாபய ஆட்சிக்காலத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் அச்சிடும் பணி அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த நிலையில் தற்போது தினமும் ஆயிரத்து 500 - இரண்டாயிரம் வரையான சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பங்கள் கிடைத்து வருகின்றன.

தேங்கியுள்ள விண்ணப்பங்களை பூர்த்தியாக்கும் பொருட்டு தற்போது தினமும் மூவாயிரம் - 3 ஆயிரத்து 500 வரையான சாரதி அனுமதிப்பத்திரங்கள் அச்சிடப்படுகின்றன.

தினமும் 4 ஆயிரம் சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடக்கூடிய வசதி மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திடம் உள்ளது.

அவசரமாக வெளிநாடு செல்பவர்களின் தேவை கருதி 500 சாரதி அனுமதிப்பத்திரங்கள் அச்சிடப்படும்.

அந்தவகையில் செப்ரெம்பர் முதல் சாரதி அனுமதிப்பத்திரம் அச்சிடும் பணியை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் பொறுப்பேற்கவுள்ளது - என்றார். (ச-6)

# கால்வாயில் மிதந்துவந்த இளைஞரின் சடலம் மீட்பு

கால்வாயில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். வத்தளை - பள்ளியாவத்தையிலுள்ள கால்வாயிலிருந்தே குறித்த சடலம் கடந்த வியாழக்கிழமை மீட்கப்பட்டது. சடலம் கால்வாயில் மிதந்து வந்த போது பொதுமக்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கிய நிலையில் சடலத்தை பொலிஸார் மீட்டனர்.

சடலம் அடையாளம் காணப்படவில்லை என்றும் மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூகோளம் இப்போது கொதிக்கும் நிலை!

## ஐ.நா. பொதுச்செயலர் கவலை

**வொஷிங்டன், ஜூலை 30**

**பூகோள வெப்பமடைதல் என்ற நிலையிலிருந்து 'பூகோளம் கொதிக்கும் நிலை' என்ற கட்டத்துக்கு உலகம் மாறியுள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலர் அன்ரோனியோ குட்டரஸ் தெரிவித்தார்.**



கடந்த ஒரு லட்சம் ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இந்த மாதம் பூமியின் வெப்பநிலை அதிகரித்துப் பதிவாகியுள்ளது. ஐரோப்பிய நாடுகளில் வெப்ப அலைகளின் தாக்கம் அதிகரித்துள்ளன. இந்த நிலையிலேயே குட்டரஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: 'உலக வளிமண்டலவியல் ஸ்தாபனமும் ஐரோப்பிய ஆணைக்குழுவின் கொப்பர்னிக்கஸ் காலநிலை மாற்ற சேவையும் புதிய தரவுகளை வெளியிடுகின்றன. மனிதகுல வரலாற்றில் இந்த ஜூலை மாதமே உச்ச வெப்பநிலை மாதமாகப் பதிவாகியுள்ளது. அதிக வெப்பமான 3 வார காலம் இந்த ஜூலையில் பதிவாகியுள்ளது. வட அமெரிக்கா, ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பாவின் பெரும்பகுதியிலும் முழுக் கிரகத்திலும் இது கொடூரமான கோடைப் பருவமாகும். இது ஒரு பேரழிவு. மனிதர்களே இதற்குக் காரணம். இவை அனைத்தும் எதிர்வுகூறல்களுக்கும், தொடர்ச்சியான எச்சரிக்கைகளுக்கும் இணக்கமாக உள்ளன.

இந்த மாற்றத்தின் வேகம் மாத்திரமே வியப்பளிக்கிறது. காலநிலை மாற்றம் வந்துவிட்டது. இது திகிலூட்டுகிறது. இது இப்போதுதான் ஆரம்பிக்கிறது. பூகோள வெப்பமடைதல் யுகம் முடிந்துவிட்டது. பூகோள கொதித்தல் யுகம் வந்துவிட்டது. வளியைச் சுவாசிக்க முடியவில்லை. வெப்பம் சகித்துக்கொள்ளப்பட முடியாதுள்ளது' - என்றார். (ம)

# மோ. சைக்கிளை செலுத்திய மாணவர்கள் இருவர் சாவு!

மொனராகலை, ஜூலை 30

மோட்டார் சைக்கிளை செலுத்திய பாடசாலை மாணவர்கள் இருவர் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளனர்.

மொனராகலை - தம்பகல்ல பகுதியில் கடந்த வியாழக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றது.

மாணவர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்தில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

16 வயதுடைய மாணவர்கள் இருவரே உயிரிழந்துள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-ரி3-22)

# அங்கொட ஆஸ்பத்திரியில் நோயாளி மர்ம உயிரிழப்பு!

## உண்மை மறைக்கப்படுகிறது உறவினர்கள் குற்றச்சாட்டு



முல்லேரியா, ஜூலை 30

அங்கொட தேசிய மனநல மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் உண்மையை மூடி மறைப்பதாக உறவினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். அங்கொட மனநல மருத்துவமனையில் கடந்த 20ஆம் திகதி முதல் குறித்த நபர் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

குளியலறையில் வழுக்கி விழுந்து தலையில் அடிபட்டதால் அவர் உயிரிழந்ததாக மருத்துவமனை நிர்வாகம் கூறியது.

உயிரிழப்புத் தொடர்பில் சந்தேகமடைந்த உறவினர் முல்லேரிய பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் ஆயுதங்களால் தாக்கப்பட்டமையால் உயிரிழந்துள்ளாரென பிரேத பரிசோதனையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த விடயம் தொடர்பில், தேசிய மனநல மருத்துவமனைப் பணிப்பாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, "சுகாதார அமைச்சின் அனுமதியின்றி எந்தக் கருத்துக்களையும் வெளியிட முடியாது" என்று பதிலளிக்கப்பட்டுள்ளது. (ச-ரி3-22)

# வயோதிபத் தம்பதியினர் வெட்டிப்படுகொலை!

கொழும்பு, ஜூலை 30

வயோதிபத் தம்பதியினர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் காலி இக்கடுவை பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

பிள்ளைகள் இல்லாத இவர்கள் இருவரும் வீட்டில் இருந்த வேளை கூரிய ஆயுதங்களால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 72 வயதுடைய கணவனும், 68 வயதுடைய மனைவியும் வீட்டிலிருந்து கடந்த புதன்கிழமை மாலை 6 மணியளவில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களின் வீட்டுக்கு அயல்வீட்டுக்காரர் ஒருவர் சென்றுள்ளார். அப்போது அவர்கள் இருவரும் குருதி வெள்ளத்தில் சடலங்களாகக் கிடந்துள்ளனர்.

பொலிஸாருக்கு உடனடியாகத் தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து அங்கு விரைந்த பொலிஸார், இருவரின் சடலங்களையும் மீட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மருத்துவமனையில் ஒப்படைத்துள்ளனர்.

வயோதிபத்தம்பதியினரின் வீட்டுக்கு கடந்த புதன்கிழமை மாலை 4 மணியளவில் ஓட்டோ ஒன்றில் இனந்தெரியாத நபர்கள் சென்றிருந்தார்கள் என்று அயல்வீட்டுக்காரர்கள் இருவர் பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்கியுள்ளனர். கொலையாளிகளைக் கைது செய்வதற்கான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-22)

# பெண்களை மதிக்கக் கற்றுக் கொடுத்தால் குடும்ப வன்முறை குறையும்

## தென்மராட்சிப் பிரதேசசெயலர் சுட்டிக்காட்டு

பெண்கள் மீதான வன்முறைகள் தற்போது நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளுக்கு குடும்பத்தில் - சமூகத்தில் எப்படிப் பெண்களை மதிக்க வேண்டும் எவ்வாறு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கற்றுக்கொடுத்தாலே சமூகத்தில் இன்னும் நிறைய முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். - இவ்வாறு கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி பிரதேசசபையில் ஆடிப்பிறப்பன்று இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெண்கள் அதிகளவில் துஷ்பிரயோகத்துக்குள்ளாகுபவர்களாக உரிமைகள் மறுக்கப்படுகின்றவர்களாக தினமும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

பெரிய சாதனைகளைப் பெண்கள் நிலைநாட்டி இந்தச் சமூகத்தை வழிப்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். சமூகத்தில் பெரிய பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியவர்களாக பெண்கள் காணப்படுகின்றனர். பெண் படித்தால் அடுத்த தலைமுறை வளரும்.

ஒரு பெண்ணுக்கு இந்தக் கல்வியைக் கொடுப்பதன் மூலம் இந்தச் சமூகத்தையே மாற்றத்துக்கு உள்ளாக்கலாம்.

முன்னேற்றங்கள் பல ஏற்பட்டாலும் காலங்காலமாக பெண்கள் குறிப்பிட்ட பல விடயங்களை செய்வதில் ஏற்றுக்கொள்ளாத சமூகம் இன்றும் காணப்படுகிறது.

இதிலிருந்து மீள்வதற்கு குழந்தைகளை வளர்க்கும்போது ஏனைய சகோதரிகளை, பெண்களை எப்படி மதிக்க வேண்டும், அவர்களுக்கான சுதந்திரம், சவால்கள் என்பவற்றை கற்றுக்கொடுக்க வேண்டும். அதன் மூலம் சமூகத்தில் இன்னும் இன்னும் நிறைய முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம் - என்றார். (ச-159)

# உலகின் உயரமான 'பங்கீ ஜம்பிக்' தலமாக தாமரைக் கோபுரம்!

கொழும்பு, ஜூலை 30

கொழும்பு தாமரைக் கோபுரத்தில் இந்த ஆண்டு டிசெம்பர் மாதத்துக்குள் சாகச விளையாட்டான 'பங்கீ ஜம்பிக்' விளையாட்டு அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்று முகாமைத்துவ தலைவர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார். இதனை அமைப்பதற்கு சிங்கப்பூர் நிறுவனமொன்று இலங்கையுடன் கைச்சாத்திட்டுள்ளது. அதற்கமைய உலகின் மிக உயரமான 'பங்கீ ஜம்பிக்' தலமாக தாமரைக்கோபுரம் அமையும். இந்தத் திட்டத்தை முதலில் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டிருந்த நிலையில் சில மேம்படுத்தல்களால் பிற்போடப்பட்டன.

எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் இந்த 'பங்கீ ஜம்பிக்' அறிமுகம் செய்யப்பட்டு இலங்கையின் சுற்றுலாத் துறையை சர்வதேச அளவில் மேம்படுத்தப்படும் என கோபுர நிர்வாகம் மேலும் குறிப்பிட்டது. (ச-இ)

# தலைக்கவசத்தால் தாக்கப்பட்ட குடும்பத் தலைவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 30

தலைக்கவசத்தால் தாக்கப்பட்ட குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நுவரெலியா கந்தப்பளையில் கடந்த 25ஆம் திகதி இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


கந்தப்பளையைச் சேர்ந்த 46 வயதுடைய நபரே இதன்போது சாவடைந்துள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

உயிரிழந்த நபரின் சகோதரரின் இரண்டு மகன்களே மதுபோதையில் வந்து தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய குறித்த இருவரையும் கைது செய்வதற்குப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-22)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



பிறப்பு 05.06.1954 இறப்பு 26.07.2023

### செல்லத்துரை பாக்கியநாதன்

வாரிவளவு காரைநகரை பிறப்பிடமாகவும் சுதுமலை மேற்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பாக்கியநாதன் கடந்த (26.07.2023) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை அன்னபூரணம் தம்பதியரின் புதல்வனும். காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும். நந்தினியின் அன்புக் கணவரும். சஞ்சயன் (கண்ணா). வினோபா. துஷ்ஜந்தன். ரிஷிகேசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும். பத்மநாதன். ஞானப்பிரகாசம். சிதம்பரநாதன் (குஞ்சன்). சற்குணராசா (ராசன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும். தபோதினி. நளாயினி. பானுமதி. திரு ஆகியோரின் பாசமிகு மைத்துனனும். குகனின் அன்பு மாமனும் விகாஸின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தெற்கு அமெரிக்காவிலுள்ள சில்லிநகரில் இன்று (30.07.2023) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பரமநாதன் நளாயினி குடும்பம்
இல. 120, யாழ் வீதி, மானிப்பாய்.
077 968 0115
(cs 25722) (N.1)

## விற்பனைக்குண்டு

நாய்க்கூடு. குருவிக்கூடு விற்பனைக்குண்டு.
076 682 9867

## வேலைக்கு ஆட்கள் தேவை

நல்லூரில் இயங்கும் நிறுவனமொன்றிற்கு **விற்பனைப் பிரதிநிதி** (Sales Girl) தேவை. (பெண்கள் விரும்பத்தக்கது)
(cs 25723) (N.1)
077 711 0869

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கிவரும் உணவகமொன்றிற்கு அப்பம். ரொட்டி வேலை. சிற்றுண்டி வகைகள். மதிய. இரவு போசனம் போன்ற வேலைகள் தெரிந்த வேலையாட்கள் தேவை.
(முழுநேரம் . தங்குமிட வசதி உண்டு)
077 567 0041

## சிறுநீரகம் தேவை

33 வயதுடைய A+, O+ குருதி வகையைச் சேர்ந்த நபரொருவருக்கு சிறுநீரகம் தேவை

தொடர்பு: 077 935 2393
077 646 4328

தரமான பொருட்களை நியாயமான விலைகளில் உங்களுக்குத்தருவதில் என்றும் முன்னணியில் திகழ்வது....

## உழவர் அரிசிக்கடை மலிவு விற்பனை

உழவர் - ஆட்டக்காரி
அரிசி 10 கிலோ வாங்குவோர்க்கு 1 கிலோ அரிசி இலவசம்
(cs 25724) (N.1)

உழவர் அரிசிக்கடை மருதனார்மடம்
(சந்தை உப்பக்கத்தில்)
Open Daily: 06.00 - 15:00

## காவலாளி தேவை

யாழ்ப்பாணத்தில் இருக்கும் காணி ஒன்றிற்கு காவலாளி தேவை.
070 714 8691

## மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு (உபரப்பு)

- இடம்: யாழ்ப்பாணம் சிவப்பிரகாசம் வீதி
- 2500 சதுர அடி
- 6 அறைகள்
- 3 அற்றாச் பாத்ரூம்
- K.K.S வீதி - 300m, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - 800m

தொடர்பு: 077 104 8865

## வேலையாள் ஒருவர் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள சிறிய உணவகம் ஒன்றிற்கு வெயிட்டர் (உணவு பரிமாறுபவர்) தேவை. உணவு, தங்குமிடம், சம்பளம் தகுதிக்கு ஏற்ப 30,000 - 39,000 வரை வழங்கப்படும். 18 வயது தொடக்கம் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு: 076 722 7047

## புனித அன்னாளுக்கு இன்று திருவிழா!

யாழ்., ஜூலை 30
வலித்தூண்டல் புனித அன்னம்மாள் ஆலயத்தில் இன்று காலை திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. திருவிழா வழிபாடுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமான நிலையில், இன்றையதினம் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.
(ம)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர்
செல்வி தி. இந்துரேகா
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி திருநாவுக்கரசு கமலாம்பிகை**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**கல்லூரிச் சமூகம்,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**
(CS/25705) AH-1

# UNIVERSITY OF PROFESSIONAL STUDIES THIRUNELVELY JAFFNA

## ANNUAL RESEARCH CONFERENCE- 2023

### Impact of Artificial Intelligence in Knowledge Management

### 20th August 2023



**CONFERENCE TRACKS**

**TRACK 1**
Information & Communication Technology

**TRACK 2**
Impacts of Artificial Intelligence

**TRACK 3**
Social & Economic Impacts of Artificial Intelligence

**TRACK 4**
Artificial Neural Networks

**TRACK 5**
Artificial Intelligence in Arts, Commerce, Science & Technology .
Both abstracts and extended abstracts should be submitted together

**DETAILS OF SUBMISSION**

- Submission of abstracts and extended abstracts: 03rd August 2023
- Notification of review decision: 5th August 2023
- Deadline for submission of revised abstracts and extended abstracts: 10th August 2023
- Registration: 15th August 2023
- Conference: 20th August 2023

**Abstracts and extended abstracts should be sent to : universityups@gmail.com**

**GUIDELINES FOR AUTHORS:**

Abstract – 500 words
Extended Abstract – 1500 words
Medium : English
Font Type and Size: Times New Roman and 12
Five (05) Key Words

**REGISTRATION FEE:**


Sri Lankan : LKR 3000/=
Foreign : USD 50

Email : Universityups@gmail.com
Contact No: 0776191154 /0772853525 / 0774652439/ 0713690666/0766852529
Address : "Mangos", Ramanathan Road, Thirunelvely, Jaffna

பாடசாலை மாணவர்களுக்கு விசேட கட்டண சலுகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்.



### அமரர் தம்பிப்பிள்ளை கணபதிப்பிள்ளை

கடந்த 30.06.2023 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும், அஞ்சலி ஆறுதல் தெரிவித்த மற்றும் இறுதிச்சடங்கில் நேரில் கலந்து கொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (30.07.2023) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் அச்சுவேலி இல்லத்தில் நடைபெறும். 11.30 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து கொள்வதுடன் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீ விக்கினேஸ்வரா வீதி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. குடும்பத்தினர்.

(CS 12341/36)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 13 . 10 . 1968



மறைவு 30 . 06 . 2023

### அமரர் அருளம்பலம் குகதாஸ் ( A.M தாஸ்)

( Building Constructor - Abdulsaheb Alfardan Construction- Bahrain)

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்
மண் விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கி சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கன காலம் இருப்பீர்கள்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நாம் துயருற்றிருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும், RIP BOOK மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மலர்வளையம், மலர்மாலை சாத்தியவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தகவல்:
குடும்பத்தினர்.
வேலணை.

(CS 1234)(36)

## மரண அறிவித்தல்

மலர்வு 29 . 08 . 1940



உதிர்வு 28 . 07 . 2023

### நடேசு நாகரத்தினம்

அம்பனை சுன்னாகம் மேற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நடேசு நாகரத்தினம் நேற்றுமுன்தினம் (28.07.2023) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் சின்னாச்சி தம்பதியினரின் அன்பு மகளும், கந்தையா சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், அமரர் நடேசுவின் அன்பு மனைவியும், சுரேஷ், சுமதி, கௌசலா, அமரர் கவிதா மற்றும் றமேஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயகௌரி, நவநீதன், சுவேதா ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆத்மிகா, அச்சுதன், கோபிதன், ஹரிணி, சுசஞ்சலிபியூமிகா, கேசினி, சுருதிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான பூரணம், செல்லத்துரை மற்றும் ஐயாத்துரை, யோகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடலானது தகனத்திற்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 773 4102

## மரண அறிவித்தல்

மலர்வு 04 . 08 . 1943



உதிர்வு 28 . 07 . 2023

### திரு. காசிலிங்கம் செல்லத்துரை

(ஓய்வுநிலை அஞ்சல் அத்தியட்சகர் - முல்லைத்தீவு மாவட்டம்)

இடைக்காடு அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரு. காசிலிங்கம் செல்லத்துரை நேற்றுமுன்தினம் (28.07.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசிலிங்கம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகசபை - பாறுபதி தம்பதிகளின் மருமகனும், தெய்வானையின் அன்புக் கணவரும், நாகநந்தினி (கனடா), செல்வவேல் (ஆசிரியர் - யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம்), இரத்தினவேல் (Quantity Surveying - கனடா), நாகசொரூபி, செந்தில்வேல் (Quantity Surveying - நெதர்லாந்து), நாகநளினி (Quantity Surveying) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விக்கினேஸ்வரன், சுதானி, கிருத்திகா, குணாகரன், லாவண்யா, நிரஞ்சன் ஆகியோரின் மாமனாரும், கிஷான், விஷாலினி, சரன், ஜதுஷா, அபிசங்கா, சந்தோஷ், மிதுன், சர்வின், ரேணுகாந், கிருஷன், கிருத்திகன், வருண், வைஷாலினி, மாதுமை ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.07.2023) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாமித்திடல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை வீதி,
இடைக்காடு, அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/25726)AH-1

077 210 5354, 077 329 2719

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சி நெறியுடனான வேலைவாய்ப்பு

திருநெல்வேலியில் அமைந்துள்ள பல்வைத்தியசாலைக்கு பகுதிநேர / முழுநேர வேலைவாய்ப்பு.

**தகைமை - O/L சித்தியடைந்திருத்தல்.**

**077 356 5155** (CS/51458) AH-1

## யா/ இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

**காலம் :-**
13.08.2023 ஞாயிற்றுக்கிழமை

**நேரம் :-**
காலை 10.00 மணிக்கு

**இடம் :-**
ஏழூர் மண்டபத்தில் நடைபெறும். அனைத்துப் பழைய மாணவர்களையும் அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

**- பழைய மாணவசங்கம் -**

(CS/51456)AH-1

## Technical Officer (TO) தேவை



யாழ். நகரில் இயங்கும் பிரபல தனியார் நிறுவனத்திற்கு முன் அனுபவமும், திறமையும் உள்ள Technical Officer (தொழில்நுட்ப அதிகாரி) தேவை.

சம்பளம்:
நேரில் பேசித் தீர்மானிக்கப் படும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையை கீழ் காணும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**E-Mail:**
**mmslanka@gmail.com**

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம் பருத்தித்துறையில் இயங்கிவரும் பிரபல Hotle ஒன்றிற்கு தங்கியிருந்து வேலை பார்ப்பதற்கு கணக்காளர் மற்றும் உதவியாளர்கள் தேவை.

தொடர்பு : **077 023 22 89**

## வீடு விற்பனைக்கு

வெள்ளவத்தையில் காலி வீதிக்கு அருகாமையில் 3 Bedroom Apartment 1150 sq ft. 3 வருட தவணைக் கட்டண முறையில் மாதம் 1000,000 /=படி உடனடி விற்பனைக்கு உண்டு.

தரகர் வேண்டாம் **076 05 89 822**

## வேலையாள் தேவை

நல்லூரில் அமைந்துள்ள பூங்கன்று விற்பனை நிலையம் ஒன்றுக்கு பராமரிக்கக் கூடிய ஆண் ஒருவர் தேவை. நல்ல சம்பளம் வழங்கப்படும்.

**076 381 0939**
**077 836 2408** CS/514 AH-1

## விற்பனைக்கு

பட்டா வான், இசூசு லொறி விற்பனைக்குண்டு.

**077 77 22215** (CS/25642) AH-1

## தேவை

**எங்கள் பலசரக்குக் கடைக்கு ஆண் உதவியாளர்கள் தேவை.**
மாதத்துக்கு **30,000 ரூபா** சம்பளம் வழங்கப் படும். உணவும். தங்குமிடமும் வழங்கப்படும்.

**S.A.W & Sons, Hambantota**
**077 480 3379** (CS/51459) AH-1

## வேலையாள் தேவை

நல்லூரில் அமைந்துள்ள விற்பனை நிலையம் ஒன்றுக்கு வெல்டிங் வேலை தெரிந்த ஆண் ஒருவர் தேவை. நல்ல சம்பளம் வழங்கப்படும்.

**076 381 0939**
**077 836 2408** (CS/51460)AH-1

## விபத்தில் காயம்

வவுனியா, பூந்தோட்டம் குடியிருப்பு வீதியில் நேற்று இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளதுடன், மோட்டார் சைக்கிளும் பெரும் சேதமடைந்துள்ளது. பூந்தோட்டத்திலிருந்து வவுனியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஹைஏஸ் வாகனத்துடன் எதிரே வந்துகொண்டிருந்த மோட்டார்சைக்கிள் மோதியதில் விபத்து இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் காயமடைந்துள்ளார்.

(ஓ.110)

## வேலையாட்கள் தேவை

கொழும்பில் உள்ள டிஷ் Antenna மற்றும் கேபிள் டிவி உதிரிப்பாக விற்பனை மற்றும் INSTALLATION /REPAIR செய்யும் கடைக்கு
** டிஷ் Antenna பொருத்துதல் மற்றும் REPAIR செய்ய கூடிய TECHNICIAN.
** எலெக்ரோனிக்ஸ் பொருட்கள் விற்பனையில் அனுபவமுள்ள விற்பனையாளர்.
** வியாபாரம் மற்றும் வேலையாட்களை நிர்வகிக்க கூடிய பொறுப்பாளர்.
ஆகியோர் தேவை.

திறமைக்கும் அனுபவத்திற்கும் ஏற்ப சம்பளம் மற்றும் உணவு தங்குமிடம் கிடைக்கும் தொடர்புகொள்ளவும். (cs51453) (N.1)

**ராஜன் - 077 771 0785**

## பணியாளர்கள் தேவை

**226, Main Street Jaffna** இல் இயங்கி வருகின்ற **VV Mart Food City** இற்கு உடனடியாகப் பணியாளர்கள் தேவை.

- **Accounting Clerk** (A/L இல் Commerce **படித்தவர்கள் விரும்பத்தக்கது)**
- **Sales Representative** (Full Time / Part Time)
- **Cleaning Staff.**
- **Packing Staff**

**Note: கட்டாயமாக சுய விபரக்கோவையுடன் நேரில் வருகை தரவும்.**

**077 555 2142** (CS/25707) AH-1

## வீடு, காணி விற்பனை

வவுனியா தோணிக்கல்லில் நல்ல சுற்றாடலில் ஒரு பரப்பு உறுதிக்காணியும் ஒரு பரப்புக்கு கூடுதலான உறுதிக்காணியில் பெரிய வீடும் விற்பனைக்குண்டு.

**076 322 3687** (CS/51459) AH-1

## தேவை

**எங்கள் பலசரக்குக் கடைக்கு ஆண் உதவியாளர்கள் தேவை.**
மாதத்துக்கு **30,000 ரூபா** சம்பளம் வழங்கப் படும். உணவும். தங்குமிடமும் வழங்கப்படும்.

**S.A.W & Sons, Hambantota**
**077 480 3379** (CS/51459) AH-1

## வேலையாள் தேவை

வவுனியா நகரத்தில் தாய் இல்லாத பெண்ணுக்குத் துணையாக இருப்பதற்கு பெண் ஊழியர் ஒருவர் தேவை.

முகவரி:- வவுனியா புகையிரத வீதி.

**070 484 5366** (CR/40308)AH-1

## ஹற்றன் நஷனல் வங்கி பீ எல் சீ

## காணியும் மாடிக்கட்டடமும் விற்பனைக்கு

**அமைவிடம் :** சாவகச்சேரி நகரில் இருந்து 3km தூரத்தில், A9 வீதியில் இருந்து 200m உள்ளே, காளி கோவில் வீதியில் செவ்வக வடிவிலான காணியும் கட்டடமும்.

**அளவு :** காணி - ஒரு பரப்பும் 17 குளியும் (வீதி முகப்பு 27 அடி நீளம்)

**கட்டடம் : கீழ்த்தளம் :** 3130 சதுர அடி

**மேல் தளம் :** 2059 சதுர அடி

**ஆடைத் தொழிற்சாலை, காட்சி அறை, களஞ்சிய அறை மற்றும் அலுவலக பாவனைக்காகப் பயன்படுத்த முடியும்.**










**அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும் :- 021 205 0346 / 021 492 3453/ 011 266 1866**

**கைத்தொலைபேசி : 077 755 3242 - (திரு. பாபுஜி), 077 248 7201 - (திரு. விருஷன்) 075 254 6936 (திரு. நிஷாந்தன்)**

**தொலைநகல்: 011 266 2820, ஈமெயில் :** recovery@hnb.lk

உங்களது கேள்விக் கோரிக்கைகளை 30.08.2023 இற்கு முன் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவும்.

**Head of Recoveries,**
**Hatton National Bank PLC,**
**Recoveries Department**
**Level 18, HNB Towers, No.479, T.B.Jayah Mawatha, Colombo 10.**



## JOIN THE LOLC WORLD

FOR A GLOBAL MINDSET

LOLC பினான்ஸ்

## WALK – IN – INTERVIEWS

சவாலான பணி சூழலில் சந்தைப்படுத்தல் பணியில் ஆர்வம் உள்ளவரா நீங்கள் உங்களுக்கான சிறந்த வாய்ப்பு எம்மிடம் இருந்து

பின்வரும் துறைகளில் வெற்றிடங்கள் உள்ளன

- SME / Auto Marketing
- Microfinance
- Recovery
- Operations / Customer Service

உங்கள் CV மற்றும் சான்றிதழ்களுடன் குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் மற்றும் நேரங்களில் கீழுள்ள கிளைகளுக்கு வரவும்

| Interview Location | Date | Time | Vacancies available in |
|---|---|---|---|
| LOLC Finance - Jaffna (Former Commercial Leasing and Finance) Address- No.231, Power House Road, Jaffna | 02nd August 2023 | 9.00am to 4.00pm | Chunnakkam, Jaffna, Mannar, Neliiady |
| LOLC Finance - Kilinochchi Address -Karandipoku, A9, Kandy Road, Kilinochchi | 3rd August 2023 | 9.00am to 4.00pm | Kilinochchi, Mullaitivu, Puthukudiyiruppu, Vavuniya |
| LOLC Finance - Puthukudiyiruppu Address - Oddisuddan Road, Puthukudiyiruppu | 4th August 2023 | 9.00am to 4.00pm | Kilinochchi, Mullaitivu, Puthukudiyiruppu, Vavuniya |

**நிதித்துறையில் முன்னணி நிதி நிறுவனங்களில் ஒன்றிணைய வாருங்கள்!**

மேற்கொண்டு திகதிகளில் கலந்து கொள்ள முடியாத விண்ணப்பதாரர்கள்

Applicants who are unable to attend on the above dates, please share your CV to


Careers@lolcfinance.com இக்கு உங்கள் CV யைப் பகிரவும்

**மேலும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்**

பிரவீன் - 0772663902 (யாழ்ப்பாணம்/மன்னார்/சுன்னாகம்/சாவகச்சேரி/நெல்லியடி)
சுதாகரன் - 0772394838 (கிளிநொச்சி/முல்லைத்தீவு/புதுக்குடியிருப்பு/வவுனியா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 11 . 04 . 1944

மறைவு 09 . 08 . 2022

### வேலுப்பிள்ளை தர்மராஜா J.P

ஓய்வு பெற்ற பொது முகாமையாளர் - பளை பலநோக்கு கூட்டுறவு சங்கம்
அளவெட்டி மல்லாகம் பல்நோக்கு கூட்டுறவுச் சங்கம் அகில இலங்கை
சமாதான நீதிவான், மத்தியஸ்தர் சபை உறுப்பினர்

**திதி : பூர்வபக்க துவாதசி 30.07.2023**

தாயாக தந்தையாக நல் ஆசானாக, தோழனாக
எமக்கு எல்லாம் நல்ல வழிகாட்டியாக
வாழ்ந்து கூட்டுறவுச் சேவையில்
தனக்கென தடம் பதித்த
பெருமகனார் - எங்கள் அப்பா!
கற்பக விநாயகரின் பாதார
கமலங்களை அடைந்து இன்று ஓராண்டு!


என்றும் உங்கள் நினைவுகளுடன்...

கற்பகப் பிள்ளையார் கோவிலடி,
இணுவில் மேற்கு, இணுவில்.

குடும்பத்தினர்.

(CR 40324) A-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 22 . 08 . 1931

மறைவு 29 . 07 . 2023

### ஐயாத்துரை சரஸ்வதி

தொட்டிலடி சங்கானையை பிறப்பிடமாகவும் வீரபத்திரர் கோவிலடி மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சரஸ்வதி நேற்று (29.07.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரவேலு - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சரவணமுத்து - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சரவணமுத்து ஐயாத்துரையின் (பல.நோ.கூ.சங்க உத்தியோகத்தர், சுன்னாகம்) பாசமிகு மனைவியும், மகாலட்சுமியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை) பாசமிகு தாயும், கந்தராஜனின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற கந்தையா, கணபதிப்பிள்ளை, செல்லம்மா, தங்கம்மா, அப்புத்துரை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மகிதாமன் (களநிலை உத்தியோகத்தர், Jaykay Marketing Services Pvt Ltd, உரிமையாளர் Maha agroserve Pvt Ltd), மயூரா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை), லக்ஸியன் (மாணவன், யா/மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2023) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பிற்பகல் 1.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வீரபத்திரர் கோவிலடி,
மல்லாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 25736) A-1

## மரண அறிவித்தல்

### சங்கரன் வெள்ளையன்



தோற்றம் : 16.11.1942 மறைவு : 28.07.2023

கைதடி வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரன் வெள்ளையன் கடந்த (28.07.2023) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரன் வள்ளி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முருகன் முதலிச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அகிலி (சிக்கம்மா) அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான வேலன், சிதம்பரம், ஆறுமுகத்தார், வீரகத்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சின்னத் தம்பி, வள்ளி ஆகியோரின் மைத்துனரும், ஜெகதீஸ்வரி, சிவசுப்பிரமணியம், ஜெகமணி, மோகனச்சந்திரன், யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷ்ணமூர்த்தி, விஜயா, கணேஸ், கஜநிதி, பிறேமளா ஆகியோரின் அன்பு மாமனும், மிதுசன், ஆதி, அங்காரகன், மரூரன், சாயகி, பவீசன், பவித்திரா, கயலினி, யாழவன், யாழீசன், யாகவி, யாதுரியன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2023) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 3.00 மணிக்கு கைதடி கிழக்கு ஊத்தல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கைதடி வடக்கு,
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 25738) I-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளை இன நெல்லே ரூ.95க்கு கொள்வனவு

## நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 30

கிளிநொச்சி மாவட்டத்தில் அடுத்த வாரம் முதல் நெல்கொள்வனவு இடம் பெறும்.

இதன்போது வெள்ளையின நெல்லையே கொள்வனவு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது என்று நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. இதன்போது 95 ரூபாவுக்கு 5 ஆயிரம் கிலோ நெல் கொள்வனவு செய்யப்படும் எனக் கூறியபோதும் இதுவரை நெல்கொள்வனவு இடம் பெறவில்லை.

அதனால் பெரும் வாழ்வாதார நெருக்கடியைச் சந்திக்கின்றோம் என விவசாயிகள் சுட்டிக்காட்டினர்.


அதற்கு, அடுத்த வாரமளவில் நெல் கொள்வனவு மேற்கொள்ளப்படும். ஆனால் வெள்ளையின நெல்லையே கொள்வனவு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

சிவப்பு இன நெல்லை கொள்வனவு செய்வதற்கு அனுமதி கிடைக்கவில்லை என்று நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்தது. (ச-113)

## பழங்குடியினரின் படுகொலைகள் ஏற்பு

# கனடாவிடமிருந்து இலங்கை பாடத்தைக் கற்க வேண்டும்!

## மனோ எம்.பி. சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூலை 30

தவறுகள், குற்றங்கள் நிகழ்ந்தன என்ற உண்மையை முதலில் நாம் ஏற்கப் பழகவேண்டும். இன,மத, நல்லிணக்கத்துக்கு அடிப்படை என்ன? என்ற பாடத்தை கனடாவிடமிருந்து இலங்கை கற்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற கனேடிய தமிழர் பேரவையின் ஊடக சந்திப்பில் கனேடியத் தூதுவர் நிகழ்த்திய உரையை மேற்கோள்காட்டி அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஆதிக்குடிகளுக்கு எதிராகக் கனடாவில் இனவழிப்பு நிகழ்ந்ததை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோமென கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஷ் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார். அதாவது தவறு, குற்றம் நிகழ்ந்ததை, அந்த நாடு பகிரங்கமாகவே ஏற்றுக் கொண்டுள்ளது. இதிலிருந்து இலங்கை பாடம் கற்கவேண்டும். வரலாற்றில் தவறுகள், குற்றங்கள் நிகழும். ஆனால் அந்தத் தவறுகள், குற்றங்கள் மீண்டும் நிகழாதிருக்க முதலில் நாம் செய்த தவறை, குற்றங்களை பகிரங்கமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இதுவே இன, மத, நல்லிணக்கத்துக்கு அடிப்படை என்ற பாடத்தைக் கனடா விளக்குகின்றது - என்றார்.

இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை என்று கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவித்திருந்த நிலையில், கனடாவில் ஆதிக்குடிகள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டனர் என்று இலங்கை நாடாளுமன்றம் வலியுறுத்த வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# கடந்தவாரம் பட்டம்பெற்ற இளம்பெண் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் நில அளவையியலாளராகக் கடந்த வாரம் பட்டம்பெற்ற இளம் பெண் ஒருவர் தவறான முடிவெடுத்து நேற்று உயிரிழந்துள்ளார்.

சற்குணரத்தினம் கௌசி (வயது-27) சுழிபுரத்தைச் சேர்ந்தவரே நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டார். வீட்டில் குடும்பத்தினருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடே உயிரிழப்புக்கான காரணம் என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ.125)


## தேவை

கல்வி ஒளிபரப்பு சம்பந்தமான Channel ஒன்றிற்கு Cameraman, Professional Camera உடன் பகுதி நேரமாக கடமையாற்ற தேவை.

071 533 1889


# லொறி - ஓட்டோ விபத்து: தந்தை, மகள் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 30

லொறியும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதியதில் தந்தையும் மகளும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கொழும்பு கடுவெல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு நடந்துள்ளது.

இந்தக் கோர விபத்தில் ஓட்டோவைச் செலுத்திச் சென்ற 48 வயதுடைய தந்தையும், அதில் பயணித்த 22 வயதுடைய மகளுமே சம்பவ இடத்திலே உயிரிழந்துள்ளனர்.

லொறியின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார், விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-22)


## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 22 . 01 . 1957



மறைவு 30 . 06 . 2023

கடந்த 30.06.2023 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் செல்லத்துரை செல்வம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (30.07.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**(இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.)**

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்தவேளையில் நேரில் வந்தும் தொலைபேசியூடாகவும் பத்திரிகை ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இன்று வரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மஞ்சத்தடி, இணுவில் கிழக்கு,
இணுவில்.

குடும்பத்தினர்.


## புதிய...

13ஆவது திருத்தம் தொடர்பிலேயே தற்போது அதிகம் பேசப்படுகின்றது. அதுதான் இறுதித் தீர்வா என்று கொழும்புச் செய்தியாளர் ஒருவர் ஜனாதிபதி ரணிலிடம் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

'13ஆம் திருத்தம்தான் இறுதித் தீர்வு என்று எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சொல்லவில்லை. தற்போதைய நிலைமையில், இந்த ஆட்சியில் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான சூழ்நிலை இல்லை. எனவே இருக்கின்ற அரசமைப்பைக்கொண்டும் அதிகாரங்களைக்கொண்டும் தற்காலிகத் தீர்வை வழங்குவதே எனது நோக்கம். தமிழ்க் கட்சிகளின் கோரிக்கைக்கு அமைவாக அதிகாரப்பகிர்வை வழங்குவதற்கு நான் சம்மதம். ஆனால், இது தொடர்பில் நாடாளுமன்றமே இறுதி முடிவு எடுக்கும்' என்றார் ரணில். (அ-ஒ.5.22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2024 மார்ச்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலை விரைவில் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தலையும் நடத்த எண்ணியுள்ளார். அரசமைப்பின் பிரகாரம் அடுத்த ஆண்டு நவம்பர் மாதத்துக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை அறிவிக்க முடியாத நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளார். அதனால் அரசமைப்புத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அவர் திட்டமிட்டுள்ளார். எதிரணிகளும் தேர்தலை நடத்துமாறு கோருவதால், சட்டத்திருத்தத்தை மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் இலகுவாக நிறைவேற்றமுடியும் என்று ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை அடுத்த ஆண்டு மார்ச் அல்லது ஏப்ரல் மாதம் நடத்தி அதிலிருந்து இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் நாடாளுமன்றத் தேர்தலையும் நடத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்பார்த்துள்ளார்.

இதேவேளை - ஜனாதிபதித் தேர்தல் செலவு தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவினரிடம் ஜனாதிபதி தெரிவித்திருந்த நிலையில் 10 பில்லியன் ரூபா வரை தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (அ-ஓ,5)

## தாயகத்தில்...

நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி. விக்னேஸ்வரன் கேள்வி எழுப்பினார்.

திருநெல்வேலியிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

13ஆவது திருத்தம் வேண்டாம். அதைக் கோருபவர்களை துரோகிகள் என்று சிலர் கூறுகின்றனர். தமிழர்களின் அபிலாஷைகளை வென்றெடுக்க ஆரம்பப் புள்ளியாக 13ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொண்டோம். தமிழ் மக்களின் நிரந்தரத் தீர்வாக அதை ஏற்கவில்லை. தற்போதைய சூழலில் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தாதுவிட்டால் தமிழ் மக்களின் இருப்புக்கூட கேள்விக்குறியாகும். வடக்கில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் தொல்லியல் மற்றும் பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் அபகரிக்கப்பட்டு வருகின்றன. நிலங்களை பெரும்பான்மையினர் வாழும் மாகாணங்களுடன் இணைக்கும் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன. மகாவலி என்ற போர்வையில் தமிழ் மக்களின் பூர்வீக வாழ்விடங்களில் சிங்களக் குடியேற்றங்கள் நிறுவப்பட்டு வரும் நிலையில் அதனைத் தடுப்பதற்கு 13ஆவது திருத்தத்தில் வழங்கப்பட்ட காணி அதிகாரத்தைப் பயன்படுத்தமுடியும்.

தமிழ் மக்கள் மற்றும் தமிழ் புத்திஜீவிகள் துறை சார்ந்த நிபுணர்கள் எனப் பலரும் நாட்டை விட்டுத் தொடர்ச்சியாக சென்றுகொண்டிருக்கும் நிலையில் தமிழ் இன விகிதாசாரம் வெகுவாகக் குறைந்து வருகிறது. இவ்வாறான நிலையில் 13 வேண்டாம் சமஷ்டி தான் வேண்டும் எனக் கேட்பவர்கள் இவ்வளவு விடயங்களும் நடந்து முடிந்த பின்னர் சமஷ்டியைப் பெற்று என்ன செய்யப் போகிறார்கள்?

#### ஜனாதிபதியுடன் சந்திப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ்க் கட்சிகளின் தலைவர்களை அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடிய நிலையில் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு கூறினோம். இறுதியாக இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டில் தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்த ஜனாதிபதி பெரும்பான்மை இனக் கட்சிகளைச் சேர்ந்த கட்சியின் தலைவர்களையும் மாநாட்டுக்காக அழைத்திருந்தார். ஒருவேளை 13ஐ குழப்புவதற்காக அழைத்தாரோ எனச் சிந்தித்தபோது நடைபெற்ற மாநாட்டில் சிலரைத் தவிர பெரும்பாலானோர் 13 தொடர்பில் சாதகமான நிலைப்பாட்டையே கொண்டிருந்தனர்.

#### குழப்பிய சுமந்திரன்

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு முன்னர் கூறிய சுமந்திரன் இறுதியாக இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டில் 13ஐ நடைமுறைப்படுத்துவதை விடுத்து மாகாணசபைத் தேர்தலை உடனடியாக வைக்குமாறு கூறினார். அதற்கு ஜி.எல்.பீரிஸும் ஆதரவாகப் பேசினார். சுமந்திரனுடைய கருத்தால் கோபமடைந்த ஜனாதிபதி ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு கருத்தைக்கூற வேண்டாம். முதலில் 13ஐ நடைமுறைப்படுத்துமாறு கூறினீர்கள், தற்போது தேர்தலைக் கேட்கிறீர்கள். முதலில் உங்களின் நிலைப்பாட்டைச் சரியாக அறிந்து வாருங்கள் என்று கூறினார்.

அன்று இரவு எனக்குத் தொலைபேசியில் அழைப்பெடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சுமந்திரன் தேர்தலை முதலில் நடத்தவேண்டும் என்கிறார் உங்களின் நிலைப்பாடு என்ன? நாங்கள் கலந்துரையாடல்களைத் தொடர்ந்து நடத்துவதா? இல்லையா? எனக் கேட்டார். நான் அவரிடம் கூறினேன், சுமந்திரனுடைய கருத்தை சாதகமாகப் பயன்படுத்தி 13ஐ நடைமுறைப்படுத்தும் விடயங்களில் இருந்து நழுவக்கூடாது எனத் தெரிவித்தேன்.' அவ்வாறு இல்லை, நாங்கள் நாடாளுமன்ற அமர்வுக்கு முன்னர் மீண்டும் பேசுவோம்' என ஜனாதிபதி தெரிவித்தார் - என்றார். (அ-ஓ,27)

## கடலுக்குச்...

செய்யப்பட்டுள்ளது. கள்ளப்பாடு தெற்கில் வசிக்கும் நவரத்தினம் சுரேந்திரன் (வயது - 39) என்பவரே கடந்த 27ஆம் திகதி முல்லைத்தீவுக் கடலில் படகில் தனியாக மீன்பிடிக்கச் சென்றுள்ளார். இந்த நிலையில் அவர் கரை திரும்பாத நிலையில், ஏனைய மீனவர்கள் தேடிச் சென்றுள்ளனர். சுரேந்திரன் சென்ற படகு கடலில் தனியாக மிதந்து கொண்டிருந்த நிலையில் அதைக் கரைக்கு கொண்டு வந்துள்ளனர்.

காணாமற்போன மீனவரைத் தேடும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. (அ-ஓ,19)

## இடியன்...

வேப்பங்குளத்தைச் சேர்ந்த ச.டிசாந் (வயது-21) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குஞ்சுக்குளத்தில் இவர் தோட்டவேலைகளில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்றுக் காலை காணிக்கு அருகில் சூட்டுக்காயங்களுடன் அவரது சடலத்தை அவதானித்த அயலவர்கள் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியிருந்தனர்.

சடலத்துக்கு அருகில் இடியன் துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது. அவர் பயணித்த மோட்டார் சைக்கிளும் அருகில் காணப்பட்டது. மோட்டார் சைக்கிள் தரப்பட்ட விதம் மற்றும் துப்பாக்கியைப் பிடித்து வைத்திருந்த விதம் என்பவற்றில் சந்தேகம் இருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வன்னியில் அண்மைக்காலமாக இடியன்துப்பாக்கியால் பலர் சூட்டுக்கொல்லப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ஓ,18,22,110)

## டக்ளஸை...

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, படகின் இயந்திரம் பழுதடைந்ததால் இடைநடுவில் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றுள்ளார்.

குமுதினிப் படகு திருத்தவேலைகள் முடிவடைந்து சகல சோதனைகளும் நிறைவுற்று மக்கள் பாவனைக்குக் கையளிக்கப்படவிருந்தது. அதற்காக படகு குறிகாட்டுவான் துறைமுகத்துக்கு நேற்றுக் கொண்டு செல்லப்பட்டது. அங்கிருந்து சேவையை ஆரம்பித்து வைப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழுவினர் சென்றனர்.

இதற்கிடையில் குமுதினிப் படகின் இயந்திரத்தில் உடைவு ஏற்பட்டுள்ளது. அதனால் சேவையைத் திட்டமிட்டவாறு ஆரம்பிக்க முடியவில்லை. இதனால் நிகழ்வுக்கு வருகை தந்த அமைச்சர் டக்ளஸ் இடைநடுவில் திரும்பிச் சென்றார்.

படகு இயந்திரம் சேதமடைந்தமை தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் குருசை தொடர்புகொண்டு கேட்டபோது;

வல்வெட்டித்துறையிலிருந்து காரைநகருக்கு படகு கொண்டு வரப்பட்டு அங்கிருந்து குறிகாட்டுவானுக்கு நேற்று கொண்டுவரப்பட்டது. 5 தடவைகள் பரீட்சார்த்த ஓட்டத்தை நிறைவு செய்திருந்த நிலையில் மக்களுக்கு நேற்று சம்பிரதாயபூர்வமாகக் கையளிக்கப்படவிருந்தது. படகின் இயந்திரத்தை இயங்கு நிலைக்கு கொண்டு வர முற்பட்டபோது இயந்திரத்தின் சிறிய பாகத்தில் உடைவு ஏற்பட்டுள்ளது. அதனால் துரதிர்ஷ்டவசமாக நேற்று சேவையை ஆரம்பிக்க முடியவில்லை. உதிரிப்பாகங்கள் கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்டு கொண்டு வரப்படும். விசேட நிபுணர்களை வரவழைத்து முழுமையாக பரிசீலனை செய்த பின்னர் மக்கள் பாவனைக்கு படகு ஒப்படைக்கப்படும் - என்றார். (அ-ஓ,125)

## சட்டவிரோத...

சந்திப் பின்னர் ஊடகங்களுக்கு அவர் தெரிவித்ததாவது:-

திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்டுள்ள பகுதியில் காணப்படும் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகள் தொடர்பாகவும், பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவது தொடர்பாகவும் ஏற்கனவே ஜனாதிபதியுடன் கலந்துரையாடியிருக்கின்றேன். அதன் தொடர்ச்சியாக விகாராதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளேன்.

விகாரை அமைந்துள்ள பகுதியில் தனியார் காணிகளை விடுவிப்பது தொடர்பாக சாதகமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ள நிலையில் யாழ். மாவட்டச் செயலர், காணி அலுவலர், தெல்லிப்பழைப் பிரதேச செயலர் மற்றும் நில அளவையாளர் ஆகியோருடன் தொலைபேசி ஊடாக கலந்துரையாடி மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் ஆலோசிக்கப்பட்டுள்ளது. விரைவில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றார். (அ-ஓ,20,66)

## வடக்கு - ...

சிங்களவர்கள் தமிழர்களின் குருதியைக் குடிக்கும் நோக்குடன் மட்டுமே செயற்படுகின்றனர். நாட்டை வலுப்பெறச்செய்ய வேண்டும் என்பதைச் சிந்திக்காது, தமிழர்களை எவ்வாறு முடக்குவது என்று தான் அரச தலைவர்கள் சிந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள். பல வேற்றுமைகள் இருந்தாலும் எமது மக்களுக்காக நாம் ஒற்றுமைப்பட வேண்டும். உதட்டளவில் தேசியம் பேசாமல் அனைவரையும் ஒன்றிணைக்கின்ற செயற்பாட்டை தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) செய்யும் - என்றார். (அ-ஓ,இ)

## எம்.பி.க்களுடன்...

வற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 10 பேரையும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே நாளைமறுதினம் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பில் சந்தித்துப் பேசு நடத்தவுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணத்தின்போதான உறுதிமொழிகள், 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நடத்திய சர்வகட்சி கூட்டம் என்பன தொடர்பில் ஆராயப்படும் என்று தெரிகின்றது. (ஓ,5)

## ஊடகவியலாளர்...

இதனைத் தொடர்ந்து கொழும்பு தேசிய மருத்துவமனையின் அவசர விபத்துப் பிரிவில் ஊடகவியலாளரை உடனடியாக அனுமதிக்கவேண்டுமென பொலிஸாருக்கு சட்டமருத்துவ அதிகாரி ஆலோசனை வழங்கியிருந்தார்.

மருத்துவமனையில் கைவிலங்கிடப்பட்ட நிலையில் சிகிச்சைப் பெற்றுவந்த ஊடகவியலாளர் தரிந்துவை பிணையில் விடுவிக்குமாறும் பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை - அவரது கைதுக்கு கண்டனம் வெளியிட்டுள்ள சுதந்திர ஊடக இயக்கம், தொழிலாளர் போராட்ட மத்திய நிலையம் மற்றும் பல தொழிற்சங்கங்கள் இணைந்து நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலை அறிக்கையிட்டுக்கொண்டிருந்த சஹன் யூடியூப் சனலின் ஊடகவியலாளரான தரிந்து உடுவரகெதர கைது செய்யப்பட்டமையானது கருத்துச் சுதந்திரத்துக்கு பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய அச்சுறுத்தல். கருத்துச் சுதந்திரத்தின் அடிப்படை அம்சமாகக் கருதப்படும் எதிர்ப்புத் தெரிவிக்கும் உரிமை, அதைப் பற்றிய ஊடக அறிக்கையிடலையும் உள்ளடக்கியது. இது எந்த வகையிலும் கைது செய்யக் கூடிய குற்றமாகக் கருதமுடியாது. மேலும், தரிந்து உடுவரகெதர பொலிஸாரின் நடவடிக்கைகள் குறித்து அறிக்கையிடும்போது கைதுசெய்யப்பட்டமையானது, பொலிஸாரின் நடத்தையைப் பொதுமக்களின் பார்வையிலிருந்து மறைப்பதற்கு முயற்சிப்பதாகச் சந்தேகம் எழுந்துள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ளது.

யாழ். ஊடக அமையம் விடுத்துள்ள அறிக்கையில், பொலிஸாரால் கடுமையாகத் தாக்கப்பட்டே ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர கைதுசெய்யப்பட்டதுடன், இது தற்செயலாக நடந்த சம்பவமாக நாம் பார்க்கவில்லை. திட்டமிட்ட வகையில் தாக்கப்பட்டு பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளனர். தொடர்ச்சியாக ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர, தமது பணிகளை முன்னெடுப்பதற்குப் பாதுகாப்புத் தரப்பினரும் அதிகாரத்தைக் கையில் வைத்திருப்பவர்களும் தடைகளை ஏற்படுத்துவதன் ஊடாக இலங்கையின் ஊடகச்சுதந்திரம் தொடர்ந்தும் கேள்விக்கு உட்படுத்தப்படுகிறது - என்று குறிப்பிட்டுள்ளது. (அ-ஓ,20,26,125,159)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வடக்கில் காற்று

வடக்கு மாகாணத்தின் சில பகுதிகளில் மணித்தியாலத்துக்கு 50 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இலேசான மழை பெய்யக்கூடும். அதேவேளை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் ஒருசில இடங்களில் மாலை அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். இருப்பினும், நாட்டின் ஏனைய பகுதிகளில் சீரான வானிலை நிலவும் - என்றுள்ளது. (ம)


## பஸ் விற்பனைக்கு



நல்ல நிலையில் உள்ளதும் குறைந்த கால பாவனையில் உள்ளதுமான
**TATA City Ride**
பஸ் விற்பனைக்கு உண்டு.
(உற்பத்தி வருடம் - 2011)
தொடர்புகளுக்கு:
**076 243 0394**
**077 166 3859**

## வேலையாட்கள் தேவை

சைவ உணவகத்திற்கு கொத்து. பரோட்டா. தோசை. அப்பம். Sweet செய்ய சமையல் உதவியாளர் தேவை.
தங்குமிட வசதி உண்டு.
**076 423 6862, 077 844 3590**

## QS தேவை

தற்காலிகமாக Quantity Surveyor உடன் தேவை. (CS/25721 AH-1
**078 502 9616**

## பணியாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றுக்கு கீழ்வரும் பணியாளர்கள் உடன்தேவை. முன்னனுபவம் விரும்பத்தக்கது.
ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
✓ சமையலாளர் :- யாழ்ப்பாணத்துப் பாரம்பரிய சைவ உணவு வகைகள் செய்யத் தெரிந்திருத்தல் வேண்டும்.
(சம்பளம் - 75,000 தொடக்கம் 100,000 வரை வழங்கப்படும்)
✓ தோட்டப் பராமரிப்பாளர்
✓ பாதுகாவலர்
} தங்குமிட வசதியும், கவர்ச்சிகரமான சம்பளமும் வழங்கப்படும்.
**077 251 4981, 077 872 9806**

## முகாமையாளர் தேவை

பண்ணை ஒன்றைத் திறமையாக நிர்வகிக்கக் கூடிய முகாமையாளர் ஒருவர் தேவை. வாகனம் ஓட்டக் கூடியவராகவும், இலகு வாகனங்களை ஓடக்கூடிய அனுமதிப்பத்திரத்தை (Light Vehicle License) கொண்டவராக இருத்தல் வேண்டும். (CS/51454)AH-1
**077 127 8122**

## காணி விற்பனைக்கு

கல்வியங்காட்டில் நல்ல சுற்றாடலில் 1 3/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
**077 781 3417**

## வீடு வாடகைக்கு

யாழ். சங்கானைப் பகுதியில் சிறிய வீடு வாடகைக்குண்டு.
(பெண்கள் விரும்பத்தக்கது)
**077 108 3877** (CS/25708) AH-1

## சாரதி தேவை

யாழ்நகரை அண்மித்த பகுதியில் உள்ள குறைந்தது O/L தகைமை உள்ள சாரதி தேவை. (பட்டா வாகனம்)
சம்பளம் - 35000/ - (6 நாள் வேலை) (cs 51450) (N.1)
**074 200 1214**

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாண நகரில் இயங்கும் விவசாய முதலீட்டு நிறுவனத்துக்கு வியாபார அபிவிருத்தி முகாமையாளர்கள் தேவை. (CS/51448)AH-1
**076 703 8561, 076 459 2373**

## கணிதம்

A.K. யசிந்தன்
தரம் 6 - O/L வரை
தவணை II
இடம் : - ✓ தட்டாதெரு சந்தி ✓ சீனிவாசகம் வீதி
**077 188 2518** (CS/25717 AH-1

## வாடகைக்கு

யாழ். கச்சேரியில் இருந்து ஒரு நிமிட நடை தூரத்தில். புதிதாகப் புனரமைக்கப்பட்ட இணைந்த வீடு. ஒரு அறை. Hall. சமையலறை. குளியலறை வாடகைக்குண்டு.
அரச சேவையில் உள்ளவர்கள். பெண்களுக்கு முன்னுரிமை. (CS/51404)AH-1
**077 142 2846**

## தேவை

பொதிகள் சேவை நிறுவனத்திற்கு உதவியாளர் தேவை.
A/L குறைந்த தகைமையாகும். நல்லூர், யாழ்ப்பாணத்திற்கு அண்மித்த பகுதியில் இருப்பவர் விரும்பத்தக்கது. கிளிநொச்சியில் உள்ள நிலையத்திற்கு உதவியாளர் தேவை.
**074 200 1214, 070 330 5500**

## வேலைவாய்ப்பு

தனியார் வைத்தியசாலை ஒன்றிற்கு கீழ் காணும் வேலைகளுக்கு பணியாளர்கள் தேவை.
✓ அம்புலன்ஸ் சாரதிகள்
✓ துப்புரவுப் பணியாளர்கள் (ஆண், பெண்)
✓ இரவு நேரக் காவலாளி (ஆண்)
**076 255 5529, 076 976 7447**

## கல்வி - ரியூஷன்

40 வருடங்களுக்கு மேலான அனுபவமுள்ள ஆசிரியரினால் **கணிதம், ஆங்கிலம், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிமூல பாடங்கள்** யாழ். நகரில் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: (CS/51401)AH-1
**077 938 9201**

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலிச் சந்தியில் இருந்து கொக்குவில் செல்லும் வழியில் ஆடியபாத வீதியில் 200 மீற்றர் தூரத்தில் 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு.
(15 அடி அகலமான பாதை) (CS/25208)AH-1
**077 166 3859, 076 243 0394**

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். நகரில் அல்லது அண்டிய பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.
**076 603 7806** (CS/25716) AH-1

## பௌதிகவியல்

மீட்டலும் கடந்தகால வினாவிடைகளும்
2023 / 2024 / 2025 A/L
தனிப்பட்ட / குழு வகுப்புக்கள்
வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்
ஆ.நித்தியானந்தன் (BSc, Dip in Ed) (cs 51410) (2. 6)
**076 7999 005**

## வீட்டுப் பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று சமையல் மற்றும் வீட்டு வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.
வயது : 30 - 55 விருப்பத்தக்கது
இடம்: மாட்டீன் வீதி, யாழ்நகர்
**076 664 4228**

## Wedding Car Services & Tours


## திருமண கார் சேவை




அனைத்து நிகழ்வுகளுக்கும் மற்றும் அனைத்து தேவைகளுக்கும் சாரதியுடன் கார் வழங்கப்படும்.
**Tel: 0777 89 60 54**


## மரண அறிவித்தல்

தோற்றம்
05 . 01 . 1949



மறைவு
28 . 07 . 2023

### திரு. வல்லிபுரம் நடராஜா (JP)

(சிமெந்து கூட்டுத்தாபனம் – ஆளணி உத்தியோகத்தர், காங்கேசன்துறை, கொழும்பு)

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும், தற்போது சங்கானை தொட்டிலடியை வதிவிடமாகவும் கொண்ட திரு. வல்லிபுரம் நடராஜா நேற்றுமுன்தினம் (28.07.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா - மீனாச்சிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், தங்கேஸ்வரியின் ( ஓய்வுபெற்ற Nursing Sister - யாழ். போதனா வைத்தியசாலை) அன்புக் கணவரும், கவிதா (கனடா), சுதர்சன் (நியூசிலாந்து) ஆகியோரின் தந்தையும், சத்தியா (கனடா), கனிசியா (நியூசிலாந்து) ஆகியோரின் மாமனாரும், ஜானவி, சஞ்சஜன் ஆகியோரின் பேரனும், நவரட்ணம், அன்னலச்சுமி, காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் ராஜரட்ணம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தங்கரத்தினம், சிவராஜா மற்றும் தங்கராஜா, தங்கமணி, சண்முகராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.07.2023) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தொட்டிலடி விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கானை,
தொட்டிலடி.
(CS/51455)AH-1

தகவல் :
தங்கேஸ்வரி நடராஜா (மனைவி)

**071 828 5729, 074 021 2474**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்,
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்
வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர்செய்குவோம்!
- பாரதியார்


சஞ்சீவி


Registered as a Newspaper

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 ஆடி 14 ஞாயிற்றுக்கிழமை (30.07.2023) சிகரம்: 163

# அணில் கட்டிய பாலமும் ரணில் கட்டாத பாலமும் ?

○ நிலாந்தன்




ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தைத் தொடர்ந்து இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பிணைப்புத் திட்டங்கள் மேலும் விரிவுபடுத்தப்பட்டி ருக்கின்றன. ஏற்கனவே பலாலியிலிருந்து மீனம்பாக்கத்துக்கும், காங்கேசன்துறையில் இருந்து தமிழ்நாட்டுக்கும், மன்னாரியிலிருந்து தமிழ்நாட்டுக்கும் என மூன்று திட்டங்கள் யோசிக்கப்பட்டன. இந்தக் கடல் வழிப் பிணைப்பு, வான்வழிப் பிணைப்பு என்பவற்றோடு,தரை வழியாக ஒரு பாலத்தைக் கட்டுவது குறித்தும் பரிசீலிக்கப்படுகிறது. இவைதவிர ரணிலின் விஜயத்தின் பின்னணியில் இந்திய வெளியுறவுச் செயலர் தெரிவித்த கருத்துகளின்படி கடல் வழி, வான்வழி, தரைவழிப் பிணைப்புகளோடு வர்த்தகப் பிணைப்பு, எரிசக்திப் பிணைப்பு, பொருளாதாரப் பிணைப்பு,டிஜிட்டல் பிணைப்பு, மின்சக்திப் பிணைப்பு, எரிபொருள் விநியோக குழாய்வழிப் பிணைப்பு என்றிவ்வாறாக பல்வேறு வகைப்பட்ட பிணைப்புகளைக் குறித்தும் பேசப்பட்டிருக்கிறது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான புவியியல் அருகாமை காரணமாக ஏற்கனவே இருநாட்டு மக்கள் கூட்டங்களுக்கும் இடையே கலாசாரப் பிணைப்புகளும் மதம் சார்ந்த பிணைப்புகளும் உண்டு. ஓர் இந்திய ராஜதந்திரி தனிப்பட்ட உரையாடலின் போது சொன்னார், இந்தப்புவியியல் அருகாமையும் அது சார்ந்த பிணைப்பும் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல சிங்கள மக்களுக்கும் பொருந்தும் என்று. உண்மை. இப்பொழுது மிலிந்த மொரகொட அதைத்தான் புதுப்பிக்க முயற்சிக்கின்றார். அதாவது வட இந்தியாவுக்கும் பௌத்தத்துக்கும் இடையிலான பிணைப்பைக் கையாண்டு அவர் சிங்கள மக்களை பாரதிய ஜனதாவோடு 'சென்ரிமென்ராகப்' பிணைக்க முயற்சிக்கின்றார்.

ஆனால் ஈழத் தமிழர்களுக்கும் தமிழகத்துக்கும் இடையிலான பிணைப்பு ஆழமானது. பரந்தகன்ற பரிமாணங்களைக் கொண்டது. ஈழத் தமிழர்களையும் தமிழகத்தையும் பிரிப்பது ஒடுங்கிய பாக்கு நீரிணையாகும். பாக்கு நீரிணையை அதன் பிரயோக வடிவத்தில் சொன்னால் அது ஒரு தமிழ் நீரிணைதான். அல்லது தமிழ் வாவிதான். அந்த நீரிணையின் இருபுறமும் தமிழர்கள் உண்டு. நவீன அரசியலின் சர்வதேச எல்லைகளால் பிரிக்கப்படுவதற்கு முன்பு,அது ஒரு தமிழ்க் கடலாகத்தான் காணப்பட்டது. ஈழப்போரின் போதும் அது அவ்வாறுதான் காணப்பட்டது. ஈழப்போரின் பலம் அதுதான் என்று மு.திருநாவுக்கரசு கூறுவார். இவ்வாறு ஒடுங்கலான தமிழ் நீரிணையால் பிரிக்கப்பட்ட இரு வேறு தமிழ்ச் சமூகங்களுக்கும் இடையிலான பிணைப்பு எனப்படுவது சிங்கள மக்களுக்கும் வட இந்தியாவுக்கும் இடையிலான பௌத்த பண்பாட்டுப் பிணைப்பை விடவும் ஆழமானது; உடனடியானது;வரலாற்றில் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு விளைவுகளை ஏற்படுத்தியது.

இந்தப்பிணைப்புக் காரணமாகத்தான் ஈழப்போர் அதன் அடுத்த கட்ட வளர்ச்சியை அடைந்தது. அதுமட்டுமல்ல தமிழகத்தில் மொத்தம் 19 பேர், ஈழத் தமிழர்களுக்காக தீக்குளித்திருக்கிறார்கள். இவர்களில் யாருமே திருகோணமலையில் இருக்கும் எண்ணெய்க்குதங்களுக்காகவோ அல்லது பலாலி விமான நிலையத்தை திற என்று கூறியோ அல்லது காங்கேசன்துறைக்கும் நாகப்பட்டினத்துக்கும் இடையில் கப்பலை விடு என்று கேட்டோ அல்லது கலாசார மண்டபம் ஒன்றைக் கட்டிக் கொடு என்று கேட்டோ அவர்கள் தீக்குளிக்கவில்லை. தமிழர்களுக்கு ஒன்று என்றதும் அவர்கள் தீக்குளித்தார்கள். ஈழத் தமிழர்கள் அந்த 19 பேரின் சாம்பலையும் கடந்து சென்று அதாவது தமிழகத்தைக் கடந்து சென்று அரசியல் செய்வது கடினம்.

இவ்வாறாக,ஈழத் தமிழர்களுக்கு தமிழகத்தோடு உள்ள இராஜதந்திர நலன்கள் கலக்காத பிணைப்பை, இந்தியா தனது புவிசார் அரசியல் நலன்களுக்காகப் பயன்படுத்தியது. அதன் விளைவாக ஈழப்போர் வளர்ந்தது. பின்னர் இந்தியா அதே புவிசார் நலன்களின் அடிப்படையில் இந்திய-இலங்கை உடன்படிக்கையைச் செய்தபொழுது விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் கசந்தன. இதன் விளைவாக துரோணர்களுக்கும் அர்ச்சுனர்களுக்கும் இடையே மோதல்கள் வெடித்தன. ஈழப் போர் தமிழகத்துக்கும் விரிவடைந்தது.

அது பழைய கதை. புதிய கதை என்னவென்றால்,ஈழப்போரின் இறுதிக்கட்டத்தின் பின் தமிழகத்துக்கும் ஈழத் தமிழர்களுக்கும் இடையிலான இடைவெளிகள் முன்னரை விட அதிகரித்துள்ளன என்பதுதான். குறிப்பாக திராவிடக் கட்சிகளுக்கும் ஈழச் செயற்பாட்டாளர்களுக்கும் இடையே இடைவெளிகள் அதிகமாகி வருகின்றன. சமூக வலைத்தளங்களில் நடக்கும் வாதப் பிரதிவாதங்கள் அதைக் காட்டுகின்றன. மிகக்குறிப்பாக "நாம் தமிழர்" கட்சியின் எழுச்சியோடு தமிழகத்தில் உள்ள பெரிய கட்சிகள் ஈழத் தமிழர் விவகாரத்தில் இருந்து சற்று ஒதுங்கி நிற்கும் ஒரு நிலைமை தோன்றியிருக்கிறது. மேலும் பாரதிய ஜனதாவின் தமிழக அமைப்பாளர் தனது உள்நாட்டு அரசியல் தேவைகளுக்காக ஈழப் போராட்டத்தை திராவிடக் கட்சிகளிடமிருந்து 'ஹைஜாக்' பண்ண முற்படும் ஒரு நிலைமையும் வளர்ந்து வருகிறது. இதில் கடந்த வாரம் ரணில்மோடி சந்திப்பையொட்டி தமிழக முதல்வர் டெல்லிக்குக் கடிதம் எழுதியது ஒரு மாற்றம்.

அதாவது 2009க்கு முன்னைய நிலைமைகளோடு ஒப்பிடுகையில் இப்பொழுது தமிழகத்துக்கும் ஈழத் தமிழர்களுக்கும் இடையிலான உறவுகள் ஒப்பீட்டளவில் சோதனைக்கு உள்ளாகி வருகின்றன. புவியியல் அருகாமை,இன அருகாமை,மொழி அருகாமை, பண்பாட்டு அருகாமை,மத அருகாமை போன்ற அருகாமைகள் காரணமாக பிணைக்கப்பட்டிருந்த மக்கள், அரசியல் காரணங்களால் படிப்படியாகத் தூரமாகிச் செல்லும் ஒரு பின்னணியில், பாக்குநீரிணையின் இருபுறங்களிலும் காணப்படும் தமிழ்ச் சமூகங்களுக்கிடையிலான பிணைப்பைப் பலப்படுத்தக்கூடிய சில திட்டங்களை இந்தியா முன்வைத்தது. அந்தத்திட்டங்களை புலம்பெயர்ந்த தமிழர் அமைப்பான பி.ரி.எப். ஊக்குவித்தது. பலாலியில் இருந்து ஒரு வான் வழியையும் காங்கேசன்துறையில் இருந்தும்,மன்னாரில் இருந்தும் இரண்டு கடல் வழிகளையும் திறப்பது மேற்படி பிணைப்புத் திட்டங்களின் நோக்கம். யாழ்ப்பாணத்தில் இந்திய நிதி உதவியோடு கட்டப்பட்டுள்ள கலாசார மண்டபமும் அதற்குள் அடங்கும்.

ஆனால் இலங்கை அரசாங்கம் இந்தத்திட்டங்கள் அவற்றின் முழு வளர்ச்சி அடைவதை ஏதோ ஒரு விதத்தில் தடுத்து வருகின்றது. பலாலி விமான நிலையத்தை ஒரு சர்வதேச விமான நிலையமாகத் தரமுயர்த்துவதற்கு அதன் ஓடு பாதையைப் பெரிதாக்க வேண்டும்.


அதற்கு இலங்கை அரசாங்கம் இன்று வரை அனுமதிக்கவில்லை. சில "டியூற்றி பிறீ" மதுக்கடைகளைத் திறப்பதன் மூலம் பலாலியை சர்வதேச விமான நிலையமாகத் தரமுயர்த்திவிட முடியுமா? காங்கேசன்துறைக்கும் தமிழகத்துக்கும் இடையிலான கடல் வழி இன்றுவரை திறக்கப்படவில்லை. அது 'இதோ திறக்கப்படுகிறது' என்று எத்தனை தடவைகள் கூறப்பட்டுவிட்டது? மன்னாரிலும் அப்படித்தான். ஏன் அதிகம் போவான்? தமிழ் மக்களுக்கு என்று இந்தியா யாழ்ப்பாணத்தில் கட்டிக் கொடுத்த கலாசார மண்டபத்தை இன்றுவரை முழுமையாக இயங்க வைக்க முடியவில்லை. அதற்கு வேண்டிய நிர்வாகக் கட்டமைப்பையும் உருவாக்க முடியவில்லை. அந்தக்கட்டடத்தை தமிழ் மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட மாநகரசபையிடம் கொடுப்பதா? அல்லது மத்திய அரசாங்கத்தின் கீழ் வைத்திருப்பதா என்று முடிவெடுக்கப்பட்டு விட்டதா?


இப்படிப்பட்டதோர் பின்னணியில், இப்பொழுது மேலும் புதிய பிணைப்புத் திட்டங்கள் பற்றிச் சிந்திக்கப்படுகிறது. குறிப்பாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே தரை வழியைத் திறக்கும் நோக்கத்தோடு ஒரு பாலத்தைக் கட்டுவது பற்றிய முன்மொழிவை ரணில் விக்கிரமசிங்க டெல்லியில் முன்வைத்திருக்கிறார். அவர் ஏற்கனவே இதுபோன்ற ஒரு முன்மொழிவை 2002-2004வரை பிரதமராக இருந்தபோது இந்தியாவிடம் முன்வைத்திருக்கிறார். இவ்வாறு இலங்கையை இந்தியாவோடு ஒரு பாலத்தின் மூலம் இணைக்கும் திட்டத்துக்கு அவர் தாமாக முன்வந்து வாய்ப்பை வழங்கியதன்மூலம் இந்திய அரசாங்கத்தை ஏதோ ஒரு விதத்தில் வெற்றிகரமாகக் கையாள முயற்சிக்கிறார் என்று எடுத்துக் கொள்ளலாம். சீன விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக மாறியுள்ள இந்தச்சிறிய தீவை ஒரு பாலத்தின் மூலம் இந்தியாவோடு தொடுத்து விடலாம் என்று அவர் கேட்டுக் கொண்டதன்மூலம் இந்தியாவின் பாதுகாப்புசார் கவலைகளை நீக்க முயற்சிக்கிறார் என்றும் எடுத்துக் கொள்ளலாம். "உங்களோடு எங்களைப் பிணைத்துக் கொள்ளும் ஒரு பாலத்தைக் கட்ட நான் தயார் " என்ற செய்தியை அவர் இந்தியாவுக்கு வழங்கியிருக்கிறார். அதன்மூலம் இனப்பிரச்சினை தொடர்பில் இந்தியாவிலிருந்து வரக்கூடிய அழுத்தங்களை அவர் தவிர்த்திருக்கிறார் என்று எடுத்துக் கொள்ளலாமா? ஆனால் நிச்சயமாக அப்படி ஒரு பாலத்தை அவர் கட்டப்போவதில்லை. அப்படிக் கட்டுவதற்கு சிங்கள பௌத்த கூட்டு உளவியல் அனுமதிக்காது. அந்தப்பாலம் கட்டப்பட்டால் இந்தச்சிறிய தீவு இந்தியாவின் மாநிலமாகிவிடும் என்ற அச்சம் சிங்கள- பௌத்தர்களுக்கு உண்டு. அந்தப்பாலத்தைக் கட்ட முற்பட்டால் 13ஐ எதிர்ப்பது போல பிக்குகளும் அரசியல்வாதிகளும் எதிர்ப்பார்கள். அப்பொழுது எதிர்க்கட்சிகள் ஏற்றுக்கொள்ளவில்லை,பிக்குகள் எதிர்க்கிறார்கள் என்று சொல்லி ரணில் கையை விரிப்பார். எனவே அதில் அவர் விசுவாசமாக இல்லை. இப்போதைக்கு மோடியை எப்படி வசப்படுத்துவது என்றுதான் அவர் சிந்திக்கிறார்.

தமிழ் நோக்குநிலையில், பாக்கு நீரிணையின் இருபுறங்களிலும் உள்ள இரண்டு தமிழ்ச் சமூகங்களுக்கும் இடையிலான பிணைப்பைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்க,ரணில் விக்கிரமசிங்க,அரசுக்கும் அரசுக்கும் இடையிலான பிணைப்புத் திட்டங்களுக்குரிய யோசனைகளை முன்வைத்திருக்கிறார். அதாவது, சிங்களத் தீவுக்கு ஒரு பாலம் அமைக்கலாம் என்று தாமாக முன்வந்து ஒரு முன்மொழிவைக் கொடுத்திருக்கிறாரா? அண்ணாமலையை லண்டனுக்கு அழைத்து உறவுப் பாலம் அமைப்பதற்கு புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் முயற்சிக்க,ரணில்,"சிங்களத் தீவினுக்கோர் பாலம்" அமைக்க முன்வந்திருக்கிறாரா?

அல்லது இந்துத்துவாவை ஒரு கொழுக்கியாக பயன்படுத்தி பாரதிய ஜனதா அரசாங்கத்தை நெருங்கிச் செல்லலாம் என்று நம்பும் ஒரு பகுதி ஈழத் தமிழர்கள் அதற்காகக் கடுமையாக உழைத்துக் கொண்டிருக்க, ரணில் விக்கிரமசிங்க புதிய பிணைப்புத் திட்டங்களின் மூலம் இந்தியாவை நெருங்கிச் சென்று இனப்பிரச்சினை தொடர்பில் இந்தியா தன் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியாதபடி நிலைமைகளை வெற்றிகரமாகக் கையாள முயற்சிக்கிறாரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மருத்துவர் சாமுவேல் பிஸ்க் கிறீன்
Dr.Samuel Fisk Green (1822-1884)



# இதயத்தில் ஓர் இடம் கேட்ட அமெரிக்க மிசனரிகள்!

○ பா. துவாரகன்

இன்று இலங்கையின் முதன்மைத் தேசிய மருத்துவமனையாக விளங்கும் கொழும்பு தேசிய மருத்துவமனையிலே வருடாந்தம் சிகிச்சை பெறும் நோயாளர்களது எண்ணிக்கையானது நாட்டிலுள்ள ஏனைய மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவோரைவிட அதிகமாகும். ஆனால் இலங்கையில் ஐரோப்பிய மருத்துவம் அறிமுகமான 19 ஆம் நூற்றாண்டின் பின் அரைப்பகுதியில் யாழ்ப்பாணம் ஆபத்துக்கு உதவும் நண்பர்கள் கழக மருத்துவமனையிலே (யாழ். போதனா மருத்துவமனை) இலங்கையின் எந்த ஒரு மாகாண மருத்துவமனையிலும் சிகிச்சை பெறுவோரைவிட அதிகளவானோர் சிகிச்சை பெற்றனர். மருத்துவர் கிறீனும் அவரிடம் மருத்துவம் பயின்ற தமிழர்களும் வட பகுதியிலே ஐரோப்பிய மருத்துவத்தை மக்களிடையே பிரபல்யப்படுத்தி இருந்தமையே இதற்குக் காரணம். இதனால் அந்தக்காலப் பகுதியில் யாழ்ப்பாணம் ஆபத்துக்கு உதவி மருத்துவமனையில் அதிகளவானோர் சிகிச்சை பெற்றனர். 1872 ஆம் ஆண்டு இந்த மருத்துவமனையில் 579 பேர் உள்ளக விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுள்ள அதே வேளை 10,010 பேர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர். இந்த எண்ணிக்கை இலங்கையிலுள்ள ஏனைய மருத்துவமனைகளை விட அதிகமானதாகும்.

மருத்துவர் கிறீன் 1848 இல் மானிப்பாயில் ஆரம்பித்த மருத்துவ பீடத்தை 1873ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி அன்று வண. ஹாஸ்ரிங்ஸ் (Rev. E.P.Hastings) அடிகளாரிடம் கையளித்தார். வண. ஹாஸ்ரிங்ஸ் அடிகளார் தனது இறுதிக்காலம் வரை யாழ்ப்பாணத்தில் கடமையாற்றி 1890 இல் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

கிறீன் தனது சகோதரிகளுக்கு 1873 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6 ஆம் திகதி எழுதிய கடிதத்திலே தான் அமெரிக்காவுக்குத் திரும்பும் பயணத்தின்போது. தனது குடும்பத்துக்கு ஏதாவது எதிர்பாராத சம்பவம் நிகழும் பட்சத்தில் தனது சொத்துகள் அனைத்தையும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் மருத்துவப் பேராசிரியருக்குரிய பதவிநிலையை உருவாக்கப் பயன்படுத்துமாறு கேட்டிருந்தார். மார்ச் மாதம் 7 ஆம் திகதி அன்று கிறீன் தனது குடும்பத்துடன் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு 'செரண்டிப்' என்ற பாய்க்கப்பலில் பயணத்தை மேற்கொண்டார்.

கிறீன் கொழும்பில் சில வாரங்கள் தங்கியிருந்தார். பிரித்தானியாவின் குடியேற்றநாட்டு சத்திரசிகிச்சை வல்லுநராகவும் கொழும்பு மருத்துவபீடத்தின் முதலாவது அதிபராகவும் விளங்கிய மருத்துவர் ஜேம்ஸ் லூஸ், மார்ச் மாதம் 27 ஆம் திகதி அன்று கிறீனுக்கு எழுதிய கடிதத்தில் மருத்துவர் கிறீனதும் அமெரிக்க மிசனரிகளதும் பணியைப் பின்வருமாறு பாராட்டியிருந்தார்:

> "எனது உடல்நலக் குறைவு காரணமாக தங்களைச் சந்திக்க முடியாமல் போய்விட்டது. தங்களுடையதைப் பிரதி செய்து உருவாக்கப்பட்ட எமது கொழும்பு மருத்துவமனையை தங்களுக்குச் சுற்றிக் காண்பித்திருப்பின் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்திருப்பேன். இலங்கைத் தீவின் மருத்துவக் கல்வியானது தங்களுக்கும், தங்களுக்கு முன் பணியாற்றியவர்களுக்கும் மிகவும் கடன்பட்டிருக்கிறது. தாங்கள் போலியான மருத்துவத்தின் அடித்தளத்தை அசைத்திருக்கிறீர்கள். இலங்கைத் தீவின் மக்களிடைய அறிவுக்கு ஏற்புடையதும் விஞ்ஞான பூர்வமானதுமான மேலைத்தேச மருத்துவத்தை அறிமுகப்படுத்தி அதனை அவர்கள் பின்பற்ற மேற்கொண்ட எமது முயற்சிகளுக்கு கடவுளுடைய கிருபை கிடைக்கும் என்று நான் திடமாக நம்புகின்றேன். தாங்கள் தமிழில் மருத்துவத்தை அறிமுகப்படுத்தி ஆற்றிய பணியானது தாங்கள் இங்கிருந்து சென்ற பின்னரும் நினைவு கூரப்படும். இந்தத் தீவின் சுதேச மக்களாகிய நாம் கிறித்துவத்தையும் நாகரிகத்தையும் விஞ்ஞானத்தையும் எம்மிடையே அறிமுகப்படுத்திய அமெரிக்க மிசனரிகளின் முயற்சிகளுக்கு கடமைப்பட்டிருக்கிறோம்."

கிறீன் குடும்பத்துடன் 1873 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29 ஆம் திகதி கொழும்பிலிருந்து இலண்டன் நோக்கி 'Good Hope' என்ற கப்பலில் பயணமானார். கிறீன் இலங்கையை விட்டு நீங்கிய பின்னர் 20 ஆண்டுகளுக்கு மேலாக மருத்துவ மிசனரிகள் எவரையும் போஸ்ரன் அமெரிக்கமிசன் சங்கம் இலங்கைக்கு அனுப்பவில்லை. கிறீன் யாழ்ப்பாணத்தில் உருவாக்கிய தமிழ் மருத்துவர்களே 1873- 1893 வரையான காலப்பகுதியில் வடபகுதியில் மேலைத்தேச மருத்துவத்தை உயிர்ப்புடன் வைத்திருந்தனர்.

**சுயஸ் கால்வாய் ஊடான கடற்பயணம்**
(Opening of the Suez Canal)

சுயஸ் கால்வாய் எகிப்தில் உள்ள செயற்கைக் கால்வாய் ஆகும். இது மத்தியதரைக்கடலையும் செங்கடலையும் இணைக்கிறது.193.30 கி.மீ. நீளமும் 300 மீ. அகலமும் கொண்ட இந்தக்கால்வாய் 1869 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதி திறக்கப்பட்டது. இந்தக் கால்வாய் வெட்டப்பட்டமையால் ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையிலான கப்பற்போக்குவரத்து மிக இலகுவானது. இதற்கு முன்பு கப்பல்கள் ஆபிரிக்காவைச் சுற்றியே பயணிக்க வேண்டியிருந்தது.

## யாழ்ப்பாண மருத்துவ வரலாறு: 23
## சில குறிப்புக்கள்

(2021.03.23 அன்று, ஏறத்தாழ 400 மீற்றர் நீளமான எவர் கிவ்வன் எனும் கொள்கலன் கப்பல் எகிப்தின் சுயஸ் கால்வாயில் தரை தட்டியதால் சில நாள்கள் சுயஸ் கால்வாய் ஊடான கப்பற்போக்குவரத்துத் தடைப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது)

1873 ஆம் ஆண்டு மருத்துவர் கிறீன் கொழும்பிலிருந்து பயணமான கப்பல் சுயஸ் கால்வாய் ஊடாகச் சென்றதால் 51 நாள்களில் இலண்டனைச் சென்றடைந்தார். சுயஸ் கால்வாய் திறக்கப்பட முன்னர் கிறீன் முதன்முதல் அமெரிக்காவிலிருந்து ஆபிரிக்கக் கண்டத்தைச் சுற்றி இலங்கைக்கு வந்த பயணம் ஏறத்தாழ நான்கரை மாதங்கள் எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இலண்டனில் 3 மாதங்கள் தங்கியிருந்த கிறீன் அங்கிருந்து புறப்பட்டு ஆகஸ்ட் 16 இல் நியூயோர்க் நகரை அடைந்தார்.

கிறீன் உடல்நலம் குன்றியிருந்த போதிலும் பிறதேசங்களுக்கு மிசனரிகளை அனுப்பும் அமெரிக்க மிசன் சங்கத்துக்கு 1873.11.13 அன்று அனுப்பிய கடிதத்தில் மீளவும் யாழ்ப்பாணம் சென்று சேவையாற்றும் தனது விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

மருத்துவர் கிறீன் 1873.12.13 அன்று ABCFM க்கு எழுதிய கடிதத்தில் டால்ரனின் மனித உடற்றொழிலியல் (Dalton's Human Physiology), மற்றும் மருந்துப்பொருள் நூலும் மருத்துவச் சட்டவியலும் (Materia Medica and Medical Jurisprudence) முதலானவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பைப் பூரணப்படுத்தும் தனது பேராவலையும் தெரிவித்திருந்தார். இந்தக்காலப் பகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து இவ்விருநூல்களினதும் தமிழ் மொழிபெயர்ப்பின் கையெழுத்துப் பிரதிகள் விரைவாக வந்து சேரும் என்ற எதிர்பார்ப்புடன் அவற்றைச் செவ்வைப்படுத்துவதில் கிறீன் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். கிறீன் தனது ஆரோக்கியம் மேம்பட்டதும் யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் விருப்பை மீண்டும் ABCFM க்கு கடிதம் மூலம் வெளிப்படுத்தியிருந்தார். அவ்வாறு யாழ்ப்பாணம் செல்லும்போது தனது மனைவியையும் உடன் அழைத்துச் செல்வது குறித்தும், அமெரிக்காவிலுள்ள தனது பிள்ளைகளைப் பராமரிக்குமாறும் ABCFM அமைப்பிடம் கேட்டுக் கொண்டார். மிசனரிகளின் பிள்ளைகளுக்கு முன்பும் இவ்வாறான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கிறீன் யாழ்ப்பாணத்தில் தான் மேற்கொண்ட மருத்துவப் பணி அனுபவத்தை எடின்பரோ மிசன் சங்கத்துக்கு மருத்துவ மறை பரப்புநர்கள் (Medical Missions) என்ற கட்டுரையாக வரைந்து 1874 இல் சமர்ப்பித்திருந்தார். மருத்துவர் கிறீனது கட்டுரை எடின்பரோ மிசனரியின் 1874 ஆம் ஆண்டு மே மாதம் வெளிவந்த காலாண்டு இதழில் பிரசுரமாகியிருந்தது. இந்த இதழின் ஆசிரியர் பின்வரும் குறிப்பையும் வரைந்திருந்தார்:

> "மருத்துவர் கிறீன் இலங்கையில் ஆற்றிய மருத்துவ மிசன் பணி போன்று மருத்துவத் தொண்டாற்றிய எந்தவொரு மிசனரியையும் நம்காலத்தில் காண முடியாது. ஐரோப்பிய மருத்துவத்தின் நன்மையை அவர்களது தாய்மொழியில்(தமிழ்) வழங்கியதுடன் மருத்துவ மற்றும் சத்திரசிகிச்சை நூல்களைத் தென்னிந்திய மொழியில் (தமிழ்) மொழிபெயர்த்தும், அவற்றைப் பதிப்பித்தும் பிறதேசத்தவர்களுக்கு (தமிழர்களுக்கு) மருத்துவத்தைக் கற்பித்தும், அவர்களை மருத்துவத் தூதர்களாக்கிய பெருந்தொண்டை கிறீனைப் போல் உலகில் எந்த மிசனரியும் செய்யவில்லை."

இதனை அமெரிக்க மிசனரிகளுக்கு ஐக்கிய இராச்சிய மிசனரிகள் வழங்கிய பாராட்டாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

**இலங்கைக்கு வருகைதந்த கிறித்துவ மிசனரிகள்**

19 ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு கிறித்துவ மறை பரப்பும் நோக்குடன் ஐக்கிய இராச்சியத்திலிருந்து பல மிசன்கள் வந்தன. 1804 இல் இலண்டன் மிசனும், 1812 பப்ரிஸ்ற் மிசனும், 1814 இல் வெஸ்லியன் மிசனும் வந்தன. 1816 இல் அமெரிக்க மிசனரியினர் வந்தனர். 1818 இல் இங்கிலாந்து சேர்ச் மிசனும் (CMS), 1840 இல் SPG சேர்ச் மிசனும் வருகை தந்தன.

எல்லா மிசனரிகளும் இலங்கையின் அனைத்துப் பாகத்திலும் சமஅளவில் செயற்பட்ட போதும் அமெரிக்க மிசனரிகள் யாழ்ப்பாணத்தில் மட்டுமே பணிபுரிந்தனர். பிரத்தானிய அரசு அமெரிக்க மிசனரிகளை யாழ்ப்பாணத்தில் மட்டுமே பணியாற்ற அனுமதித்திருந்தது. இதனால் யாழ்ப்பாணத்தில் மட்டுமே அமெரிக்க மிசன் பாடசாலைகள் தாபிக்கப்பட்டன. அவை இன்றும் இயங்குகின்றன.

ஏனைய மிசனரிகளை விட் அமெரிக்க மிசனரிகள் தனித்துவம் வாய்ந்தவர்களாக இருந்தார்கள். இலங்கையைக் கைப்பற்றி ஆட்சிசெய்த ஐக்கிய இராச்சியத்திலிருந்தே மற்றைய மிசனரிகள் வந்திருந்தனர். இதனால் இவர்களுக்கு அரச அதிகாரத்தின் நேரடி உதவி கிடைத்தது. அமெரிக்க மிசனரிகளுக்கு அரச உதவி கிடைக்கவில்லை. அமெரிக்க மிசனரிகள் மட்டுமே கல்வியுடன் மருத்துவத்தையும் பரப்பி மருத்துவக் கல்லூரியை நிறுவி மேலைத்தேச மருத்துவத்தைப் போதித்தனர். பிரித்தானியர் நிலத்தைக் கைப்பற்றி அடிமைப்படுத்தினர். ஆனால் அமெரிக்க மிசனரிகள் தமிழர்களிடம் நிலத்தைக் கேட்கவில்லை. மாறாக அவர்கள் யாழ்ப்பாண மக்களிடம் இதயத்திலே இயேசுக்கு ஓரிடம் கேட்டதாகக் கூறுவர். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழர்களின் எதிர்காலமும் 13 ஆவது திருத்தமும்

பேராசிரியர் சி.பத்மநாதன்

இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதும் இந்தியாவின் வகிபாகமும் என்ற கருத்தமர்வை அதிகாரப் பகிர்வுக்கான இயக்கம் கடந்த 15.07.2023 அன்று தந்தை செல்வா கலையரங்கில் ஏற்பாடு செய்திருந்தது. வடக்கு-கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துத் தமிழ்க் கட்சிகளினதும் தலைவர்கள் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்துக்கு தலைமையேற்று உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக வேந்தரும் வரலாற்றுத்துறைப் பேராசிரியருமான சி. பத்மநாதன் அவர்கள் வழங்கிய உரையின் முழுமையான எழுத்து வடிவம் இங்கு பிரசுரமாகிறது.



எமது சமுதாயம் பக்கச்சார்பான முறையில் இயங்கிவரும் வரை ஒற்றுமை, கூட்டிணைவு பற்றிப் பேசமுடியாது. பக்கச்சார்பான நிலையிலிருந்து கொண்டு முன்வைக்கும் கோரிக்கைகளை உலகம் ஏற்றுக் கொள்ளாது. முள்ளிவாய்க்கால் முடிவுகளுக்கு ஏதுவானவற்றைத் தெளிவாக விளக்குவது இப்பொழுது பதவியிலுள்ள தமிழ்த் தலைவர்களின் பொறுப்பும், கடமையுமாகும். அதனைச் செய்யாதவிடத்து அவர்களுக்குத் தமிழர் சமுதாயத்தை வழிநடத்தும் தலைமையும், ஆற்றலும் இல்லை என்பதாகிவிடும்.

முள்ளிவாய்க்காலுக்குப் பின்பு ஒரு புதிய அரசியற் கலாசாரம் அவசியமாகி விட்டது. ஆனால் அதனைப் பற்றிய உணர்வு எதுவும் தோன்றியுள்ளமைக்கான அடையாளம் எதுவும் தென்படவில்லை. ஒன்றன் பின் ஒன்றாக ஏற்பட்ட, இமாலயத் தவறுகளே முள்ளிவாய்க்காலில் ஏற்பட்ட வரலாறு காணாத பேரிடருக்கு ஏதுவானவை. அந்த முடிவுகளுக்கு அடிப்படையான மனோபாவத்திலிருந்து முற்றாக விடுபடவேண்டும்.

உள்ளவற்றையும், கிடைக்கின்றவற்றையும் உதாசீனம் செய்வதனாலும் உதறித் தள்ளுவதனாலும் எல்லாமே நாசமாகி விடும் என்பது தான் கடந்த 36 வருட நிகழ்ச்சிகளின் பாடமாகும். இலங்கைத் தமிழர்கள் தம்மைப் பரதகண்டத்தில் வாழும் மக்களாகவே காலாகாலமாகக் கருதி வந்துள்ளனர். பிதிர்க்கடன் செய்யும் வேளையிலே சப்தரிஷிகளுக்கு நிவேதனம் செய்கின்றனர். காஞ்சி, காசி, மதுரா முதலான புண்ணிய க்ஷேத்திரங்களின் பெயர்களை உச்சரிக்கின்றனர்.

இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றை அபிமான உணர்வுகளோடு கற்று வந்துள்ளனர். அவற்றின் கதைகளும் அறம், வீரம் பற்றிய உணர்வுகளும் இலங்கைத் தமிழர் பாரம்பரியத்திற் செறிந்து விட்டன. மட்டக்களப்பு தேசத்தவரின் நாட்டிய நாடகங்கள் இதற்கு உதாரணமானவை.

இந்த உறவுகளைப் புரிந்து கொண்ட நாவலர்பெருமான் தாய் நாடு, சேய்நாடு என்று எங்கள் பாரம்பரியமான உறவுகளை வரையறை செய்தார். அந்த உணர்வும் பரஸ்பரமானது. மகாத்மா காந்தி 1926 இல் யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆற்றிய உரையிலே பின்வருமாறு சொன்னார்.

> *"இங்கிருக்கின்ற பொழுது இந்தியாவின் ஒரு சிறிய பகுதியில் இருப்பதான ஓர் உணர்வு எனக்குள் ஏற்படுகின்றது. நீங்கள் பேசும் மொழி எனக்குப் பழக்கமானது. இங்குள்ள சிலர் எனக்கு அறிமுகமானவர்கள்."*

இந்திய மக்களின் விடுதலைப் போராட்டமே அந்நாள்களில் எமது மக்களின் சிந்தனையும், கவனமுமாக இருந்தது. சுப்பிரமணிய பாரதியாரின் தேசபக்திப் பாடல்களே எமது இளைஞர்களின் வாய்களில் ஒலித்தவண்ணமிருந்தன. வீட்டுச்சுவர்களிலும், உணவகங்களிலும். மோட்டிலால் நேரு, சுரேந்திரநாத் பனேர்ஜி, மகாத்மாகாந்தி, நேதாஜி ஆகியோரின் அலங்காரமான படங்கள் தொங்கவிடப்பட்டிருக்கும்.

இலங்கை சுதந்திரம் பெற்றதும் அரசாங்கம் தமிழரை அடக்கி ஒடுக்குவதற்கான திட்டங்களைக் கட்டம் கட்டமாக நிறைவேற்றத் தொடங்கியது. இதன் எதிர்விளைவாகத் தோன்றியதே தமிழ்த் தேசிய இயக்கம். தங்கள் உரிமைகளை நிலைநாட்டுவதற்குத் தமிழர்கள் போராட்டங்களை நடத்தினார்கள் இலங்கைத் தமிழர்களின் கோரிக்கைகளுக்கும், போராட்டங்களுக்கும் வலுவான ஆதரவினை வழங்கியவர்களில் ராஜாஜி முதன்மையானவர். தமிழ் மொழியும் இலங்கையில் ஓர் ஆட்சி மொழியாகவேண்டும் என்று அவர் நெடுங்காலம் வலியுறுத்தி வந்தார். இலங்கைத் தமிழர்களின் உரிமைகளையும் அடையாளத்தையும் பேணுவதற்கு ஒரு சமஷ்டிமுறையான அமைப்பு அவசியமானது என்பது அவரது உறுதியான சிந்தனையாகும். இலங்கைத் தமிழருக்கு நேர்ந்த கொடுமைகளை அவதானித்து அவற்றை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்த முதலாவது வெளிநாட்டுத் தலைவர் என்ற சிறப்பு இந்திராகாந்தி அம்மையாருக்கு உரியதாகும். மற்றத் தேசங்களின் தலைவர்கள் மௌனம் காத்தனர் என்பதை நாம் மறந்துவிடவில்லை.

1983 இல் ஏற்பட்ட கொடுமையான, தமிழருக்கு எதிரான இனக்கலவரங்கள் நெடு நாள்களாக நடைபெற்றன. அச்சமயத்தில் இலங்கையின் ஜனாதிபதி தேசத்தவருக்கு வானொலியில் ஆற்றிய உரை எரிகின்ற நெருப்பில் எண்ணெய் வார்ப்பது போலாகிவிட்டது. கலவரங்கள் உக்கிரமடைந்த வேளையில் இந்திய வெளிநாட்டு அமைச்சரான நரசிம்மராவ் கொழும்புக்கு வந்தார். "இதனை நீங்கள் அடக்கப்போகின்றீர்களா? அல்லாவிடின் நாங்கள் அடக்க வேண்டுமா?" என்று கேட்டார். அதன் பின்புதான் நாங்கள் அகதிமுகாம்களில் இருந்து எங்கள் வீடுகளுக்குத் திரும்ப நேர்ந்தது; மறக்க முடியாதது; ஆனால் இது இன்றைய இளைஞர்கள் அறிந்திராத விடயம். 1983ஆம் ஆண்டு கலவரங்களின் பின்பு இலங்கை அரசாங்கம் வடக்கு, கிழக்கு மாகாணங்களின், மாவட்டங்களின் நிர்வாகத்தை இராணுவ மயமாக்கியது. அதன் விளைவாக உள்நாட்டுப்போர் தொடங்கி உக்கிரமடைந்தது. போரினாற் பல கொடுமைகள் நிகழ்ந்தன. இந்தியப்பிரதமராக ராஜீவ்காந்தி பதவி பெற்ற பின்பு இலங்கைத் தமிழர்களை அழிவிலிருந்து பாதுகாப்பதற்கு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று எதிர்க்கட்சிகளின் தலைவர்களான அடல் பி. வாஜ்பாய், உலோதளம் தலைவர் சரண்சிங் முதலானோர் உரத்த குரலில் வலியுறுத்தினார்கள்.

அந்நாள்களில் இஸ்ரேலியின் உளவுப்படையான "மொஸாட்" அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறுவதற்கு அழைக்கப்பட்டிருந்தது. பெரும் வல்லரசொன்றின் தூதரகத்தில் அவர்கள் தங்கியிருந்து செயற்பட்டனர். இளைஞர்களில் பத்துப்பேரைக் கொன்றால் அவர்களில் ஒருவர் பயங்கரவாதியாக இருக்கக் கூடும் என்பதே அவர்களின் அதிதுரோகமான ஆலோசனையாகும். அதன் பயனாக ஆயிரக்கணக்கான இளைஞர்கள் சொல்லமுடியாத கொடுமைகளையும் சித்திரவதைகளையும் அனுபவிக்க நேர்ந்தது. அது வர்ணிக்கமுடியாத, மிகுந்த சோகமான நீளமான கதை. கைது செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான அப்பாவி இளைஞர்கள் பூசா போன்ற சித்திரவதை முகாம்களுக்குக் கொண்டு சென்றார்கள்.

1987 இல் இராணுவம் வடமராட்சியைக் கைப்பற்றிய பின் 8000 பொதுமக்கள் இல்லாது போய்விட்டனர். அதன் பின் யாழ்ப்பாண நகரைக் கைப்பற்ற ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதில் 50,000 பேர் வரை இறக்க நேரிடுமென்று துணைப் பாதுகாப்பு அமைச்சரான அத்துலத்முதலி பகிரங்கமாகவே சொன்னார்.

இந்த நிலையிலே அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தர் ஆகியோரின் வினயமான வேண்டுகோளுக்கிணங்கிய இந்தியப் பிரதமரால் இலங்கை அரசின் போர் நடவடிக்கைகளை நிறுத்திக்கொளும் வகையில் இந்திய-இலங்கை ஒப்பந்தம் எழுதப்பட்டது. அதில் மூன்று பிரதானமான அம்சங்கள் அடங்கியிருந்தன.

1. **இலங்கை சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் என்னும் நான்கு இனத்தவர் வாழுகின்ற நாடு. அவர்களில் ஒவ்வொரு சமூகத்தவரும் தங்கள் மொழி, பண்பாடு, பாரம்பரியங்கள் என்பவற்றைப் பேணிவளர்க்கும் உரிமை கொண்டவர்கள்.**
2. **வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ்பேசும் மக்களின் வரலாற்று வதிவிடமானவை.**
3. **சிங்களம், தமிழ், அங்கிலம் ஆகியவை இலங்கையின் அரசகரும மொழிகளாக அமையும்.**

அவற்றின் காரணமாக ஓரின மயமாக்குதலுக்கு அடிப்படையான 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் அடித்தளங்கள் சீர்குலைந்தன. அதிலுள்ள சிங்களம் மட்டுமே அரசகரும மொழியாகும் என்ற நியதி கைவிடப்பட்டது. அதற்குப் பதிலாக மூன்று மொழிகள் அரசகரும மொழிகள் என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டது.

உடன்படிக்கையின் இரண்டாவது அம்சத்தின் மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் இலங்கைத் தமிழர் ஓர் தேசிய இனம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. உடன்படிக்கைகள் மூலம் இலங்கை ஒரு பல்லின சமூகங்கள் வாழும் நாடு என்பதும் இரு சாராராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

இலங்கையில் எல்லாச் சமூகங்களிடையிலும் சமத்துவத்தையும், அவற்றின் சமூகப் பண்பாட்டு உரிமைகளையும் பேணிக் கொள்வதற்கு இந்த உடன்படிக்கை அடிப்படையானது, அவசியமானது என்பதில் இரு வேறு கருத்துகளுக்கு இடமில்லை. மாகாணசபைகளின் நிறுவனம் உடன்படிக்கையின் பிரதானமான அம்சமாகும். அது அதிகாரப் பகிர்வு தொடர்பானது. வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்கும் திருகோணமலையினை அதன் தலைமை நிர்வாக நிலையமாக்குவதற்கும் இந்திய அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதுவே முற்காலத்தில் தமிழரின் பெருந்தலைவரின்(செல்வநாயகம்) குறிக்கோளாக அமைந்தது.

இணைந்த மாகாணசபையின் நிர்வாகத்தைப் போராளிக் குழுக்களில் முதனிலையானவர்களுக்கு கொடுக்க முன்வந்தார்கள். அரசாங்கமும் இணங்கியது. ஆனால் அவர்கள் அதை நிராகரித்து விட்டார்கள். வீழ்ந்த ஒரு சமுதாயம் எதனைப்பற்றியும் பேரம் பேசவியலாது. இந்த நிலையில் இந்தியஇலங்கை ஒப்பந்தம் மட்டுமே எமது பாதுகாப்புக்கு எஞ்சியுள்ள சாதனமாகும். அதையும் கைவிட்டால் எதிர்காலத்தில் வடக்கு, கிழக்கில் தமிழர்களின் வாழ்வுரிமை பற்றிப் பேசுவதற்கு எவருமே இருக்கமாட்டார்கள்.

தற்சமயம் தென்னிலங்கையில் உள்ள நிர்வாக அதிகார வர்க்கத்தின் ஒரு பிரிவினர் நாசிசப் பாணியில் இலங்கைத் தமிழரின் அடையாளங்களையும் குடித்தொகைச் செறிவினையும் சீர்குலைக்கும் ஆக்கிரமிப்புக்களிலும் அநீதிகளிலும் ஈடுபடுகின்றனர். அரச அதிபருக்கும் நீதித்துறைக்கும் கட்டுப்படாது அராஜகம் புரிகின்றனர். இப்பொழுதுள்ள சூழ்நிலையில் தமிழ்பேசும் மக்களின் இருப்பினையும் குடித்தொகைச் செறிவினைப் பேணுவதற்கும் முதன்மையளிக்க வேண்டியது ஒரு கட்டாயத் தேவையாகும்.

அதனால் அரசியல் கட்டமைப்பிலுள்ள மாகாணசபைகளை, அவற்றுக்கு வழங்கிய முழுமையான அதிகாரங்களோடு மீளுருவாக்கம் செய்ய வேண்டியமை ஒரு கட்டாயமான தேவையாகும். காணி உரிமை, கடல்வளம், பொலிஸ் அதிகாரம், சுகாதாரத் தேவைகள், நிர்வாக ஆதிக்கம், பொதுக் கல்வி, மாகாண மட்டத்திலான கைத்தொழில்கள், போக்குவரத்து என்பவையும் மாகாணங்களுக்கு வழங்கிய 13 ஆம் திருத்தச் சட்டத்தில் அடங்கும். அதன் குறைபாடுகள் எல்லோரும் அறிந்தவை. இலங்கை ஜனாதிபதியாலும் ஒப்புக்கொள்ளப்பட்டவை. முழுமையான சுயநிர்ணய உரிமை வழங்கப்படாதவிடத்து மாற்று வழியே இறுதியான வழி என்பது ராஜீவ்காந்தியின் இறுதிக்கால நிலைப்பாடு என்பது இங்குள்ள பலர் அறிந்து கொள்ளாத விடயமாகும்.

13 ஆவது திருத்தத்தின் முழுமையான அமுலாக்கத்துக்கும் இனப்பிரச்சினைக்குரிய இறுதியான தீர்வு பற்றிய யோசனைகளுக்கும் தொடர்பில்லை. அவற்றைத் தொடர்புபடுத்திப் பேசுவது மக்கள் மனத்திலே குழப்பத்தை ஏற்படுத்தும் பொறுப்பற்ற செயலாகும். அரசியலமைப்பு நிர்ணயசபை ஒன்று அமைக்கப்படும் சாத்தியம் இப்போது இல்லை. அவற்றுக்கான சபை கூடுமிடத்து அவற்றைப் பேசிக்கொள்ளமுடியும். இப்பொழுது அதைப் பேசுவதால் உள்ளதும் கெட்டுப்போகும்.

புதியதாகக் கேட்பதற்கு ஒன்றுமில்லை. முன்நிபந்தனைகளை வைப்பது அரசியல் அனுபவம் இல்லை என்பதன் அடையாளம். முன்பு அரசாங்கங்கள் உருவாக்கிய நகல் வரைவுகளையும் சர்வதேச மட்டத்தில் வழங்கிய உத்தரவாதங்களையும் 'ஒஸ்லோ' பிரகடனத்தையும் நடைமுறைப்படுத்துமாறு சொல்லவேண்டும். சந்திரிகா அம்மையார் தலைமையிலே உருவாக்கப்பட்ட சமஷ்டிமுறையிலான திட்டத்தை நாம் ஏற்றுக்கொள்ள முடியாத காரணங்களை வெளிப்படையாகச் சொல்ல வேண்டிய காலம் இதுவாகும். அதை மூடி மறைத்துக்கொண்டு இப்பொழுது அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு பற்றிப் பேசுவது ஓர் ஏமாற்று வித்தையாகும். 1987இல் ஏற்பட்ட நடவடிக்கைகளைச் சீர்குலைத்தவர்களே மீண்டும் அதன் முழுமையான அமுலாக்கத்தை தடைசெய்வதற்கான செயற்பாடுகளில் இறங்கியுள்ளனர் போலத் தெரிகின்றது. தமிழ்ச் சமுதாயம் இந்தச் சதிக்குள் வலைப்படுமாயின் அதன் 2500 வருடகால வரலாறு அஸ்தமனமாகும் என்பதை எம்மவர்கள் உணர்ந்துகொள்ள நேரிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# 2 நாட்டுப்புற உணவுப் பண்பாட்டில் கூழ்

பேராசிரியர் வ.மகேஸ்வரன்



ஔவை என்ற பெயரில் பல பெண்பாற் புலவர்கள் காலத்துக்குக் காலம் தமிழ்ச் சூழலில் இயங்கி வந்தபோதும் மேற்குறித்த கூழுடன் தொடர்புடைய ஔவை,மத்திய காலத்தைச் சேர்ந்தவளாக இருக்கவேண்டும். கம்பர், ஒட்டக்கூத்தர்,புகழேந்தி ஆகிய மூவரும் நிலைபெற்ற சோழர் காலத்தில் வாழ்ந்த புலவராகவே அவர் இனங் காணப்படுகின்றார். ஔவைக்கும், கம்பருக்கும், ஒட்டக்கூத்தருக்குமிடையே நடைபெற்ற வாதப்பிரதிவாதங்கள் தனிப்பாடல் திரட்டில் விஸ்தாரமாகப் பேசப்படுகின்றன. இந்தவகையில் தான் ஔவைக் கிழவி கூழுக்காகக் கவி பாடும் கிழவியாக அறிமுகமாகிறாள். கம்பர் மிகவும் புகழ்பெற்ற காரணத்தால் அவரைக் கொண்டு தன்னைப் புகழ்ந்து பாடும்படி சிலம்பி என்ற தாஸி வேண்டினாள் என்றும், அதற்கு கம்பர் உடன்பட்டார் என்றும், ஆனால் சிலம்பி வழங்கிய சன்மானம் போதாமையால் கம்பர் சிலம்பி பற்றி புகழ்ச்சிப் பாடலில் ,

**"தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே**
**மண்ணாவதும் சோழமண்டலமே..."**

என்னும் குறைப்பாடலைப் பாடினார் என்றும் அது சிலம்பிக்கு கவலையளித்தது என்றும், இதேகாலத்தில் ஔவையார் வழிநடைக் களைப்பால் சிலம்பியின் வீட்டுத் திண்ணையில் தங்கியபோது சுவரில் எழுதப்பட்டிருந்த குறைப்பாடலைப் பார்த்து விபரம் கேட்டு, சிலம்பி வார்த்த கூழைக் குடித்து விட்டு அந்தக் குறைப்பாடலை,

**"பெண்ணாவாள்**
**அம்பொற் சிலம்பி அரவிந்தத் தாள் அணியும்**
**செம்பொற் சிலம்பே சிலம்பு"**

என்று பாடி முடித்தாள் என்றும், இதனால் கோபம் கொண்ட கம்பர் 'கூழுக்குப் பாடி என் குடியைக் கெடுத்தாளே ' என்று விசனப்பட்டதாகவும் அந்தக்கதை கட்டப்பட்டுள்ளது. (தனிப்பாடல் திரட்டு) சமகாலத்தில் கூழுக்குப்பாடி என்ற சொல்லடை தமிழில் வழங்கி வருகின்றது. தனது நன்மைக்காக, வருவாய்க்காக, ஒரு பக்கம் சார்ந்து செயற்படுபவரை ஏளனம் செய்யும் தொனியில் அந்தச் சொல்லடை வழங்கி வருவதையும் அவதானிக்கலாம்.

தமிழகத்திலும் இலங்கையிலும் கோயில்களுடன் தொடர்புபட்டதாகக் கூழ் வார்த்தல் என்ற சம்பிரதாயம் இடம்பெறுகின்றது. பொதுவாகச் சிறு தெய்வக் கோயில்களில் இந்தச் சடங்கு நடைபெறுகின்றது. வெயிற் காலங்களில் அம்மை முதலிய தொற்று நோய்களினால் மக்கள் அவதியுறும்போது பெண் தெய்வக் கோயில்களில் கூழ் வார்த்தல் சடங்கு இடம் பெறுகின்றது. பெரும்பாலும் கேழ்வரகுக் கூழ் இங்கு வழங்கப்படுகின்றது. இலங்கையிலும் மலையகத்திலும் இந்தச் சடங்கு பின்பற்றப்படுகின்றது. மட்டக்களப்புத் தமிழகத்திலும் இந்த வழக்கம் தற்போதும் இடம்பெற்று வருகின்றது. தமிழகத்தில் கோடைக் காலங்களில் வழிப்போக்கர்களது தாகம் தணிக்க கூழ் வார்த்தல் இடம்பெறுகின்றது. குறிப்பாக இராமலிங்க வள்ளலார் பெயரில் இயங்கும் சன்மார்க்க சபையைச் சேர்ந்த தொண்டர்கள் தமிழகக் கிராமத்துப் பெருவழிகளிலும் இவ்வாறான செயற்பாட்டை நிகழ்த்துகின்றனர். இங்கேயும் கேழ்வரகுக் கூழே வார்க்கப்படுகின்றது.

இலங்கையில் கூழ் என்ற உணவுப் பண்பாடு ஆடிக் கூழ் என்ற பண்பாட்டின் வழிமேல் நிலைப்படுத்தப்பட்டதை அவதானிக்கலாம். ஆடி மாதப் பிறப்பு என்பது இந்துக்களால் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இந்த மாதத்தில் மூதாதையர்களான பிதிர்களின் பிரசன்னம் அதிகமாக உண்டு என்ற நம்பிக்கை இந்துக்களிடம் உண்டு. எனவே, இக்காலத்தில் அவர்களுக்கு கூழ், கொழுக்கட்டை ஆகியவற்றை நிவேதிக்கும் வழக்கம் நிலவி வருகின்றது. தமிழகத்தில் ஆடிக் கொழுக்கட்டை, விநாயகர் சதுர்த்தி கொழுக்கட்டை மிகவும் பிரசித்தமானது. ஆயின் இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஆடிக் கொழுக்கட்டையை விட ஆடிக்கூழ் மிகவும் பிரசித்தமானது. யாழ்ப்பாணத்தில் தமிழ்ப் புலவர் தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவர் யாழ்ப்பாணப் பண்பாட்டு அம்சங்களை உள்ளடக்கிய பல கவிதைகளைப் படைத்துள்ளார். அவற்றுள்,

**"ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை**
**ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே**
**கூடிப் பனங்கட்டி கூழும் குடிக்கலாம்**
**கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே"**

(சிறுவர் செந்தமிழ், செந்தமிழ் அமுதம், பக் 56,57)

என்று தொடங்கும் பாடல் மிகவும் பிரசித்தமானது. இந்தப் பாடல் யாழ்ப்பாணத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற பனங்கட்டிக் கூழ் பற்றிப் பிரஸ்தாபிக்கின்றது. சோமசுந்தரப் புலவர் பனங்கட்டிக் கூழின் செய்முறையையே அந்தக் கவிதையில் விஸ்தாரமாகப் பேசிவிடுகின்றார். யாழ்ப்பாணத்து நெல்லரிசி மா, பாசிப்பயறு, பனங்கட்டி இவற்றை மூலப்பொருளாகக் கொண்டு அது சமைக்கப்படுகின்றது. ஆடிக்கூழாகிய பனங்கட்டிக்கூழ் யாழ்ப்பாணத்து உணவுப் பண்பாட்டின் மிக முக்கியமான அடையாளமாக இன்று வரை நிலைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சோமசுந்தரப்புலவர் " பஞ்சக் கூழ்" எனும் ஒரு பாடலையும் பாடியுள்ளார். 1920 இல் யாழ்ப்பாணத்தில் நிலவிய பஞ்சத்தில் ஒரு குடும்பம் வறுமையால் உண்ட கூழுணவு பற்றி அது பேசுகிறது. முசுண்டை,குப்பைக்கீரை, முருங்கை இலை மற்றும் தவிடு சேர்த்து குண்டானில் காய்ச்சிய கூழ் பற்றி மிக வருத்தத்துடன் அது பாடப்பட்டுள்ளது.

## ஒடியற்கூழ்

பனங்கட்டிக்கூழ் ஒரு வகையில் சமயப் பண்பாட்டுடன் இணைய ஒடியல்கூழ் இன்னோர் வகையில் அதன் எதிர் உணவாக அமைவதனை அவதானிக்கலாம். ஒடியல் கூழின் மூலப் பொருள் ஒடியல்மா ஆகும். இதுவும் பனம் பொருளிலிருந்து தான் பெறப்படுகிறது. ஒடியல் மாவுடன் மரக்கறி வகைகள் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் விளையும் மரவள்ளிக்கிழங்கு, பயற்றங்காய் ,பலாய்க்காய்ச்சுளை மற்றும் பலாக்கொட்டை ,முருங்கை இலை இவற்றைச் சேர்த்து சமைக்கப்படுவது சைவக்கூழ் எனப்படும். மேற்குறித்த பதார்த்தங்களுடன் யாழ்ப்பாணத்துக் கடல் நீரேரிகளில் பிடிக்கப்படும் இறால்,நண்டு,சிறுமீன் என்பவற்றையும் சேர்த்துச் சமைப்பது அசைவக்கூழ் ஆகும். எனினும் ஒடியற்கூழ் என்றால் அது கடலுணவுகளைச் சேர்த்துச் சமைக்கும் கூழையே குறிக்கும். பனங்கட்டிக்கூழ் சமய சடங்காசாரத்துடன் இணைய ,ஒடியற்கூழ் ஒட்டுமொத்த யாழ்ப்பாணத்துச் சமூகத்தின் உணவு அடையாளமாக விளங்குகின்றது. இந்த ஒடியற் கூழ் காய்ச்சும் முறை டானியலின் நாவல் ஒன்றில் சித்திரிக்கப்படுவதை இங்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். மேலும் யாழ்ப்பாணத்து பெரும் புலவர்களுள் ஒருவராக இருந்த ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை , மலையகத்தில் நிவிற்றிக் கலையில் கடமையாற்றிய யாழ்ப்பாணத்து வைத்தியர் ஒருவரது வீட்டில் குறித்த ஒடியல்கூழ் பற்றி கொண்டாடினான் ஒடியல்கூழ் என்ற தலைப்பில் பாடிய தனிப் பாடல்ஒன்று கிடைத்துள்ளது.

**" அல்லற்றுக் கண்டிக்கு அப்பால் நிவிற்றிக்**
**கொல்லைக்குப் போயனுப்புக் கொண்டதனால் கல்லடியான்**
**வண்டாரும் மாலையணி மற்புயச் சுப்பையனுடன்**
**கொண்டாடினான் ஒடியற் கூழ் "**

பனங்கட்டிக்கூழ், ஒடியற்கூழ் என்ற இரு உணவுப்பண்பாட்டின் அடிப்படை மூலப்பொருளாக அமைவன பனம்பொருட்களான பனங்கட்டியும் ஒடியலும் ஆகும். பனையின் பாளையில் இருந்து வடியும் கள்ளை பதனீர் ஆக்கி பின் அதனைச் சீராக காய்ச்சிப் பெறுவதே பனங்கட்டி. தமிழர் மரபுகண்ட இனிப்புப்பண்டம் கரும்பில் இருந்து சீனி வரும் முன் இனிப்புப் பண்டமாக விளங்கியது பனங்கட்டி . இதனை சுவைபொருளாகக் கொண்டு பனங்கட்டிக் கூழ் ஆக்கப்பட்டது.

பனங்கொட்டையில் இருந்து விளையும் பனங்கிழங்கையும் பச்சையாகக் காய வைத்தால் அது ஒடியலாகின்றது. கிழங்கை அவித்துக் காய வைத்தால் அது புழுக்கு ஒடியல் புழுக்கொடியல் ஆகின்றது. இதில் பச்சை ஒடியலைப் பதமாக எடுத்து (தற்போது அரைத்து) பெறுவதே ஒடியல் மா. இந்த மாவிலிருந்து பல்வேறு உணவுப் பண்டங்கள் தயாரித்து பண்டைத் தமிழர் உணவாக உண்டனர். மைதா மாவுப்பிட்டு அறிமுகமாக முன் ஒடியல் மாவுப் பிட்டே தமிழர் மத்தியில் பெரும்பான்மையாக அறியப்பட்ட உணவாக நிலைத்தது. இந்த ஒடியல் மாவே ஒடியல் கூழின் பிரதான மூலப்பொருளாக அமைந்தது. எனவே பனம்பொருள், யாழ்ப்பாணத்து உணவுப் பண்பாட்டின் மூலவேராக விளங்கியமை இதனூடாக அறியலாம்.

## கூழும் சமயப் பண்பாடும்

இன்னொரு வகையில் கூழை சமயப்பண்பாட்டுடன் இணைக்கலாம் போலத்தெரிகிறது.ஆசாரம் எதிர் ஆசாரமின்மை அல்லது சைவம் எதிர் அசைவம் என்ற கருத்து நிலையிலும் இதனைக் கட்டமைக்கலாம். யாழ்ப்பாண சமூகமைப்பில் ஆரம்ப காலங்களில் மது, மாமிசம் என்பவை பிரதான பாவனைப் பொருளாக இருந்து வந்துள்ளன. எனினும் ஆறுமுகநாவலர்வழி கட்டமைக்கப்பட்ட சைவ கருத்தியல், விரதம்,ஆசாரம்,கோயில் விழா என்ற அடிப்படையில் மேற்கிளம்பியபோது ,அசைவ உணவு பல சந்தர்ப்பங்களில் ஒதுக்கப்பட்டபோது, ஒடியற்கூழின் மாற்றாக பனங்கட்டிக் கூழ் முன்னிறுத்தப்பட்டிருக்கலாம் என எண்ண இடமுண்டு. ஏனெனில் பனங்கட்டிக்கூழ் பற்றிய குறிப்புக்கள் தமிழ்ச் சூழலில் எங்கும் காணப்படவில்லை. ஆயின் சிறு தானியங்கள் மாவினால் உருவாக்கப்பட்ட கூழின் வழி வந்த நெல்லரிசி மாக்கூழ் உருவானபோது அதனுடன் பனங்கட்டியும் இணைத்து புதுவிதமான உணவுக் கலாசாரம் ஒன்றை உருவாக்கியிருக்க வேண்டும். அதை சைவக் கூழாகவும் ஆடிப் பிறப்புக் கூழாகவும் பிதிர்களுக்குப் படைக்கும் கூழாகவும் பெருநிலைப்பட்டது. ஆயின் ஒடியற் கூழ் எளிமையான உணவாகவும் கடல்படு திரவியங்களுடன் சேர்த்து சமைப்பதனால் அசைவக்கூழ் என்ற எதிர்க்கருத்துநிலையைப் பெற்று விடுகின்றது. ஆயின் பனங்கட்டிக் கூழ் போல் வருடத்துக்கு ஒரு முறை காய்ச்சுதல் என்ற கருத்துக்கு அப்பால் ஒடியற்கூழ் வேண்டும்போதெல்லாம் காய்ச்சலாம். உழைக்கும் மக்களின் அன்றாட எளிமையான உணவாக அது நிலவியது. சிறு தானியங்கள் அல்லது நெல்லரிசி அல்லது கிழங்கு வகைகளைக் கொண்டு தமது வயிற்றை நிரப்ப முடியாத ஏழ்மையிலிருந்து பல குடும்பங்க ளின் அன்றாட உணவாக இந்த ஒடியற் கூழ் யாழ்.மாவட்டத்தில் புழக்கத்தில் இருந்துள்ளது.

கூழ்ப்பானை, கூழ்க்குண்டான், கூழ்ச்சட்டி, பலாவிலை , கோதிக் கூழ் குடித்தல், பனம்பழ மூழில் கூழ் குடித்தல், கூடியிருந்து கூழ் குடித்தல், சுடச்சுட கூழ் குடித்தல் என்பன யாழ்ப்பாண உணவுப் பண்பாட்டின் எச்சங்களாக அண்மைக்காலம் வரை நிலைத்தன.

ஆயின், நெல்லரிசி மாவின் பரவற் பாவனையும் கோதுமை மாவின் வரவும் இந்த உணவைப் புறந்தள்ள வைத்துள்ளன. மேலும் பனம் பொருட்களின் உற்பத்தியும் அதன் பயன்பாடும் குறைந்து போயின. இதனால் கூழ் பொது மக்களின் வாழ்விலிருந்து அந்நியப்பட்டுப் போனது. பனம் பொருட்களின் உற்பத்தி குறைந்த போது ஒடியல் மா அருந்தல் பொருளானது. ஒடியல் கூழ் காய்ச்சும் தொழினுட்பம் பெண்களிடமிருந்து தூரவிலகிப் போய்விட்டது. இன்று ஒடியல் கூழ் காய்ச்சுவது பெரும் செலவான விடயமாகிவிட்டது. எனினும் யாழ்ப்பாணத்து உணவுச் சாலையில் ஒடியல் கூழ் பேசுபொருளாகியுள்ளது. எனினும் அதன் சுவையும் அதற்கான பண்பாடும் தொலைந்து போய்விட்டன. மரபணுக்களில் பேணப்பட்ட சுவையின் வழி ஒடியற் கூழ்.பனங்கட்டிக் கூழ் என்பவற்றின் மணத்தையும் சுவையையும் நாசிகளில் சுமந்தபடி கூழுக்காக ஏங்குகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் சுடர்




மாணவர்களே!

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

## நிரப்புவோம்






## பூட்டும் சாவியும்

சாவியைப்பார்த்து, சுத்தியல் கேட்டது. "உன்னைவிட நான் வலிமையானவனாக இருக்கிறேன்.
ஆனாலும் ஒரு பூட்டைத் திறக்க நான் மிகவும் சிரமப்படுகிறேன்.
ஆனால் நீ சீக்கிரம் திறந்து விடுகிறாயே அதெப்படி?"
அதற்கு சாவி சொன்னது. "நீ என்னை விட பலசாலிதான்.
அதை நானும் ஒப்புக் கொள்கிறேன். பூட்டைத் திறக்க நீ அதன் தலையில் அடிக்கிறாய்.
ஆனால் நான் பூட்டின் இதயத்தைத் தொடுகிறேன்" என்றதாம்.



## தேனீக்கள்

- தேனீக்கள் தங்களின் தேவையைவிட 2 அல்லது 3 மடங்கு அதிகமான தேனை உற்பத்தி செய்கின்றன.
- தேனீக்கள் தம் வாழ்நாளில் ஒருமுறைதான் கொட்டுகின்றன.
- உயரமான மரப்பொந்துகள், மரக்கிளைகள், பொருள்களின் நுனிப் பகுதிகளில் தேனீக்கள் கூடுகளைக் கட்டுகின்றன.
- வேலைக்காரத் தேனீக்கள்தாம் கூடுகளைக் கட்டுகின்றன. பூந்தேனைச் சேமிக்கின்றன. கூட்டைச் சுத்தமாக வைத்திருக்கின்றன.
- ஆண் தேனீ ராணித் தேனீயுடன் குடும்பம் நடத்தி, இனப்பெருக்கத்துக்கு உதவி செய்துவிட்டு, சில வாரங்களில் இறந்தும் போய்விடுகிறது.
- ஒரு ராணித் தேனீ ஒரே நாளில் 2,500 முட்டைகள் வரை இடக்கூடியது. தன் வாழ்நாளில் சுமார் 8 லட்சம் முட்டைகளை இடுகிறது.
- ஒரு கூட்டுக்கு ஒரு ராணித் தேனீ மட்டுமே இருக்கும். ஒரு கூட்டில் இருக்கும் ராணி இறந்து போனால், வேறு ராணியைத் தேர்வு செய்யவேண்டும். அதற்காகச் சில புழுக்களுக்குச் சிறப்பு உணவைக் கொடுத்து, தயார் செய்து வைக்கின்றன வேலைக்காரத் தேனீக்கள்.
- புதுராணி உருவானவுடன் பழைய ராணித் தேனீ, பாதி வேலைக்காரத் தேனீக்களை அழைத்துக்கொண்டு, புதிய கூட்டை உருவாக்கும். புது ராணி பழைய கூட்டில், மீதி இருக்கும் வேலைக்காரத் தேனீக்களுடன் வசிக்கும். தேவை ஏற்படும்போது, தகுந்த இடத்தைத் தேர்வு செய்து, புதுக்கூட்டை உருவாக்கும்.
- ஒரு கூட்டில் சுமார் 50 ஆயிரம் தேனீக்கள் வசிக்கின்றன.



## ஆறுமுகநாவலர்

ஆறுமுகநாவலர் யாழ்ப்பாணம் நல்லூர் என்னும் ஊரில் 1822 டிசம்பர் 18 இல் கந்தப்பிள்ளை சிவகாமி அம்மையார் தம்பதிகளுக்கு இறுதி மகனாகப் பிறந்தார். நாவலரின் இயற்பெயர் ஆறுமுகம் என்பதாகும். நாவலருக்கு நான்கு சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் இருந்தனர்.

ஆறுமுகநாவலர் தமிழ் உரைநடை செவ்விய முறையில் வளர்வதற்கு உறுதுணையாய் நின்றவர். நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயரிடம் நீதி நூல்களையும் தமிழையும் கற்றார். ஒன்பதாவது வயதில் தந்தையை இழந்தார்.

பன்னிரண்டாவது வயதிலேயே தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றுப் புலமை பெற்றார்.

தமது புலமையை வெளிப்படுத்தி நாவலர் பட்டத்தைப் பெற்றார்.

ஆறுமுகநாவலரின் முயற்சியால் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உருவாகின.

போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நகுலேஸ்வரம் எனும் பழைமையான சிவபெருமான் திருக்கோயிலை மீண்டும் உருவாக்க முயற்சி செய்தார்.

டிசெம்பர் 5, 1879 தனது 56 ஆவது அகவையில் மறைந்தார்.

வ.அபிநயன், தரம் -7D
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி



யதுசன்
யா/ வேலாயுதம் மகா வித்தியாலயம்



பு. ஜீவேந்திரன்,
தரம் - 8
யா/ இந்துக் கல்லூரி.



ர.மோகன்,
தரம் -4
யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்




எஸ்.சதுர்சன்,
யா/ மந்துவில் ஆர்.சி.ரி.எம். பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதம் கேட்ட சாமி



○ கோகுலராகவன்




**2012** இல் அவசரமாக கொழும்பு போக வேண்டி இருந்தது. இரவு மெயில் ரயில். ரயிலில் போவது போன்ற துயரமான பிரயாண அனுபவம் வேறில்லை.
ஆட்களோ, புகையிரத நிலைய அதிபரோ இல்லாத ஒவ்வொரு நிலையங்களிலும் நிற்கும். சரி புறப்படுகிறது என்றால் அடுத்த நிலையத்தில் சட்டென்று நின்று விடும்.
பிறகு "டமால்" என்று ஒரு இடியோடு திடுக்கிட வைத்து புறப்படும். ஏன் இடிக்கிறது? யாருக்குத் தெரியும்?.
இந்தமுறை பயணத்தில் எனது பக்கத்து ஆசனத்தில் ஒரு புதியவர் இருந்தார்.
பேசத் தொடங்கினோம்.
எனக்குச் சற்றும் சளைத்தவர் அல்லர் அந்த மனிதர்.
நல்ல கதைகாரர். பருத்தித்துறை தம்பசிட்டி பக்கம். ஓய்வு பெற்ற சங்கக் கடை முகாமையாளர். தன் பெயர் தங்கராசா என்று சொன்ன ஞாபகம். மகனுக்கோ மகளுக்கோ பொருள்கள், பலகாரம் கொடுத்து விட வந்து கொண்டிருந்தார்.
எனக்கு கொழும்பு அவ்வளவாக அல்ல, துப்பரவாகவே தெரியாது .
தங்குவதற்கு இடம் வேறு இல்லை. லொட்ஜில் தனிய நிற்க முடியாது.
தங்கராசண்ணை தான் பிரபல்யமான இந்து விடுதி ஒன்றில் வழமையாகத் தங்குவதாகவும் அறை உடனே எடுக்கலாம் எனவும் அங்கு என்னையும் வரச் சொன்னார்.
இரண்டு பேரும் வெள்ளவத்தையில் இறங்கி விடுதி நோக்கி நடந்தோம்.
மழை வேறு தூறல் போட்டுக்கொண்டிருந்தது.
இரவு ஒன்பது மணியாகி விட்டது.
தங்கராசண்ணை என்னை இருக்கச் சொல்லி விட்டு , அறை எடுக்க வரவேற்புப் பகுதிக்குப் போனார்.கொஞ்ச நேரத்தில் திரும்பி வந்து,
"மாஸ்ரர் அறை எடுக்கேலாதாம்" என்றார்.
"ஏன்"
"சாமி கடுமையாக நிற்கிறார்."
"என்னெண்டு?"
"யாழ்ப்பாணத்தில் இவையின்ர கிளை விடுதியில் சிபார்சுக் கடிதம் வேணுமாம்."
'இனி மற்ற ரயில் பிடித்து யாழ்ப்பாணம் போய் கடிதம் எடுத்துவர முடியுமோ?'
மண்டைக்குள் கொதி கிளம்பியது.
மழை வேறு 'சோ'வென பெய்யத் தொடங்கியும் விட்டது.
"நான் கதைத்துப் பார்க்கட்டோ?"என்றேன்.
"ஓம்"
தங்கராசண்ணை தலையாட்டினார்.
நான் வரவேற்பு பகுதிக்குப் போனேன்.
சாமியார் வெள்ளைக்கார மனிதர்.
"சாமி அறை ஒன்று வேண்டும்."
சாமி தமிழில் பதில் கூறி உரையாடியது. ஆங்கில உச்சரிப்புக் கலந்த தமிழ் கேட்க இனிமையாக இருந்தது.
"யாழ்ப்பாண சாமியின் கடிதம் வேண்டும். இருக்கா?"
"இல்லை. அப்படி எடுக்க வேண்டும் என்று தெரியாது"
"அப்படி என்றால் றூம் கிடைக்காது."
"இல்லை, அப்படிச் சொல்ல வேண்டாம். மழை பெய்யுது இனி வேறு றூம் தேடி
போக முடியாது"
"அது உங்க பிரச்சினை"
"அடுத்த முறை கடிதம் வாங்கி வாறம்."
"அப்ப அடுத்த முறை றூம் தாறம் "
சாமி கடுஞ்சாமி.
தோலுக்கும் துறவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லையோ?
அப்போதும் எனக்கு ஆலயங்களில் ஈடுபாடு அதிகம்.
பளை கச்சார்வெளி பிள்ளையார் ஆலயத்தில் பொருளாளராக இருந்த காலம் .
இதைச் சாமியாரிடம் சொல்ல, சாமி மறுக்க முடியாமல் அறை ஒன்றை கொடுக்க முகாமையாளரிடம் சொல்லிவிட்டு எழுந்து போய்விட்டார். முகாமையாளர் கண் சிமிட்டினார்.
கோயில் பதவியைச் சொல்லி றூம் எடுக்க வேண்டியதாயிற்று.
தங்கராசண்ணை சிரித்தார்.
சில வருடங்களுக்கு முன்
தங்கராசண்ணையின் மரண அறிவித்தலை பத்திரிகையில் பார்த்தேன்.
அஞ்சலிக்கிறேன் தங்கராசண்ணை.

(இன்னும் கதைப்பம்)

# யாழ்ப்பாண வரலாறு




○ ந.பரமேஸ்வரன்

### 1943 பெப்ரவரி

இராணுவத்துக்கு ஆள் சேர்க்கும் பணிகள் தொடந்து நடைபெற்றன. இராணுவத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பயிற்சியின் பின் ஒரு நாளைக்கு 1.33 சதம் சம்பளமாக வழங்கப்பட்டது. அத்துடன் உணவு சீருடை, இலவச மருத்துவம், புகையிரத ஆணைச் சீட்டு என்பனவும் வழங்கப்பட்டன.இராணுவத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் அதற்கேற்ப சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டது.
அந்த விவரம் வருமாறு

இரண்டு பேர் கொண்ட குடும்பத்துக்கு 1.62சதம்
மூன்று பேர் கொண்ட குடும்பத்துக்கு 2.9 சதம்
நான்கு பேர் கொண்ட குடும்பத்துக்கு 2.38 சதம்
ஐந்து பேர் கொண்ட குடும்பத்துக்கு 2.57 சதம்

### 1943 ஏப்ரல்

விமானக்குண்டு வீச்சிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்குடன் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. விமானக் குண்டு வீச்சிலிருந்து மக்களைப் பாதுகாப்பது எப்படி என்ற துண்டுப்பிரசுரங்கள் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டதுடன் விமானக் குண்டு வீச்சிலிருந்து மக்களைப்பாதுகாக்கும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயிரக்கணக்கானோருக்கு முதலுதவிப்பயிற்சி அளிக்கப்பட்டது.ஆயிரக் கணக்கான தீயணைப்புக்கருவிகள் விநியோகிக்கப்பட்டன.குண்டு செயலிழக்கச்செய்யும் படையணி உருவாக்கப்பட்டது.குண்டு வீச்சின் பின்னர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய விழிப்புணர்வுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன.தீயணைப்புப்பிரிவுகள் பல உருவாக்கப்பட்டன. நவீன கட்டுப்பாட்டு அறைகள் இலங்கை முழுவதிலும் உருவாக்கப்பட்டன. அத்துடன் மக்களைப் பாதுகாக்கும் மண்டபங்களை உருவாக்கும்படியும், அதனை எவ்வாறு உருவாக்குவது என்பது பற்றியும் விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

### 1943 மே

குண்டுவீச்சிலிருந்து பாதுகாக்கும் நோக்குடன் சாக்குகள் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் கொள்வனவு செய்யப்பட்டன.

இராணுவத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் மதுபானம்,சவர்க்காரம்,பற்பசை போன்ற பொருள்களை பொது மக்களுக்கு விற்பனை செய்வது குற்றம் என பிரிட்டிஷ் அரசு அறிவித்தது.

சந்தேகத்துக்குரிய நபர்கள் யாராவது ஆயுதங்களுடன் சீருடையிலோ அல்லது சாதாரண உடையிலோ எங்காவது கரையோரத்தில் தரையிறங்கினால் அல்லது பரசூட் மூலம் தரையிறங்கினால் அல்லது பரசூட் மூலம் ஏதாவது பொதிகள் வீசப்பட்டால் கிராமசேவகருக்கோ உதவி அரசாங்க அதிபருக்கோ முதலில் அறிவிப்பவர்களுக்கு 5 ஆயிரம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என பிரிட்டிஷ் அரசு அறிவித்தது.

### 1943 ஜூன்

களனித்தொகுதி சட்டசபை உறுப்பினர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா 'சிங்களத்தை அரச கரும மொழியாக பிரகடனப்படுத்த வேண்டும், பாடசாலைகளில் சிங்களம் போதனா மொழியாக இருக்க வேண்டும்சகல பொதுப் பரீட்சைகளுக்கும் சிங்களம் கட்டாயப்படமாக்கப்பட வேண்டும்.சட்டசபையில் சிங்களத்தில் அமர்வுகள் நடத்த அனுமதிக்கப்பட வேண்டும்' என தனி நபர் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தார்.

### 1943 ஓகஸ்ட்

விமானக்குண்டு வீச்சு பாதுகாப்புப்பிரிவு தொலைபேசி இயக்குநர் பதவிக்கான விண்ணப்பங்கள் ஆண்,பெண் இருபாலாரிடமிருந்தும் கோரப்பட்டன. இதற்கான தகைமையாக ஆங்கிலமொழி மூலம் எட்டாம் தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும் எனக் கோரப்பட்டது. இந்தப் பதவிக்கு மாதம் 50 ரூபா சம்பளம் வழங்கப்பட்டது.இராணுவ சேவை எழுதுவினைஞர்,களஞ்சியக் காப்பாளர் பதவிகளுக்கும் விண்ணப்பம் கோரப்பட்டது. இதற்கான தகைமையாக ஆங்கில மூலம் ஆறாம் தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும் எனக் கோரப்பட்டது.இவர்களுக்கு நாளொன்றுக்கு சம்பளமாக இரண்டு ரூபா வழங்கப்பட்டது. இவர்கள் வெளிநாடுகளிலும் பணியாற்றத் தயாராக இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையுடனேயே பதவியில் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

### 1943 நவம்பர் 04

- பண்ணைப் பாலம் அமைப்பதற்கு 6 லட்சம் ரூபா நிதி சட்டசபையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. தொடர்பாடல் வேலைத் துறை அமைச்சர் கொத்தலாவல 6 லட்சம் ரூபா நிதியை விடுவிக்கும் தீர்மானத்தை சட்டசபையில் கொண்டு வந்தார். காங்கேசன்துறைப் பிரதிநிதி நடேசன் இந்தத் தீர்மானத்துக்கு நன்றி தெரிவித்தார்.
- யுத்தச்செலவுகளுக்கு நிதி திரட்டும் நோக்குடன் பிரிட்டிஷ் அரசாங்கம் யுத்தகால சேமிப்பு நிதி என்ற திட்டத்தை (சேமிப்புச்சான்றிதழ்களை)அறிமுகம் செய்து பணத்தை வைப்பிலிடுமாறு மக்களைக் கோரியது. இந்தத் திட்டத்தின் மூலம் ஒரு கோடி ரூபாவை திரட்டுவதற்கு ஆளுநர் திட்டமிட்டிருந்தார்.
- காரைநகரைச் சேர்ந்த மகேசன் சர்மா லண்டன் றோயல் வானிலை ஆய்வு நிலைய ஆய்வாளராக (Royal Astronomical Society fellowship)தெரிவு செய்யப்பட்டார். யாழ்ப்பாணத்திலிருந்து றோயல் வானிலை ஆய்வு நிலைய ஆய்வாளராகத் தெரிவு செய்யப்பட்ட இரண்டாவது ஆய்வாளர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவருக்கு முன்னர் அலன் ஆபிரகாம் இந்த ஆய்வுக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.


(வரலாறு தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்டெ சீவியத்திலிருந்து...

எஸ்.எல்.எம்.ஹனிபா

பாகம் 01




○ இயல்வாணன்

எள்ளலும், சுவையும் மிக்க மண் மணம் கமழும் படைப்புகளால் அறியப்பட்டவர் எஸ்.எல்.எம்.ஹனீபா. இவர் எழுதிய கதைகளை விட இவரால் சொல்லப்படுகின்ற கதைகளை நாள் முழுக்கக் கேட்டுக்கொண்டிருக்கலாம். திகட்டத் திகட்டச் சுவை கூட்டி அவர் சொல்லும் அழகே தனி. சு.வில்வரத்தினம் போல பாடவும் செய்வார். 'ஒவ்வொரு கணமும் உயிராற்றல் பீறிடும் இவரைப் போன்ற மனிதரை சமீப காலத்தில் நான் காணவில்லை' என்பது இவர் தொடர்பிலான ஜெயமோகனின் பார்வை.
மட்டக்களப்பு மாவட்டம் மீராவோடையின் சட்டிபானை தெருவில் தம்பி சாய்பு சின்னலெவ்வையின் மூன்றாவது மகனாக 01.04.1946 இல் எஸ்.எல்.எம்.ஹனீபா பிறந்தார். ஆற்றில் மீன் பிடித்து விற்கும் தொழில் புரிந்து வந்த இவரது தந்தையார் பின்னர் மூன்று கிராமங்களுக்கான முஸ்லிம் விவாகப் பதிவாளராகக் கடமையாற்றினார்.

ஹனீபா தனது ஆரம்பக் கல்வியை மீராவோடை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை ஓட்டமாவடி முஸ்லிம் கலவன் பாடசாலையிலும் கற்றார். ஹிதாயதுல்லாஹ் மௌலவியிடம் இஸ்லாமிய சமயக் கல்வியைக் கற்றார். தொழிற் கல்வியை கிளிநொச்சி விவசாயப் பாடசாலையில்(1966-67) பெற்றார்.
தொடர்ந்து மலேரியா ஒழிப்புப் பிரிவில் மேற்பார்வையாளராக தொழிலுலகுக்குள் நுழைந்தார். சிறிது காலத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கால்நடைப் போதனாசிரியர் பணியை ஆற்றினார். ஓராண்டின் பின்னர் 1969இல் விவசாய அபிவிருத்திப் போதனாசிரியர் நியமனம் கிடைத்து, கண்டி வத்தேகம, வாழைச்சேனை, கெக்கிராவ, புத்தளம், மட்டக்களப்பு, பொலநறுவை, வெலிக்கந்த, திரிகோணமடு ஆகிய இடங்களில் கடமையாற்றி 1990 இல் ஓய்வு பெற்றார். இவர் ஒரு குறுந்தூர ஓட்ட வீரராக அகில இலங்கை ரீதியில் விருதுகள் வென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. கால்நடை சார்ந்தும், விவசாயம் சார்ந்தும் ஆலோசனைகளை வழங்கி வரும் இவர் அவ்வப்போது அது தொடர்பில் எழுதியும் வந்துள்ளார்.
இவர் ஒரு இலக்கியக்காரனாக மட்டுமன்றி அரசியல்வாதியாகவும் விளங்கினார். அந்த அரசியலே இலக்கியத்தில் பேராளுமையாக உருவாகாமல் அவரை முடக்கி விட்டது என்றால் மிகையல்ல. அது பற்றி அவரே பிரஸ்தாபித்துள்ளார். இடதுசாரியச் சிந்தனைகளில் ஈடுபாடு காட்டிய இவர் இடதுசாரிகள் கூட்டுச் சேர்ந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குச் சார்பாக முதலில் மேடையேறினார். 1963இல் கல்குடா தொகுதி சுதந்திரக் கட்சிக் கிளையை உருவாக்கினார்.
1969இல் அக்கரைப்பற்றில் எம்.எச்.எம்.அஷ்ரப்பைச் சந்தித்ததையடுத்து அவர் பால் ஈர்ப்பு ஏற்பட்டது. 1970இல் அஷ்ரப் தலைமையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து அதில் முதன்மைப் பாத்திரம் வகித்தார். காங்கிரஸின் பிரசாரப் பீரங்கியானார்.
1989 இல் வடக்கு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். மூன்று ஆரம்பப் பாடசாலைகளை உருவாக்கியமை உட்படப் பல அபிவிருத்தி வேலைத்திட்டங்களைத் தனது பிரதேசத்துக்குச் செயற்படுத்தினார். அக்காலத்தில் மேற்கொண்ட அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் முகநூலில் இவர் பதிவு செய்துள்ளார்.
மட்டக்களப்பு பொதுநூலகம் இவரது ஆரம்பகால வாசிப்புக்குத் தீனி போட்டது. இவரது முதற் சிறுகதையான நெஞ்சின் நினைவினிலே 1962இல் ராதா சஞ்சிகையில் வெளிவந்தது.
இன்சான், இளம்பிறை, வீரகேசரி, சுதந்திரன், சுடர், சிந்தாமணி, கணையாழி, பூரணி, பாமிஸ், ராவய(சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டது) ஆகியவற்றிலும் இவரது சிறுகதைகள் வெளிவந்துள்ளன. ஐம்பது சிறுகதைகள் வரையே இவர் எழுதியுள்ளார்.
'என்னைச் சூழவும் வாழுகின்ற ஆயிரக்கணக்கான மக்கள் அறியாமையோடும் வறுமையோடும் வானம் பார்த்த பூமியை வைத்து மாரடிக்கிறார்கள். இந்த மக்களை மூலதனமாகக் கொண்டு ராஜதர்பார் நடத்துகின்ற அரசியல் புறோக்கர்கள், ஏழைகளைச் சுரண்டி வாழும் தனவந்தர்கள். இந்த முரண்பாடுகளின் கோட்டமே நான் வாழும் கிராமம். இந்த முரண்பாடுகளுக்கு மத்தியிலே அவலப்படும் மக்களுடைய மானுஷீகத்தைத் தரிசிப்பதுதான் எனது எழுத்துப்பணி' என எஸ்.எல்.எம்.ஹனீபா பிரகடனம் செய்வது போலவே அவரது எழுத்துகள் அமைந்துள்ளமை சொல்லத்தக்கதாகும்.

சமூகப் பிரக்ஞையுள்ள சத்தியக் கலைஞனுக்கு எழுத்தூழியமும் ஒரு புனித யுத்தமாக அமைந்து விடுகிறது என்று குறிப்பிடும் இவர் 'சன்மார்க்கம் கதை வெளிவந்தவேளை ஹனிபாட கையெ முறிச்சுப் போடணும் என்று சொம்பினார்களாம்' என்று எழுதியிருக்கிறார்.
1992இல் இவரது 15 சிறுகதைகள் மக்கத்துச் சால்வை என்ற தலைப்பில் வெளியானது. இவரது மக்கத்துச் சால்வை சிறுகதையே இவரைப் பலரும் அறிய வைத்த கதை. கிராமத்தில் பெருநாள் காலத்தில் நிகழும் சிலம்பாட்டத்தை மையப்படுத்திய இக்கதை மனிதர்களின் கௌரவம், வெல்லும் ஆசை என்பவற்றுக்கு அப்பால் அன்பின் வலிமையை உள்ளார்ந்து பேசுகின்றது. இக்கதை இலங்கை



## முன்றில் 15

அரசினர் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு தரம் -11 பாடப் புத்தகத்தில் இடம்பெற்றிருந்தது. அதேபோல மருமக்கள் தாயம், வேட்டைக் கதைகளும் பேசப்பட்ட கதைகளாகும்.
மக்கத்துச் சால்வை தொகுப்பில் இடம்பெற்ற சில கதைகளையும் உள்ளடக்கி 24 சிறுகதைகள் அவளும் ஒரு பாற்கடல் என்ற தலைப்பில் காலச்சுவடு வெளியீடாக 2007இல் வெளிவந்தது. மக்கத்துச் சால்வை வாசகர் வட்டம் உருவாக்கப்பட்டு மக்கத்துச் சால்வை மண்ணும் மணமும் என்ற தலைப்பில் எஸ்.எல்.எம்.ஹனீபாவின் சிறப்பு மலர் ஒன்று 2021இல் வெளியிடப்பட்டுள்ளது. இந்தச் சிறப்பு மலரில் எம்.ஏ.நுஃமான், தெளிவத்தை யோசப், மல்லியப்பு சந்தி திலகர், ஜெயமோகன், எம்.கே.முருகானந்தன், கருணாகரன் உள்ளிட்ட 56 பேரின் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.
இவரெழுதிய 'என்டெ சீவியத்திலிருந்து பாகம் 1' என்ற தலைப்பிலான பத்திகளின் தொகுப்பு இவ்வாண்டு சென்னை புத்தகக் கண்காட்சியில் வெளியிடப்பட்டது.
அத்துடன் இவரது சிறந்த சிறுகதைகளான மக்கத்துச் சால்வை, மருமக்கள் தாயம் ஆகிய கதைகள் பேஜஸ் புத்தக நிலையத்தின் சிறுநூல் வரிசையில் ஒன்றாக வெளியிடப்பட்டுள்ளது.
இவரது மக்கத்துச் சால்வை தொகுதிக்கு 1992 இல் தமிழ்நாடு லில்லிதேவசிகாமணி விருதும், இலங்கை அரசின் சாகித்திய விருதும் வழங்கப்பட்டது. ஆளுநர் விருது(2000), கலாபூஷணம் விருது(2005), ஓட்டமாவடி பிரதேச செயலக கலாசாரப் பேரவை விருது, மட்டக்களப்பு மாவட்டக் கலாசாரப் பேரவை விருது என்பனவும் இவரது இலக்கிய சேவையைக் கௌரவித்து வழங்கப்பட்டுள்ளன.
கரிசல் காட்டுக்கு ஒரு கி.ராஜநாராயணன் என்றால் மட்டக்களப்புத் தமிழுக்கு எஸ்.எல்.எம். தான் என்று எம்.கே.முருகானந்தன் குறிப்பிடுவது போல மட்டக்களப்பு முஸ்லிம் பிரதேச பேச்சுவழக்கினை இவரது கதைகளில் அலாதியாகச் சுவைக்கலாம். இவரது கதைகளில் வரும் சொற்கள், சொலவடைகள் ஒரு வட்டாரச் சொல்லகராதியை உருவாக்குவதற்கான மூலமாகலாம். 77வயதில் முதுமையின் தளர்ச்சியை இடையிடையே வெளிக்காட்டினாலும் இளைஞனைப் போன்ற மனதுடன் இருக்கும் இவர் தனது அனுபவங்களை எழுத்தாக்கி ஈழத்து இலக்கியத்துக்கு புதிய ஒளி பாய்ச்ச வேண்டும். ■

# மெய்ப்படுகிறது கலாமின் கனவு!




○ ஆர் பிரகாஷ்

2020 ஆம் ஆண்டில் இந்தியா உலக வல்லரசாகவேண்டும் என்பது தான் இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவரும், இந்தியாவின் அணு விஞ்ஞானி என்று அழைக்கப்பட்டவருமான அப்துல் கலாமின் கனவாக இருந்தது. இந்தக் கனவையும் அதை நோக்கிய பயணத்தையும் 'உலக அரங்கில்' இந்தியா எவ்வளவுதூரம் நேர்த்தியாகப் பதித்திருக்கின்றது என்பதை இந்த வாரம் இடம்பெற்றிருக்கும் இரு சம்பவங்கள் கட்டியம் செய்திருக்கின்றன.
இந்தியாவில், பருவநிலை மாற்றத்தால் உணவுத் தட்டுப்பாடு ஏற்படலாம் என்று முன்னறிவிக்கப்பட்டதையடுத்து அந்தத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக 'பாஸ்மதி அல்லாத அரிசியின்' ஏற்றுமதிக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. எரிவாயுவுக்கு எவ்வாறு ரஷ்யாவோ, கச்சா எண்ணெய்க்கு எவ்வாறு சவூதியோ, தொழில்நுட்பத்துக்கு எவ்வாறு ஜப்பானோ அவ்வாறுதான் அரிசிக்கு இந்தியா.
உலகின் 40 வீதமான அரிசித் தேவையை தனிநாடாக நிறைவேற்றி வருகின்றது இந்தியா. 140 நாடுகள் இந்தியாவிடம் இருந்து அரிசியை இறக்குமதி செய்கின்றன. இவ்வாறானதொரு நிலையில், அரிசி ஏற்றுமதிக்குத் தடை விதித்து இந்தியா விடுத்துள்ள அறிவிப்பு உலகின் உணவு இயங்கு நிலைக்கு விழுந்த ஒரு சம்மட்டி அடியே. இதையடுத்து உலக சுகாதார ஸ்தாபனம், ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட பல அமைப்புகள் இந்தத் தடையுத்தரவை இந்தியா மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கோரியிருக்கின்றன.
மறுபுறம் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இந்திய அரிசியைக் கொள்வனவு செய்து பதுக்குவதற்காக அங்காடிகளில் 'வெள்ளையர்கள்' அலைமோதிக் கொண்டிருக்கின்றனர். ஆக, உலக உணவு ஒழுங்குநிலையில் தன்னை மிகப்பலமாகவே நிலைநிறுத்தியிருக்கின்றது இந்தியா. தடை அறிவிப்பின் பின்னரான இந்தப் பதற்றநிலை இந்தியாவின் உணவுற்பத்திப் பலத்தையும், உணவுச் சமநிலையில் இந்தியாவின் வகிபங்கையும்தான் உணர்த்துகின்றன.
சரி அதென்ன மற்றைய விடயம்? இந்த விவகாரம் ரஷ்ய - உக்ரைன் போருடன் நெருங்கித் தொடர்புறுகின்றது. நேட்டோவில் இணைவதற்கு உக்ரைன் மேற்கொண்ட முயற்கிகளுக்கு எதிராகப் போர் அறிவிப்புச் செய்தது ரஷ்யா. ரஷ்யாவிடம் சரணடையாமல் கடந்த ஓர் ஆண்டுக்கும் அதிகமாக உக்ரைன் ஈடுகொடுத்துப் போரிடுகின்றது. இதுவரைகாலமும் இரண்டாம் தலைமுறை ஆயுதங்களை வைத்து நகர்ந்துகொண்டிருந்த போர் இப்போது 'நவீன ஆயுதங்களை' மையப்படுத்தியதாக மாறியிருக்கின்றது. உக்ரைனுக்கு எதிராக வான் தாக்குதல்களை ரஷ்யா தீவிரமாக நடத்தி வருகின்றது.
'தாட்' என்று சொல்லப்படும் ஏவுகணைத் தடுப்புச் சாதனங்கள் உக்ரைனில் ரஷ்ய ஏவுகணைகளை தன்னியக்க முறையில் அழிப்பதற்காக நிறுத்தப்பட்டுள்ளன. தினமும் பலநூறு ரஷ்ய ஏவுகணைகள் அமெரிக்காவும் மேற்கத்திய நாடுகளும் உக்ரைனுக்கு வழங்கிய இந்த அதி நவீன 'தாட்' அமைப்புகளால் சுக்குநூறாக்கப்படுகின்றன. ஆனால் குறிப்பிட்ட ஒரேயொரு வகை ஏவுகணைகளில் வெறும் ஒன்றைக்கூட இந்த 'தாட்' அமைப்புகளால் வீழ்த்த முடியவில்லை. அந்த ஏவுகணைதான் இந்திய - ரஷ்ய கூட்டுத் தயாரிப்பான 'பிரமோஸ்' ஏவுகணைகள்.
'மணிக்கு 3 ஆயிரம் கிலோமீற்றருக்கும் அதிகமான வேகத்தில் பிரமோஸ் பயணிக்கின்றது. அவற்றை எம்மிடமுள்ள நவீன 'தாட்' அமைப்புகளால் ஈடுகொடுத்து எதிர்கொண்டழிக்க முடியவில்லை' என்று அப்பட்டமாக ஏற்றிருக்கின்றது உக்ரைன் இராணுவம்.
உக்ரைன் இராணுவம் இவ்வாறு தெரிவித்த இரண்டே நாள்களில், 'இதென்ன பிரமாதம். இதைவிட ஸ்பெசலா ஒண்டு இருக்கு' என்ற வடிவேலுவின் நகைச்சுவையைப்போல் 'பிரமோஸ் ஹைப்பர்சொனிக்' ஏவுகணை குறித்தான அறிவிப்பை விடுத்திருக்கின்றது இந்தியா. இந்த 'பிரமோஸ் ஹைப்பர்சொனிக்' ஏவுகணைகள் மணிக்கு 9 ஆயிரம் கிலோமீற்றர் வேகத்தில் (பிரமோஸ் ஏவுகணையை விட மூன்று மடங்கு வேகம்) பயணிக்கவல்லவை என்பதுடன் ஆயிரத்து 500 கிலோமீற்றர் வரையில் பயணிக்கும் என்றும் இந்திய இராணுவம் தெரிவித்திருக்கின்றது.
உக்ரைனுக்கு தலைவலியாகவுள்ள இந்தியத் தயாரிப்பான பிரமோஸ் ஏவுகணைகள் எப்போது ரஷ்யாவிடம் இருப்பை இழக்கும் என்ற எதிர்பார்ப்புத்தான் உக்ரைனிடம் தற்போது நிறைந்திருக்கின்றது. ரஷ்யாவிடம் 470 பிரமோஸ் ஏவுகணைகள் இருந்த நிலையில் அவற்றில் 123 ஏவுகணைகள் தற்போது பயன்படுத்தப்பட்டுவிட்டன. மிகுதியைத் தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்துக்காக பத்திரப்படுத்தியுள்ளது ரஷ்யா. ஆக, உலகின் உணவுப் பகிர்வை மட்டுமல்லாமல், ஆயுதப் பலத்தையும் தற்போது இந்தியா தீர்மானிக்க ஆரம்பித்துள்ளது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏட்டுசுரைக்காய் உதவுமா?

○ குருமன்காட்டாள் வன்னிகா

அண்மைக்காலமாக மருத்துவமனைகளில் பல்வேறு நோய் நிலைமைகளுடன் அனுமதிக்கப்பட்ட இளம் வயதினர் சிகிச்சையின்போது இறந்துள்ளனர். சிகிச்சைக்காக வழங்கப்பட்ட மருந்துகளினால் ஏற்பட்ட இறப்புகளாகவே இறந்தவர்களின் உறவுகள் மத்தியிலிருந்தும் சாதாரண மக்கள் மத்தியிலிருந்தும் சமூக ஊடகங்கள் மத்தியிலிருந்தும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. அத்துடன் "மருந்து வியாபார மாபியாக்கள்" சுகாதாரத் துறையின் மருந்துக் கொள்வனவில் ஆதிக்கம் செலுத்துவதாகவும் எதிர்க்கட்சிகள் குரல் எழுப்புகின்றன.

இதுபற்றி சுகாதாரத் துறைக்குப் "பொறுப்பான" ஒருவர் இப்படிக் கூறினாராம்.


"அபிவிருத்தி அடைந்த ஐரோப்பிய நாடுகளிலும் ஆஸ்பத்திரிகளில் நோயாளிகள் சாகிறார்கள்தான். ஆஸ்பத்திரிகுச் செல்லும் எல்லோரும் குணமடைந்து உயிரோடு வீடு செல்வதில்லை. அதனால்தான் மலர்ச்சாலைகள் ஆஸ்பத்திரிகளுக்கு அருகில் நிறுவப்பட்டுள்ளன."

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, உறவுகளுக்கு, நம்பிக்கையிழந்த மக்களுக்கு இந்தக்கதை ஆறுதல் தருமா என்பதே விளங்காத ஒருவராகவுள்ளார் அவர். அவரே சுகாதாரத்துறைக்கு பொறுப்பாகவுள்ளார். சுகாதாரத்துறையின் உயர்மட்டத்தில் அண்மைக்காலமாக பெரும் ஊழல் மோசடிகள் இடம்பெறுவதாக எதிர்க்கட்சிகள் விமர்சிக்கின்றன.

அரச அதிகாரிகள் மத்தியில் பல்கிப்பெருகியுள்ள ஊழல், மோசடிகள், போதைப்பொருள் மாபியாக்களின் அராஜகம் மருந்து வியாபார மாபியாக்களின் கோரம் ஆகியன நாட்டின் மனிதவளத்தையும் பௌதீக வளத்தையும் அழிக்கும் நிலைமை தொடருமாயின் பொருளாதார மீட்சியும் அபிவிருத்தியும் சாத்தியப்படாதவையாகும். நிர்வாகரீதியாக ஊழல் மோசடிப் பேர்வழிகளாகவே காலம் பூராவும் பழக்கப்பட்ட அரச அதிகாரிகள் குழுமம் "திடீர் புனிதர்களாக" மாறி நாட்டை வங்குரோத்திலிருந்து மீட்டுவிடுவார்கள் என்று ஒரு போதும் நம்பக்கூடாது. குட்டை நாயில் இரத்தம் உறிஞ்சும் உண்ணிகள் வர்க்கமே அவர்கள். போரினால், புயலினால், சுனாமியால், கொரோனாவினால் பாதிக்கப்பட்டு "வெந்து நொந்த" மக்களுக்கு உணவு விநியோகம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை வழங்கியபோதே ஊழல் மோசடியில் ஈடுபட்டவர்களும் உள்ளனர். போரிலிருந்து தப்பி, உயிரைச் சுமந்து வெறும் நடைப் பிணங்களாக நலன்புரி முகாம்களுக்குள் அடைக்கப்பட்டிருந்த மக்களுக்கு முட்டையும் பாலும் வழங்கிய கதையையும் அப்போது கேள்விப்பட்டோம்.

ஐ.எம்.எப், உலக வங்கி, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் வலியுறுத்தலின் பேரில் ஊழல் ஒழிப்புப் பற்றி அரசாங்கம் கவனம் செலுத்துகிறது. அதனால் சாத்தான்களும் வேதம் ஓதுகின்றன !

ஊழலுக்கு எதிரான சட்டமூலம் 193 திருத்தங்களுடன் 19.07.2023 புதன்கிழமை நாடாளுமன்றில் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது. இதன்படி இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மேலும் சுயாதீனமாக செயற்படத்தக்க சட்ட ஏற்பாடுகள் உள்ளன. புதிய ஊழல் ஒழிப்புச் சட்டத்தின்படி சொத்துகள் மற்றும் பொறுப்புகள் பட்டியல் சமர்ப்பிக்கவேண்டியவர்கள் பட்டியலில் ஜனாதிபதி, ஆளுநர்கள், தூதுவர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், நிறைவேற்று அதிகாரிகள் உட்பட பல்வேறு தரப்பினரும் உள்ளடங்குகின்றனர். எதுவென்றாலும் ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவினால்தானே.....!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org